ஓம் பரப்பிரம்மணே நம:

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்
ஆநந்தகரமான அநுபவ வினோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) 


| கமலம்-8. | சென்னை ஸ்ரீமுக௵ ஆவணி௴ 1௳ | இதழ் 89. |
|---|---|---|
| Vol. 8. | 1933-ம்௵ ஆகஸ்டு௴ 16௳ | No 89. |


## ஆநந்த தரிசனம்



"நாராயண வென்றலென்ன நாவிலொரு முள் நாடியதோ மனஸே" என்று ஒரு பக்தர் பாடியுள்ளார். நாராயணனே நமது தெய்வம். நாம் உபாஸிக்கவேண்டிய மூர்த்தி லக்ஷ்மீ நாராயணனே. நாராயண ஸங்கீர்த்தனத்தால் ஸகல துக்கங்களும் நீங்கி ஸுக முண்டாகின்றது. நாரதர் திரிலோகங்களிலும் ஸதா ஸஞ்சரிக்கும்போது நாராயண ஸங்கீர்த்தனத்தையே வீணையில் வாசித்து ஆநந்த மடைகிறார். ஸந்யாஸிகள் ஆத்மாநந்தத்தை யடைய வேண்டி ஸதா நாராயண ஸ்மரணையே செய்து கொண்டிருக்கிறார்கள். மரணத்தறுவாயில் இப்போதும் ஆரியர்களெல்லாம் இறந்து போகிறவனின் செவியிற் படும்படி நாராயண நாராயண வென்கிறார்கள். பிராணன் பிரியும் தருணத்தில் நெஞ்சடைத்து நினைவழிந்துபோகும் வேளையில் பிறரை நாராயண, நாராயணவென்று உச்சரிக்கும்படி சைகை காட்டுவதிலும், திடகாத்திரனாயிருக்கும்போது மனோத்ஸாகத்துடன் பகவானுடைய நாமத்தைப் பன்முறையும் ஸ்மரிப்பது சிலாக்கிய மன்றோ? கடலில் விழுந்தவன் தெப்பக் கட்டையை விட்டு விட்டால் ஜலத்தில் அமிழ்ந்து போவதுபோல், ஸம்ஸார மென்னும் ஸமுத்திரத்தில் விழுந்த மனுஷ்யன் நாராயண ஸ்மரணையாகிய தெப்பக்கட்டையை விட்டு விட்டால் அந்தோ! பிறவிக் கடலிலேயே அழுந்தித் துன்பமடைவான். ஆதலின், பிராணிகள் கடைத்தேறுவதற்குப் பேருதவியா யிருக்கும் நாராயண ஸ்மரணையை நமது துக்க நிவர்த்தியின் பொருட்டும், ஸுகப் பிராப்திக்காகவும் நாம் எப்போதும் செய்யக்கடவோம். நாராயண மூர்த்தியின் தியானம் ஸ்ரீ கிருஷ்ணாவதார காலமாகிய இந்த ஆவணிமாதத்தில் ஸர்வோத்தமமானது.

ஃ

"கோபிகைகளின் அன்பு" பிரேமையின் மூலமாகவே பகவானை யடையக்கூடுமென்று உலகுக்கு விளக்கிக் காட்டினவர்கள் கோபிகாரமணிகளேயாவர். பத்து விதங்களாகப் பக்திசெய்து பரமாத்மாவை யடைந்தவர்களில் கோபிகைகள் அனுஷ்டித்த கிருஷ்ணப் பிரேமை எனும் பக்தியே சிரேஷ்டதரமாயுள்ளது. (1) சிரவண பக்தியைப் பரீக்ஷித்து வேந்தன் கைக்கொண்டு முக்தியை எய்தினன். (2) கீர்த்தன பக்தியால் இறைவனை யறிந்தவர் சுகர் ஆவர். (3) ஸ்மரண பக்தியால் தூணிலும் துரும்பிலும் பகவான் உள்ளாரென்று காட்டியவர் பிரகலாதர். (4) சேவன பக்தி ஸ்ரீ லக்ஷ்மீதேவியினுடையதாகும். (5) பிருதுராஜன் பூஜன பக்தியால் பிறவிப் பிணியை வென்றார். (6) அக்குரூரர் வந்தன பக்தி செய்து சதுர் புஜங்களுடன் பரமாத்மா தம் முன்பு தோன்றச் செய்து வணங்கினர். (7) தாசத்துவ பக்தியால் சிரேயஸ்கரமான நிலையை ஹனுமார் எய்தினர். (8) அர்ச்சுனன் சக்ய பக்தியைச் செய்து பகவானைத் தனக்கு ரதசாரதியாகக் கொண்டான். (9) பலிச் சக்கரவர்த்தி ஆத்ம நிவேதன பக்தியைப் புரிந்து பகவானையே தமது வாயிற்காப்போனாக்கி விட்டார். (10) பிரேம பக்தியைப் புரிந்து பகவானையே யாவுமாகக் கருதி உலகத்தை மறந்தவர்கள் கோபிகா ஸ்திரீகளாவர்.

ஃ

"ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி" ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் அவதார தினம் இந்த ஆவணி மாதம் 28-ம் தேதியாகும். அன்று பிராதக்காலத்தில் ஸ்நானம் செய்து எவ்வித ஆகாரமுமின்றி அன்று முழுதும் பகவத்தியானத்திலேயே சிந்தையைச் செலுத்தி, மாலையில் மற்றொரு தரம் நீராடி, இரவில் கிருஷ்ண பரமாத்மாவைப் பூசித்து நற்பதம் பெறவேண்டும். சிலர் இவ்விதமின்றிப் பல வகைப் பக்ஷணங்களையும் பானங்களையும் கொண்டு தமது வயிற்றை நன்கு நிரப்பி, பகல் முற்றும் ஸ்நானமின்றி அசுசியாகக் கிடந்து மாலையில் நீராடுவதே விரதமெனக் கருதுகின்றனர். இது அறியாமை. பகவான் சிறைக் கூடத்தில் அவதரித்து மனோ பக்குவமுள்ளவர்களுக்கு ஸ்தலத்தினுடைய உயர்வு தாழ்வு பேதங்களில்லை யென்பதை உணர்த்தினர். எதையும் கேட்கத் தகுந்த மனோநிடம் பெற்றவர்களுக்குப் பயங்கரமான யுத்தகளத்திலுங் கூட ஞானோபதேசம் பெறமுடியு மென்பதை, யுத்தரங்கத்தில் அர்ச்சுனனுக்குப் பகவத்கீதையை அருளிச் செய்து காட்டினர். மனதைப் பக்குவப்படுத்துவதற்குப் பிரேமையைப்போன்ற மருந்து வேறில்லை. அவ்விதப் பிரேமைகள் யாவற்றினும் ஸ்ரீ கிருஷ்ணப் பிரேமையே சிறந்தது. ஸ்ரீ ஜயந்தி விரதத்தை நாம் தகுந்த விதமாக அனுஷ்டித்து ஸ்ரீ கண்ணனது பிரேமையில் கலந்து மகிழக்கடவோம்.

ஃ

"இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பரேன் றெண்ணவோ திடமில்லையே" எனத் தாயுமானவர் பாடி யிருக்கிறார். மல பாண்டமாகிய சரீரம் அநித்யம். பிராணன் பிரிந்தால் சவம் என்னும் பெயர் உண்டாய் விடு

---

*பிறரது நெஞ்சத்தைப் புண்ணாக்கியவர்கள் அவர்களது செல்வத் திமிரால் நிமிர்ந்து நிற்கையில், அவர்களால் புண்பட்டவனே அவர்களுடைய செருக்கான வாழ்வு எத்தனை நாளைக்கு என்கிறான்.*

கிறது. பருத்த சரீரியான கும்பகர்ணனும், காம விகாரஞன ராவணனும், கொடியவனுன ஹிருண்யனும் பரந்தாமனுல் மாண்டனர். மகா பலசாலி களாகிய அவ்வரக்கர்கட்கு இன்ன நிமிஷத்தில் எமன் வருவனென்று தெரிய வில்லே. ஆகவே, சாமான்யர்களாகிய நமக்கு சரீரம் அழியுங்காலம் எப்படித் தெரியும்? நோய்களேயே மிருத்யுக்களென்னலாம். நோயில் இரண்டுவித முண்டு. ஒன்று சரீரத்தைப்பற்றியது. மற்ருென்று மனதைப்பற்றியது. சரீர நோயை மருந்தால் பரிகரிக்கலாம். மனுே வியாதிக்கு மருந்தில்லே. மனதுக்கு என் வியாதி யுண்டாகிறது? பொருமை முதலிய தீக்குணங்களே காரணம். அயலாருக்குத் தீங்கிழைப்பதிலேயே திருஷ்டி பாய்கிறது. அதற் காக வேண்டிய பிரயத்நங்கள் செய்து அவை பலியாமற் போவதால் மனம் வியாதியை யடைகிறது. ஆதலின், புத்திசாலிகள் பகவத் மார்க்கத்தில் தங்கள் கவனத்தை வைத்து, பிறர் விஷயங்களில் தலேயிட்டுக் கொண்டவதிப் படாமல் ஸ்வஸ்த சித்தர்களா யிருக்கக்கடவர்.

ஃ

"ஸகோதரத்துவம்" ஸகோதரத்துவ சிந்தை ஜனிப்பதற்கு ஸமரச ஞானம் வேண்டும். தங்களின் மதத்தைப்போலவே தங்களின் தேச ஸகோ தரர்களது மதத்தையும் கௌரவிக்கவேண்டும். ஸதாகாலமும் பிறரது மதங் களின் தவறுகளேயே பேசுவோராகி, மேலுக்கு ஸகோதரத்துவம் பாராட்டுவ தெனில், அது அறியாமையும் தவறு வழியுமேயாகும். தாங்கள் பிறர் மதத் தில் குற்றங்கள் கண்டுபிடிப்பதுபோன்று, தங்கள் மதத்திலும் மற்றவரால் எத்துணேயோ பிழைகளும் பொருத்தமற்ற விஷயங்களும் விசாரிக்கப்பட் டுள்ளன வென்பதை மறந்துவிடுகின்றனர். ஒரு மதத்தின் குணங்களே ஆராய் வதற்கு அந்த மதத்திலேயே சர்ப்பவாஸம் செய்திருந்தாலன்றி உத்தம நோக் குடன் மத சந்தேகங்களேப் பரிசீலனே செய்து தக்க சமாதானங்களேக் கண்டு பிடிக்கும் திறமையும், சூக்ஷ்ம திருஷ்டியும், பக்குவமனதும் தோன்ருது. இது எதுபோலெனில், ஒரு நங்கை நிர்வாணமாகக் கிடந்தபோதிலுங்கூட அங்கு காமசிந்தனேகள் ஜனிக்காமலே இரக்கத்துடன் ஒரு வஸ்திரத்தால் அவளது தேகத்தை மூடிவிட்டு, அவளுக்கு அருகே நிஷ்களங்க ஹிருதயத்தோடு சய னித்து உறங்குவதற்கு அந்த நங்கையோடு ஒரு தாயின் வயிற்றில் பங்கு கொண்டு கர்ப்பவாசம் செய்திருந்தாலன்றி முடியாதென்பது போலவாகும். அதாவது, அப்பெண் தன்னுடன் பிறந்தவளாக இருந்தால்தான் வேறுவித தீயசிந்தனேகள் தோற்ருதிருக்குமென்றபடி. தங்கள் மதத்தினருள் மூட பக் தியும் அகங்கார அஞ்ஞானமும் விசேஷமாய் நிறைந்திருப்பினும், அதை நிவர்த்திசெய்ய அவகாசமும் சிரத்தையுமின்றிப் பிறமதத்தினர்களின் மூட

---

## என் தாய்.

நெற்றி வெயர்வை நிலத்தில் விழந்தோட நிதஞ்
சுற்றிவழி பாடுசெய்தும் சுகமறியோ மென்றயே!

கள்ளத்தனமும் கபடமுமல்லாம் சிறிதும்
உள்ளத்தில் வீர வொழுக்கமிலே யென்றயே!

வாழவிருப்ப மின்றி வாழ்க்கை பெறும் வழியைச்
சூழ விருப்பமின்றி சோம்புகின்றே மென்றயே! (ஒருமகன்.)

பக்தியை யோட்டிவிவெதாய்ப் பிரதாபம் பேசுவது விநோதமே. இதற்குக் காரணம், தங்களின் மதத்தினர்களைவிட மற்ற மதஸ்தர்களிடம் அவர்கட்கு அதிக விசுவாசமென்பதாலல்ல. தன் குற்றம் தனக்குத் தெரியாது, பிறர் குற்றம் தெரியும் என்னும் உண்மையே. மூடபக்தியும் அவிவேகமும் எந்த மதத்திலுமுண்டு. ஒரு மதத்தில் குறைவாயும், மற்றொரு மதத்தில் அதிகமா. யும் சிலருடைய தோஷ திருஷ்டிக்குத் தோற்றலாம். எதிலும் குணத்தைக் கிரகிப்பது கடமை. அப்பொழுதுதான் ஸகோதரத்துவமென்பது கைகூடும்.

ஃ

"மனஸ் ஸங்கல்பத்தால் ஒவ்வொரு காரியமும் ஆகிறது." மனம் அடங்கினாலன்றி அகங்காரம் அடங்காது. மனம் நல்வழியிலும் திரும்பும். கெடுதியிலும் செல்லும். கெடுதியிற் சென்றால் அதைத் திருப்புவது மிகவும் கஷ்டமாகும். கொடிய பாதகங்களைச் செய்ய மனம் அஞ்சாது. இதற்காகவே யன்றோ எப்போதும் எந்நேரத்திலும் இரவிலும் பகலிலும் பகவானை ஸ்மரிக்க வேண்டுமென்பது. மனிதர்களுக்கு வேண்டியது மனச்சாந்தம். மனதால் ஸ்மரிக்கப்பட்ட பிறகே ஒவ்வொரு காரியங்களும் வெளிப்படையாய் நடக்கின்றன. மனமே ஸகலத்துக்கும் காரணமாகும். ஸமஸ்த ஜீவகோடிகளுக்கும் மனம் என்கிறது உண்டு. பகவானுடைய கிருபா ஸமுத்திரத்துக்கு ஆதி அந்தங்களில்லை. மனமில்லாவிட்டால் உலகமில்லை. நாம் பார்க்கும் பொருள்கள், செய்யும் கருமங்கள், செல்லும் இடங்கள். கூறும் சொற்கள், கேட்கும் ஒலிகள் இன்னும் அநேக விஷயங்களெல்லாம் மனதாலுண்டானவைகளே. மூலகாரணம் மனமாயிற்று. அதன் பிறகு மற்றவைகளுண்டாயின. மனதிலுண்டாகிற விஷயங்களை கெடுதி, நலம் என்று பிரிப்பதற்காக அறிவு ஏற்பட்டது. மனம் ராஜாவாயும், அறிவு மந்திரியாயும் இச்சரீரமென்னும் இராஜ்யத்திற்கு ஏற்பட்டனர். பால்யத்தில் மனம் அற்ப சக்தியுடையதாக இருந்ததற்குக் காரணம் அறிவு விருத்தியாகாததேயாகும். புத்தியில்லாவிட்டால் மனதை நல்வழியில் நடத்துவது கஷ்டமாகும். வஞ்சனை, கொலை, பரஹிம்ஸை, பரநிந்தை. காமம், பொய்-மனதிலுண்டானவைகளே. அரை நாழிகைகூட மனம் ஓர் நிலையிலிராது. எண்ணி முடியாத விஷயங்கள் அம்மனதில் தோன்றி ஹிம்ஸிக்கும். எப்போதும் எதையாவது சிந்தனை செய்துகொண்டேயிருக்கும். ஒருமுறை இருந்ததுபோல் மறுமுறை இருக்கிறதில்லை. இதற்காகவே மனதை அடக்கி ஆளவேண்டுமென்று எல்லா சாஸ்திரங்களும் முறையிடுகின்றன.

ஃ

"காலையில் பகவத் பிரார்த்தனை" ஓ! மங்கள நிகேதனனே! உமது நாமம் வாழ்க. நீர் என்னை இரவில் பலவிதமான விபத்துகளினின்றும் காப்பாற்றினீர். எனது இளைப்பின்போது உமது ஹஸ்தத்தில் உடல் பொருள் ஆவிகளையும். மனைவி மக்களாகிய என் பரிவாரங்கள் முதலிய அனைத்தையும் அர்ப்பித்துவிட்டு நிச்சிந்தையான உள்ளத்துடன் கண்களிரண்டையும் மூடிக்கொண்டனன். பிறகு உமது பிரஸாதத்தினால் மரணத்திற் கொப்பாகிய நித்திரையினின்றும் இப்பொழுது விழித்துக் கொண்டனன்.

---

தன் முகத்தைக் காட்டாமலே மறைந்து திரியும் ஒருவன், தன் கபட குணத்தைத் தானே பிறாது மனதிற்படும்படி தெரிவிப்போனாகி விடுகிறான்.

லோகநாதா! நீர் என்னைத் துயிலும்போதிருந்த துணையற்ற ஸ்திதியில் நிராபத்தான நினது வக்ஷஸ்தலத்தில் இடம்தந்து அன்னையைப்போல் கண்பார்த்துக் காப்பாற்றினவாறே, இன்று பகலிலும் ஸம்ஸார கோலாஹலத்தினின்றென்னை ரக்ஷித்தருள்வீராக. யான் உமது கட்டளையின்படியே துயிலினின்றெழுந்து, உம்மால் அளிக்கப்பட்ட நூதன வாழ்வுகளையும், மனைவி மக்களாகிய பரிவாரங்களையும் கைப்பற்றி, உமது ஆக்ஞையாகிய ஸம்ஸார க்ஷேத்திரத்தில் பிரவேசிக்கின்றனன்.

துயிலும்போது யாவும் உமது கரமளித்து நிச்சிந்தையாயிருந்தவாறே, இப்போதெல்லாவற்றையும் உமது அஸ்தத்தில் அர்ப்பிதஞ் செய்கிறேன். என் உடலும் ஆவியும் உமது திருவடியின்கீழ் அர்ப்பணமாயிருக்கின்றது. இந்தப் பயங்கரமான ஸம்ஸாரத்தில் நீரே எனது தலைவன், நீரே எனது போதகன், எனக்கு யாவும் நீரே. என்னை உமது தருமவழியில் செல்லச் செய்வீராக. உமது மஹிமையை அடியேன் உட்கொள்ள உபதேசிப்பீராக.

பாலசூரியன் தேஜோமய ரூபத்துடன் உதயமாகி உமது மஹிமாப் பிரசாரம் செய்துகொண்டே ஆகாசவீதியி லெழுகிறதுபோலவும், பறவைக் கூட்டங்கள் விழித்தெழுந்து உத்ஸாகம் நிரம்பிய உள்ளங்களுடன் குரலெடுத்து உமது மஹிமா கீதங்களைப்பாடி வனங்களைப் பிரதிதுவனிக்கச் செய்கிறதுபோலவும், உமது திருவருளால் அடியேன் உடலும் உளமும் புதிய ஆசையாலும், புதிய ஊக்கத்தாலும், புதிய முயற்சியாலும் நிறையுமாறு செய்து, உமது புகழைக் கோஷிக்க எழும்புவேனாக. எனது இல்லம் உமது நாமத்தினுடைய நல்லோசையினால் எதிரொலி யிடுவதாக. எல்லாவற்றிற்கு முன்னர் அடியேனது பரிவாரத்தினிடையில் உமது பூஜை அனுஷ்டிக்கப்படுவதாக.

எங்கும் விளங்கும் எம்பெருமானே! எனது மனைவிமக்களாதிய யாவும் நீர் பிரீதி வைத்தருளிய செல்வமாம். நீர் அவர்களை சோக ஸந்தர்ப்பங்களினின்றும் விடுவித்து உமது கருணையுடன் பந்தப்படுத்துவீராக. என் இறைவ! விழிப்புற்ற எனது கண்களுக்கு முன் நின்று அருள் செய்வாய். நான் விழித்துக்கொண்டவுடனே யாவற்றிற்கும் முன்பாக உமது திருவுருவத்தை மனக்கண்களால் தரிசித்துப் படுக்கையினின்றும் எழுந்திருக்கிறேன். ஊக்கமளிக்கும் உமது திருமுக மலர்ச்சியைக் கண்டு பிரேமையினால் உள்ளங்குளிர்ந்து, இல்லற தருமத்தைக் காக்கும் நிமித்தம் இனி பிரவர்த்திக்கிறேன். எப்பொழுதும் எனக்குத் துணையிருந்து காத்தருள்வீராக. ஓம் தத்ஸத்.

---

ஆடவர்கள் அன்னியர்களிடம் சென்று வேலைசெய்து கஷ்டப்படுகிறவர்கள். அந்த எஜமானர்களோ ஒரு சிறு பிழையையும் பொறுக்கச் சகியாத கண்டிப்பில் இருக்கிறார்கள். பெண்களோ அன்னிய இடத்தில் வாழப் புகுந்தாலும், தங்களின் மாங்கல்யபலத்தால், தங்களின் பர்த்தாக்களுக்கே எஜமானிகளாகி அவர்களைப் பம்பரம்போல் ஆட்டிவைக்கிறார்கள். ஆடவர்களுக்கோ இந்த அதிர்ஷ்டமில்லை. அடுத்த ஜென்மத்திலேனும் சேலை கட்டுகிற அதிர்ஷ்ட முண்டாகட்டும் !!!

வீட்டில் யாதொரு வேலையுமின்றி உண்டு கிடப்பவர் செய்யும் காரியங்கள் அபாரமாகும். அவர்கள் இல்லாவிடில் வீட்டுச் சத்தம் வெளியிலேயே வராது.

அமிர்தகுணபோதினி
ஸ்ரீமுக வு ஆவணிமீ 1௨. ௨

# இயற்கை—செயற்கை வாசனை.

ஆண்டவன் படைப்பு அனைத்தும் இயற்கை என்பர். இயற்கை என்பதை சுபாவம், தகுதி, முறைமை, வழக்கம் என்று கூறலாம். இயற்கைக்குணம் என்பதற்கு சுபாவகுணம் என்றும், இயற்கை ஞானம் என்பதற்கு சுபாவ ஞானம் என்றும், இயற்கைப்பொருள் என்பதற்கு இயல்புப் பொருள் என்றும், இயற்கை யறிவு என்பதற்கு சுய வறிவு என்றும், இயற்கையுணர்வுடைமை என்பதற்குப் பூர்வ ஞானம் என்றும் பொருள்படும். இவ்வித இயற்கையினின்றும் பிரிந்து வேறுபட்டுக் காண்பது செயற்கையாகும். செயற்கை என்பது இடையே பேதப்பட்டுத் தோன்றும் மாறுதலான தன்மையாம். வெண்மையான வஸ்திர மொன்றை இயற்கை யென்றும், அதனில் சாயமேற்றி வேறு நிறமாக்குவதைச் செயற்கை யென்றும் கொள்ளலாம். இயற்கை தானாகவே தோன்றுவது. செயற்கை என்பது இடையில் செய்யப்படுவது; அல்லது சேர்வது. பெரும் பான்மையாக இயற்கைக்குணமே எங்கணும் வேரூன்றி உறுதி பெற்று நிற்குமெனினும், சிற்சில தருணங்களில் மத்தியில் சேருகிற செயற்கைக் குணமானது இயற்கைக் குணத்தை முற்றிலுமே மாற்றிவிடுவதும், செயற்கைக் குணமே விசேஷித்துத் தோன்றுவதும் உண்டு. இயற்கையாகவே வெண்ணிறமுள்ள வஸ்திரத்தை வர்ணமேற்றி சாயவஸ்திரமென்ற செயற்கைப்பொருள் ஆக்கினும், சீக்கிரத்தில் சாய மனைத்தும் போய்ப் பழயபடி வெண்மையான வஸ்திரமாகி விடுவதும் சாதாரணம். இதனால் இயற்கையான நிறமும் குணமுமே என்றும் நீடித்திருக்குமெனலாம். ஆயினும், இதனை நிச்சயமாகவும் சொல்வதற்கில்லை. சாயமேற்றிய வஸ்திரம் வெகு காலத்திற்குப் பிறகுங்கூட அதன் சாயம் போகாமல், பழய இயற்கையான வெண்ணிறத்தை யடையாமலே இருந்து விடுவதுமுண்டு. இவ்வித சந்தர்ப்பங்களில் சுபாவமான இயற்கைக் குணம் முற்றுமே கெட்டு, நடுவிற் சேர்ந்த செயற்கைக்குணமே என்றும் அழியாவாறு ஊன்றிவிடுகின்றது.

மாந்தரின் வாழ்க்கையும் இயற்கை—செயற்கை என்ற இரு வகை வாசனைகளின் வழிப்பட்டதாகவே யுளது. பூர்வ சம்பந்தத்தைப்பற்றியதாய் இயற்கை வாசனையும், இடையே நேர்ந்த சேர்க்கை சம்பந்தத்தைப்பற்றியதாய்ச் செயற்கை வாசனையும் தோன்றுகின்றன. இயற்கையிலேயே ஒருவன் நல்லொழுக்க முடையவனாயிருப்பின், எத்தகைய துன்மார்க்கருடன் பழகுங் காலத்தும் கிரமம் தப்பிப் போகாமல் தன்னைக் காத்துக்கொள்கிறான். தூர்த்த ஸ்திரீகளின் இடையே தன் தொழிலின் நிமித்தமாகச் சென்றுவர நேர்ந்தபோதும் அவன் நன்னெறி பிறழ்வதில்லை. மதுபானிகளின் மத்தியில் அவன் இருப்பினும் கெடுவதில்லை. மயக்க வஸ்துக்களை விற்பனை செய்வோனாக நிலவினும் அதில் சம்பந்தப் படுவதில்லை. பிறரைத் திருப்தி செய்வதற்காக லாகிரியான பானங்களைத் தானே வாங்கித் தரினும் தான் அதைத் தொடுவதில்லை. தன் பத்தினியையன்றி மற்ற நங்கையர் முகத்தை நோக்குவதில்லை. இவ்விதமே மற்ற உலக வியவகாரங்களிலும் சத்தியவந்தனாகவே நடந்து கொள்கிறான். ஒரு சமயம் பிறரது தூண்டுதலால் ஒழுக்கந்தவறியும், வியபிசாரப் பேயின் வாயிற் சிக்கியும் கெட வந்தபோதும், அடுத்த நிமிஷமே விழித்துக்கொண்டு தன் செயலுக்கு நாணி வருந்தி அது முதற்கொண்டு பரிசுத்தனாய் விடுகின்றான். இயற்கையிலேயே தர்ம குணமுள்ளவன் யாசகரைத் தேடிச்சென்று உதவுகின்றான். தன்னையடைந்தோரை ஆதரித்துக் காக்கின்றான். பிறரது நலத்திற்காகத் தன் கைப்பொருளிற் பெரும்பான்மையைச் செலவிடுகின்றான். இயற்கையிலேயே கடவுள் பக்தி மிகுந்தவன் ஆசார பூஜா நியமங்களைச் சரிவர அநுஷ்டித்து அதனையே தனது முதற் கடமையாகக் கொள்கின்றான். இயற்கையிலேயே இரக்கம் மிகுந்தவன் யுத்தரங்கத்தில் தான் தாகத்தால் வருந்தித் தவித்த காலத்தும், தனக்குக் கிடைத்த சிறிது ஜலத்தைத் தன்னைப்போல் வாடும் மற்றொருவனுக்குக் கொடுத்து விட்டு, அந்தத் தாகத்தாலேயே தவித்து மூர்ச்சை யாகிறான். இயற்கையிலேயே பெண்மணிகளிடத்துச் சகோதரத்தன்மை பூண்டவன் எத்தகைய ரூப சம்பன்னைகளான வநிதாமணிகளுடன் பழகிய போதிலும் மனத்தில் எவ்விதக் களங்கமுமின்றி தன் உடன் பிறப்பினோடு பாத்தியம் வைத்து நடப்பது போலவே நடந்து மகிழ்கின்றான். இயற்கையிலேயே சத்தியவந்தனாயுள்ளவன் எந்த நாணயத் தவறிலும் சிக்குவதில்லை. இயற்கையிலேயே கவியாகவோ, கிரந்த கர்த்தாவாகவோ வுள்ளவன் எத்துணைச் சொற்பமே வாசித்திருப்பினும் தனக்கு நிகரில்லையெனப் பிறர் கூறும்வாறு உயர்ந்து விடுகின்

---

ஒருவன் பிறரிடம் சிக்கிக்கொள்ளாத வரையில் அவன் கை வீசி உலாவலாம். எதிலும் விலகிப் பேசுவோரிடத்தில் தானும் விலகி விடுவதே கௌரவம். குறிப்பாக ஒருவருடைய குணம் தெரிந்த பிறகும், அவர் அத்தகைய கபடஸ்தரல்லவென்று எண்ணுவதிலும் வேறு மடமை இல்லை.

ருன். இயற்கையிலேயே வீரம், ஆண்மை, மானம், சுசீலம், கம்பீரம் முதலிய குணங்கள் அமையப் பெற்றவன் பிற்காலத்திலே அவற்றில் மிகச் சிறந்து ஒளிர்கின்ருன். பிறவிக் குணத்தினின்றே இயற்கைக் குணம் உதித்ததாதலின், நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணம் என்று முன்னோர் மொழிவதாயினர். இயற்கையிலேயே ஒருவனுக்கு எந்தெந்தத் தொழிலில் பிடிப்பும் பற்றுதலு மிருக்கின்றதோ, அந்தத் தொழிலிலேயே பிற்காலத்தில் அவன் பழகவும் முடிகின்றது. இடையே வேறு தொழிலைத் தான் செய்து வந்திருப்பினும் தனது இயற்கையின் வாசனையால் அந்தத் தொழில் தன் மனதுக்குப் பிடிக்காமல், தன் இயற்கைக்குப் பிரீதிகரமாயுள்ள வேறு தொழிலையே அவன் தொடங்கிக்கொள்ளும்படியாகிறது.

ஃ

மேற்கூறியவை யாவும் உத்தமர்களையே குறிப்பிடுகின்றன. இனி மத்திம—அதம குணமுள்ளோரையும் சற்று விசாரிப்போம். ஒருவன் வெளிக்கு எவ்வளவோ உத்தமகுணமுள்ளவனுகவும் பரோபகாரிபோன்றும் புலப்படுகின்ருன். அவனது அந்தரங்கமான இயற்கைக்குணமோ கபடமாயிருக்கின்றது. அந்தக் கபடத்திற்குத் தகுந்தபடி ரகசியத்தில் பொருமையும் சுயநலமும் கொண்டு பல தீங்குகளைச்செய்து எத்தனையோ பேர்களை வஞ்சித்து அலறவைத்து விடுகின்ருன். உயிருக்குயிரான நட்பினன்போல் வெளிக்குத் தோற்றினும் அந்தரங்கத்தில் அநுகூலசத்துருவாகவே நடக்கின்ருன். சத்தியவந்தனுகவும், மிக்க நாணயஸ்தனுகவும், சொன்னசொல் தவருதவனுகவும், மிக்க இரக்கப்பட்டவன் போலவும் வெளிக்கு நடிக்கும் யாவும் பாசாங்காகவே முடிகின்றன. அவனது சுயநலமே தலையெடுத்தோங்குகின்றது. கொடுமையே ஒருவனது இயற்கையாயின், எத்துணை உன்னத பதவிகளிலிருந்து கம்பீரமுள்ளவன்போல் தோற்றுவித்துக்கொள்ளினும், அவனது கொடுமைக்குணம் அநேகரைக் கண்ணீர் சிந்தும்படி செய்வித்து விடுகின்றது. விபசாரகுணமே ஒருவனது இயற்கையாயின், அவன் தன்னை எவ்வளவுதான் பரநாரீ ஸகோதரனுகக் காண்பித்துக்கொள்ளினும், அந்தரங்கத்தில் எத்தனையோ பெண்களின் கற்பைக் கெடுத்த சண்டாளனுய் விடுகிருன். இயற்கையிலேயே தீயகுணம் படைத்தவன் எத்தகைய கல்வி கேள்விகளைப் பெற்றிருப்பினும், அவை யாவும் அவனது பொல்லாங்கான தன்மைக்கே துணை செய்வனவாக முடிந்து விடுகின்றன. வெளிக்கு வெகு தர்மகுண முள்ளவன்போல் தோற்றுமொருவன், அந்தரங்கத்

---

துஷ்கிருத்தியங்களைப் புரிவோர் அவற்றிற்குத் துணையாக வராதவர்களின்மீது விரோதப்படுவது மட்டுமேல்ல; அவர்களே அந்தத் துஷ்கிருத்தியங்களைச் செய்தோராகவும் கதை கட்டிவிட்டுத் தாங்கள் நியாயம் பேசும் மேலோர்களாகவும் மாறி உயர்ந்த ஸ்தானத்தில் ஏறிக் கொள்கிருர்கள்.

தில் அந்தத் தர்ம குணத்தை இயற்கையாகப் பெற்றிரானாயின், எளியோன் தன்னை வந்து யாசித்த காலத்தில் அவனைத் தூஷித்துத் துரத்திவிட்டு, புகழ்காரணமாகப் பெரிய மனிதர்கள் தன்னை ஒரு தர்ம காரியத்தில் உதவி செய்யும்படி கோரியபோது, தான் மிக்க தயாளகுண முள்ளவன்போல் அந்தக் காரியத்திற்குத் தாராளமான நன்கொடைகளை யளித்துப் பெருமை பெற்றுக் கொள்கிறான். இவ்விதமே, இயற்கையான துர்க்குணம் எத்தனை நல்ல விஷயங்களில் வெளிக்குப் பழகியபோதிலுங்கூட அந்தரங்கத்தில் அது மாறுவதேயில்லை; உத்தம குணத்திற்கு ஒருநாளும் திரும்புவதுமில்லை.

ஃ

ஓர் அரசன் தனது நகரில் களவுகள் அதிகமாயிருப்பதற்கு வருந்தித் தானே அவற்றைக் கண்டுபிடிக்கும் பொருட்டு மாறுவேடத்துடன் இரவில் வெளிப்பட்டான். வெகுதூரம் சுற்றித் திரிந்து ஒரு பெருங் காட்டிற்கு வந்து அங்கோர் வீட்டினைக் கண்டு அதற்குள் நுழைந்தான். அங்கிருந்த பெண்ணொருத்தி அரசனின் அழகில் மயங்க, அரசனும் காமுற்றவனாகி அவளைக் கலந்து சுகித்துவிட்டு, அவளது கணவன் எங்கேயென்று வினவியபோது, தான் தேடிவந்த கள்வர்தலைவனின் மனைவியே அவளென்று கண்டுகொண்டு, தன்னைப்பற்றியும் அந்தரங்கமாக அவளுக்குத் தெரிவித்துவிட்டுத் தனது அரண்மனை வந்து சேர்ந்தான். அரசன் வெளிப்பட்ட அதே இரவில் கள்வர்தலைவனும் தான் அன்று ஒரு பெருங் களவினைச் செய்யவேண்டுமென்று துணிந்தவனாய், அரசனின் அரண்மனையிலேயே திருடுவதாய்த் தீர்மானித்து மதிற் சுவர்களின் மீது தாவி ஏறி அரசனின் பத்தினி உறங்கும் அறையைச் சேர்ந்து, அவளது விலைபெற்ற மூக்குத்தியைக் களவாடித் தனது சாமர்த்தியத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று கருதி, அவ்விதமே மூக்குத்தியையும் அபகரித்துக்கொண்டு, ஆயாஸ நித்திரையில் கிடந்த அரசபத்தினியின் கற்பையும் கெடுத்துவிட்டு வெளியேறிவிட்டான். கனத்த தூக்கத்திலிருந்த மகாராணி அரசனே தன்னுடன் இன்புறுவதாக நினைத்துக்கொண்டிருந்துவிட்டாள். மறுநாட் காலையில் மகாராணி தனது மூக்குத்தியைக் காணாது தேடிவிட்டு, அரசனை நீங்கள் இரவில் வந்தபோது கழற்றினீரோவென்று கேட்கையில், அரசன் தான் இரவில் நகரத்திலேயே இல்லையென்றும், கள்வர் தலைவனைக் கண்டுபிடிக்கும் பொருட்டுக் காட்டிற்குச் சென்றிருந்ததாயும் கூற, இதனை செவியுற்ற அரசபத்தினி ஐயோ! கற்பு குலைந்தோமே என்று

---

தாய் தன் மார்பிற் சாய்த்து பால் குடிக்கக் கற்றுக்கொடுத்தாள்; மனைவியோ அதே செய்கையை வேறு நினைவுடன் பற்றுதற்குக் கற்பித்தாள். இவ்விதமே உலகில் அவ்வப்போது ஒவ்வொன்றைக் கற்பிக்க ஒவ்வொருவர் தோன்றியவாறுள்ளார் போலும்!

தன்னுள் வாடிப் பெருமூச்சுவிட, அரசன் தன் அரண்மனையிலேயே களவு நடந்துவிட்டதை வெளியிடுவது தனக்கு அவமானமென்று களவு விஷயத்தை ரகசியமாக வைத்துக்கொள்ளுமாறு தன் பத்தினிக்குத் தெரிவித்துவிட்டான். தன் மனைவி கள்வனால் கற்பழிந்ததை மட்டும் அரசன் அறியவில்லை. கள்வனின் சேர்க்கை காரணமாக மகாராணி கர்ப்பவதியாய் ஒரு குமாரனைப் பெற்றாள். பிற்காலத்தில் அந்த இராஜகுமாரனின் குணங்களெல்லாம் கள்ளமும் கபடும் திருட்டுச் செயல்களுமாகவே இருக்கக் கண்டு அரசன் துயருற்று வருந்தினான். திருடனுக்குப் பிறந்தவன் திருட்டுப்புத்தி யுடையவனாகத்தான் இருப்பானென்றும், இயற்கையை மாற்றுவது முடியாதென்றும் அரசபத்தினிமட்டும் உணர்ந்தவளாக இருந்தாள். அங்கு காட்டில் அரசனோடு சுகித்த கள்வர் தலைவனின் மனைவியும் அன்றிருந்தே கர்ப்பிணியாகிப் பெற்ற பெண் குழந்தை கம்பீரமான உத்தம குணங்கள் பொருந்தியவளாய் உயர்ந்து விளங்கினாள். இதைக்கண்ட கள்வர் தலைவன் தன் குலத்திற்கான குணமில்லாமல் ஒரு இராஜ கன்னிகையின் சுபாவங்களைத் தனது புத்திரி கொண்டிருப்பதை நோக்கி வியப்புற்றான். அவனது மனைவி மட்டும் இதன் உண்மையை யறிந்துகொண்டாள். அரசனுக்கே தன் குமாரி பிறந்தவளாதலின் அந்த அரச வமிசத்திற்கான இயற்கைகளே அவளிடம் தோன்றுகின்றனவென்று அவளுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. அவளும் அந்த யதார்த்தத்தைத் தன் கணவனுக்கு வெளியிட முடியாதவளானாள். இயற்கையின் வித்து எவ்விதமோ அவ்விதமே செடியும் உருக்கொண்டு முளைக்கின்றது. அரசனின் மூலமாகக் கள்வர் தலைவனின் மனைவிக்குப் பிறந்த பெண் அரசனது இயற்கையான உத்தமகுணங்களைக் கொண்டவளாக, அவ்விதமே கள்வனின் மூலமாக அரசனது மனைவிக்குப் பிறந்த குமாரன் தந்தையினுடைய வித்தின் இயற்கையான களவுத்தன்மைகளைப்பொருத்து அதற்கேற்ற இழிகுணங்களுள்ளவனானான். இதை நம்முடன் பிறந்த ஸகோதரிகளின் விஷயத்திலும் விளக்கிக் காட்டலாம். நமது தங்கை தமக்கைகள் நமது உடன்பிறப்பாகி நம்மீது பாசமிக்கோராயிருப்பது உண்மையே. ஆனால், அந்தத் தங்கை தமக்கைகளுக்குப் பிறந்த மக்களும் அவ்விதமே நம்மிடத்துப் பாசமுடையோராக இருப்பரென்று உறுதி கூறுவதற்கில்லை. ஏனெனில், பெண் மண்ணுக்கு சமமாகவும், ஆடவன் விதைக்குச் சமமாகவும் இருப்பதில், அந்த மண்ணில் எந்தத் தினுசான விதை நடப்படுகிறதோ அதன் இயற்கைக்குத் தகுந்த விதமாகவே கருவும் கூடிக்கொண்டு அதற்கேற்ற குணங்களுடன் மக்க

---

சுய நலம் கருதிய ஒருவன் தன்னால் இடப்பட்ட வேலைகளைப் பிறர் உடனுக்குடன் செய்து தராவிடில், அதற்காகக் கனத்த கோபம்கொண்டு, அந்தக் கோபத்தாலேனும் பிறர் உட்பட்டு அவ்வேலைகளைச் செய்து முடித்துக் கொடுத்து விடுவரென எண்ணுகிறான்.

ளும் உதிக்கின்றனர். நமது ஸகோதரிகளின் குமாரர்களென்று நாம் கருதிப் பாசம் வைக்கப்போக, அவர்களோ தங்கள் தந்தையின் இயற்கையான குணத்தையே கொண்டவர்களாகி அதற்குத் தகுந்த விதமாக மாறுபடுகிறார்கள். அவர்களின் தந்தை நம்மை அன்னியர்களாக நினைத்தால், அவர்களும் நம்மை வேற்று மனிதர்களாக எண்ணிவிடுகிறார்கள். விதைக்கப்பட்ட வித்தின் இயற்கைக்கு ஏற்றவாறாகவே அதன் உற்பவமும் கூடிக்கொண்டு தோன்றுவதாகின்றன. இதனின்றும் இயற்கையின் வல்மையைத் தெளிவாக உணரலாம்.

ஃ

இனி, செயற்கையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இயற்கையில் உத்தம குணங்களே அமைந்திருந்தபோதிலும், சகவாச தோஷத்தால் ஏற்படும் செயற்கைக் குணங்கள் இயற்கையான நற்குணங்களை அடியோடு மாற்றிவிடுகின்றன. 'பன்றியுடன் கூடிய கன்றும் மலம் தின்னும்' என்ற பழமொழியினால் சேர்க்கை வாசனையானது எவ்வளவு தூரம் கெடுக்கக்கூடுமென்பது தெரியவரும். யோக்கியனாக இருப்பவன் தீயோருடைய சகவாசத்தால் கெட்டலைந்த சம்பவங்கள் அனந்தம். மதுபானம், விபசாரம் முதலிய ஒழுக்கக்கேடுகள் அதிற் பழக்கமான துராத்மாக்களின் கூட்டுறவினாலேயே தொடர்வனவாகும். சன்மார்க்கர்களா யிருந்த பலர் அதிர்ஷ்டவசமாகச் செல்வம் கூடிக்கொண்டதும், அந்தச் செருக்கில் பல தீய பழக்கங்களை மேற்கொண்டு, அதற்குத் தகுந்த துணைவர்களுடன் தோழமை பெற்று மாறிவிடுகின்றனர். இவ்வகையில் செயற்கையின் தோஷமானது இயற்கையின் நற்சுபாவத்தினைத் தலைக்காட்டாமலே கெடுத்துவிடுகின்றது. இதனைப் பின்வரும் உதாரணத்தால் அறியலாம்.

ஃ

தங்களின் ஊரில் கனத்த பஞ்சம் உண்டாகிவிட, அதனால் அவ்விடத்தைவிட்டுத் தங்களின் இரு குமாரர்களுடன் வெளியேறிய கணவனும் மனைவியும் ஒரு காட்டில் நித்திரை செய்துகொண்டிருந்தனர். கைக்குழந்தை தன் தாயின் மார்பகத்தைப் பற்றிக்கொண்டு பால் அருந்த முயன்றும் அங்கு பால் காணாது ஏங்கிக் கதற, இதை நோக்கிய ஆடவன் துயரம் தாங்காமல் தன்னால் இப்பரிதாபத்தைப் பார்க்க முடியாதென்று தன் மனைவியையும் மக்களையும் தெய்வமே காத்தருளட்டுமென்று கடவுளின் கருணைக்கு ஒப்புவித்துவிட்டுச் சென்றுவிட்டான். வெகு நேரத்திற்குப் பின் மனைவி

---

பிறர் எத்தனை உறவாயினும் ஒதுக்கப் படுவதே சாதாரணம். அவரவர்களுக்கு வேண்டியவர்களேதான் அனுபவிக்க முடிகிறது. இரண்டாவது மனைவி வந்த பிறகு முதல் மனைவியைச் சேர்ந்தோர் நெருங்கவோ, அனுபவிக்கவோ முடிகிறதில்லை.

கண் விழித்துத் தன் பர்த்தாவை எங்கனும் தேடியலைந்துப் பிரலாபிக்க, அவளது குரல்கேட்டு அவ்விடம் வந்த வழிப்பறி கள்வனொருவன் அவளையும் அவளது மக்களையும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று பசிதீர்த்து ஆதரித்தான். சில நாட்கள் பொறுத்து அப்பெண் புறப்பட நினைக்கையில், அவள் தன் குமாரர்களையும் அழைத்துச் செல்வாளெனக் கண்டுகொண்டு, அவளை மட்டும் வஞ்சகமாய் வெகுதூரம் வேடிக்கையாக இட்டுச் செல்வதுபோற் காண்பித்து ஒரு மலையடிவாரத்தில் தனியே விட்டு மறைந்துபோயினன். அப்பெண் தான் மக்களைப் பறிகொடுத்து வஞ்சிக்கப்பட்டுப் போனதை யுணர்ந்து அழுது சோர்ந்தவளாய்த் தனிவழியே செல்ல, இவளது கோலத்தைக்கண்ட ஒருவன் தந்திரமாக அவளுடன் பேசி அவளது பர்த்தா இருக்குமிடத்தைத் தெரிவிப்பதாகக் கூறி யழைத்துச் சென்று, வெளிநாடு செல்லும் கூலிகளில் ஒருத்தியாகப் பதிவு செய்து கப்பலில் ஏற்றியனுப்பிவிட, அந்நியதேசம் வந்து சேர்ந்த அப்பெண் அங்கே அடிமைக் கூலியாக வேலை செய்துவரும் நாளில், அதற்கு அடுத்த தோட்டத்தில் தெய்வச் செயலாகத் தன் பர்த்தாவைக் கண்டுபிடிக்கும்படியாகிக் கதறினள். பிரிந்து மீண்டும் ஒன்று சேர்ந்த கணவனும் மனைவியும் இன்புற்றனரெனினும், தம் மக்களுக்காக வாடிக்கிடந்தனர். பதின்மூன்று வருஷங்கள் வரை அவ்விடமே கழித்துத் தங்களின் ஒப்பந்தகாலம் தீர்ந்தபின்னர் கப்பல் ஏறித் தங்களின் நாட்டின் கரையைச் சேர்ந்து ஊருக்கும் வரும் வழியில் ஒரு காட்டினிடையே இரு கிராதகர்கள் தென்பட்டு அவ்விருவரையும் இரு மரங்களிற் பிணைத்து முட்கள் நிறைந்த கட்டைகளைக்கொண்டு முதுகில் நையப் புடைத்தனர். கட்டுண்டவர்களோ அடிகள் தாங்காது கதற, கிராதகர்களோ, தாங்கள் அடித்த அடிகளால் முதுகினின்றும் வெளிப்பட்ட இரத்தத்தைக் கண்டு, ஆ! எவ்வளவு சிவப்பான ரத்தம் என்று சந்தோஷிப்பவர்களாய்த் துள்ளிக் குதித்தனர். இத்தருணத்தில் அங்கு ஒருவன் வர, அவனே தன் மக்களை முன்பு அபகரித்தவனென்று அடையாளம் கண்டுகொண்ட அப்பெண் அவனை நோக்கி அலற, அவனும் இவளைத் தெரிந்துகொண்டு அந்தப் பேராபத்தினின்று பெண்ணையும் அவள் கணவனையும் விடுவித்தான். பிறகு அவனைத் தன் மக்கள் எங்கே யென்று அப்பெண் கேட்க, அவர்களைக் கட்டியடித்த சண்டாள வாலிபர்களே அவளது குமாரர்களென்று அவன் தெரிவிக்கவும், பெண்ணும் கணவனும் திகைப்பதாயினர். "ஐயோ! வழிபறித்துக் கொள்ளையிடும் மூர்க்கனிடம் என் மக்களை விட்டுப் போனதின் பலன் இதுவேயோ! அந்த மூர்க்கனைப் போலவே என் குமாரர்களும் இரக்கமற்ற சண்டாளராய்

---

ஏற்கெனவே மோசம்போன ஒருவன் தன்னை மோசம் செய்தவனின் மூலமாகச் சில காரியங்களை நடத்திக்கொள்ள வேண்டியிருக்கையில் அதிக ஜாக்கிரதைப்பட வேண்டியதாகிறது.

மாறி விட்டனரே!" என்று அப்பெண் கண்ணீர் விட்டு நெஞ்சம் புண்ணுனாள். ஏதுமறியாத பச்சைக் குழந்தைகள் உத்தம குணங்கள் நிறைந்த பெற்றோர்கட்கே பிறந்தவராயிருந்தும், இடையில் அவர்களை வளர்த்த வழிபறிப்போனின் மூர்க்க குணங்களே அவர்களுக்குப் படிந்து, அவனைப்போலவே சண்டாளர்களாய் முடிந்தனர். இங்கு மற்றொன்றையும் தெரிவிக்கிறோம். பம்பாய் கவர்னரவர்கள் அங்குள்ள குருடர் பள்ளிக்கூடங்களை 24-7-33-ல் பார்க்கச் சென்றபோது தார்தேவில் பயிற்சிபெறும் ஒரு குருட்டுப் பையனின் செய்தியும் தெரியவந்தது. அவனை ஒரு பெண் ஓநாய் எடுத்து வளர்த்து வந்ததாம். இவன் அதனிடமிருந்து இரண்டு வருஷங்களுக்கு முன்பு மீட்கப்பட்டான். இவனால் பேச முடியவில்லை. இவன் ஓநாயைப் போலவே குரைக்கின்றான். தற்பொழுதுதான் மனிதர்களைப்போல நடக்கக் கற்றுக்கொள்கிறான். இயற்கையிலேயே மனிதக்குழந்தையாகப் பிறந்துங்கூட, கொடிய ஓநாயிடம் வளர்ந்ததில் தீயசெயற்கைக் குணமே மேலிட்டுப் போயிற்று. எனவே, செயற்கையின் வலிமையையும் சாமானியமாகச் சொல்வதற்கில்லை. அதுவும் தன் வேகத்தைக் காட்டுகிறது. இயற்கையின் நல்லமைப்பை அடியுடன் மாற்றிவிடுகின்ற செயற்கையின் வலிமையினை இந்த சம்பவங்கள் ஒருவாறு விளக்கும். இதுபோலவே, துராத்மாக்களாக இயற்கையிலிருந்தோர் நல்லோரின் சகவாசங் காரணமாக உத்தமர்களாகவும் மாறிவிட்டிருக்கின்றனர். தாசியின் புத்திரியாகப் பிறந்தும், தான் கற்ற நூல்களின் விவேகத்தால் கற்பரசியாக விளங்க அவாவுற்று விபசார ஜீவனம் விடுத்துத் திருமணம் புரிந்து இல்வாழ்க்கையில் திரும்பிய ஸம்பவங்களுமுண்டு. இவ்விதமே, களவுத்தொழிலையே செய்து திரிந்தவன் முனிவரின் தரிசன விசேஷத்தால் சிறந்த ஞானியானதுமுண்டு.

ஃ

இங்ஙனமாக, மானிட வாழ்வில் சில இடத்து இயற்கையின் வலிமை ஓங்கியும், வேறு சில தருணங்களில் செயற்கையின் சக்தி அதிகப்பட்டும் தோன்றுகின்றன. ஆயினும், இயற்கையான குணங்களே பெரும்பான்மையும் அழியாமல் நிலைத்து நிற்கின்றனவென்றும், இடையிற் சேர்ந்த செயற்கையின் குணங்கள் பல சமயங்களில் தேய்ந்து ஒழிந்து விடுவதுங் கூடுமென்றும் துணிவதற்கு எத்தனையோ திருஷ்டாந்தங்களுள்ளன. ஆகவே, "இயற்கை செயற்கை இருவாசனையின் வயத்ததாம் மாந்தர் வாழ்க்கை" எனல் நன்கு பொருந்துவதை உற்றுணர்ந்து தெளிக.

---

ஒருவர் தனது குற்றத்தை எடுத்துக்காட்டிக் கோபித்து நிற்கையில், நமது பிழையை அறியாமல் அவரை எளனம் செய்தால் பின்னும் அவரது கோபம் அதிகமாகுமேயன்றிக் குறையாது.

# சத்தியமே அறிவின் வெளிச்சம்.

வழிகாட்டி மரம் போன்றவை கோயில், விக்கிரஹம், குருபடம், முதலியன. நீ வழிகாட்டி மரத்தையே உற்று நோக்கிக்கொண்டு நில்லாமல் அதன் உதவியால் நீ அடையவேண்டிய இடத்திற்குப் போக முயல்வதுபோல், கோயில் விக்கிரஹம், குரு முதலியவர்களைக் கண்டு அங்கேயே நின்றுவிட்டு ஏமாறாமல் மேலும் மேலும் உயர்ச்சிக்குத் தொடர்ந்து செல். அப்படிச் செல்லாவிடில் உன் வாழ்நாளின் உயர்ச்சியான நோக்கத்தை மறந்து போய், கோயிலுக்குச் சென்று ஸ்வாமியை வணங்கியதினாலேயே உன் கடமைகள் யாவும் தீர்ந்து போய்விட்டதாக எண்ணி ஏமாறிவிடுவாய். குரு நியாயமற்றதைச் செய்யச் சொன்னாலும் வழக்கத்துக்கு உட்பட்டுச் செய்து நீ கற்ற கல்வியின் அறிவை வீணாக்கி விடுவாய். நீ இவ்வுலகில் தேடவேண்டியது சத்தியமே. அது லேசானதல்ல. சத்தியத்தை நன்கு உணர்ந்தவர்க்கு அது அன்பு வடிவமாகவும், ஆசை வடிவமாகவும், தயான வடிவமாகவும், இன்ப வடிவமாகவும் தென்படும். சத்தியம் எல்லாவற்றினும் உயர்ந்தது. அதைக் காண்பதற்குக் கோயில் குரு முதலியவை முதலில் வழிகாட்டியாக மட்டுமே உதவும். ஆகையால் நீ குரு, கோயில், படம் முதலியவைகளில் உன்னுடைய மனதைச் செலுத்துவதோடு மட்டுமே நின்று, சத்தியத்தைக் காணாமலும் கைக்கொள்ளாமலும் போவாயானால் நீ மனிதனின் பூர்ண எல்லையைக் காணாமலே மூடக் கட்டுப்பாடுகளின் அடிச் சேற்றிலேயே தங்கிவிட்டதாகத் தான் பரிதாபத்துடன் சொல்ல வேண்டியிருக்கும்.

ஃ

2. ஞான மார்க்கத்தை அடைவதற்கு வெளிச்சடங்குகள் ஆரம்பத்தில் மட்டுமே தேவை. பிறகு இச்சடங்குகள் அவஸ்யமா—அநாவஸ்யமா என்பதை நீயே அறிந்துகொள்ள நேரிட்டு அவசியமற்றதை உதறி விடுவாய். முதலில் குரு உபதேசம் தேவையே: உன் குரு சொல்லுகிறபடி பிறகுங்கூடத் தவறானதிலும் நடந்துசெல்ல விருப்பம் கொள்வாயானால், அது உன் குறுகிய அறிவையே காட்டும். மேலும் நீ பக்குவமாகவில்லை என்பதையும் தெளிவுறுத்தும். குரு-கோயில் இவைகளிடத்தில் நீ பய பக்தியுடன் இருப்பதால் நன்மையே விளையுமெனினும், இடைக்காலத்தில் பரவிவிட்ட மூடக் கொள்கைகளையும் கைப்பற்றுவதால் நீ மோசமே போகிறாய். உன் இருதயம், மனம், மூளை—இவைகளுக்கு அப்பாற்பட்டது சத்தியவடிவம். அதுவே உனக்குத் துணைவன்; அதுவே, கடவுள். அதை ஆராய்வதே உன் வாழ்நாளின் நோக்கம். இது உன் நோக்கமாயின் நீ சத்தியப் பொருளை விரைவில் காண்பாய். கடவுளின் ஒப்பற்ற தரிசனத்தையும் நீ பெறுவாய். வடகலை தென்கலைச் சண்டைகள்

---

மறைத்துவைக்கும் எவ்வளவு ரகசிய சங்கதிகளையும், அதைப் பிறருக்கு வெளியிட்டுவிட இன்னொரு மனிதன் தயாராகக் காத்திருக்கிறான். பிறகு அவனே மிக்க வேண்டியவனாகவுமிருந்து வேலைகள் செய்கிறான் குலாவுகிறான்.

போன்ற மதப்போர்கள் இருளுக்கே கொண்டு செல்லுமன்றி சத்தியத்தின் வெளிச்சத்தை ஒருபோதும் காட்ட மாட்டா.

ஃ

3. நீ உன் வாழ்நாளில் எந்த நேரத்திலும் விடுதலை பெறலாம். நீ உன் ஆசிரியன், குரு, கோயில், விக்கிரஹம்—முதலியவைகளில் சக்தி முழுவதையும் செலுத்துவதுபோல் மூடக் கொள்கைகளிலும் செலுத்தி விடுவதால், உன் தூய அறிவை விருத்தி செய்துகொள்ள உனக்கு சந்தர்ப்பம் கிடைக்காமலே போய்விடுகிறது. உன் குருவும் உன்னைப்போன்ற ஒரு மனிதஸ்வரூபமே யானதால், அவரும் பல சமயங்களில் தவறிவிடக் கூடியவரென்பதையும் நினைத்துப்பார்க்க நீ மறந்து விடாதே. பிறமதத் துவேஷங்களிலே சிக்கி மயங்கி விடுவதால் உன் வாழ்க்கையின் முடிவை நீ மறந்து விடுகிறாய். குழந்தை நடக்கக் கற்றுக்கொண்ட பின் நடை வண்டி அதற்கு எதற்கு? அவ்விதமே ஞான மார்க்கத்தை அறிவதென்று அவ்வழியிலே உன் மனம் திரும்பிய பின்னர் மதத்தின் வெளிச்சண்டைகள் அவஸ்யமில்லையே. ஆதலின், அதை விட்டு விட்டு சத்தியத்தைக் காண்பதில் உன் அறிவைச் செலுத்து. எப்போதுமே உன் குருவையும், கோயில் குளங்களையும் நம்பி இருந்தால் போதாது. கோயில் குளங்களைவிட்டு ஆரண்யங்களுக்குச் சென்று பெரியோர்கள் இறைவனை ஏகாந்தமாக இருந்து வழிபடுவது ஏன் என்பதைச் சற்றே யோசித்துப் பார்.

ஃ

4. சத்தியம் என்பது ஒன்றே. ஆனால், அதைப் பல பெயர்களால் அழைக்கிறோம். உண்மையைக் காண்பதற்கு ஆண்—பெண் எவர்களும் முயற்சி செய்யலாம். அதற்கு வேண்டியவை களங்கமற்ற மனம்—அன்புடைய இருதயம்—இவைகளே. உனக்கு சத்தியத்தைக் காண இஷ்டமிராவிடில் ஒழுக்கமற்ற அநுஷ்டானங்களிலும், என் மதம் உயர்வு, உன் மதம் தாழ்வு என்ற வேற்றுமையிலும், மூடக் கட்டுப்பாடுகளைத் தொழும் அடிமைச் செய்கையிலும் ஈடுபடு. இவ்விதம் நீ கெட்டழிவாயானால் உன் பிறவிப் பிணியைத் தீர்த்துக் கொள்ள இந்த ஜென்மத்தில் முடியாது.

ஃ

5. உலகமே கடவுள் மயம். அன்பே கடவுள். அந்த உயரிய அன்பையும் அழகையும் நீ அறிவாயானால் சத்தியத்தைக் கண்டவனாவாய். நீ எப்போது பரிசுத்தமான அன்புகொள்ள ஆரம்பித்தாயோ, அப்போதே உனக்கு எல்லாப் பொருள்களும் அன்பு மயமாகத் தோற்றும். நல்லது—கெட்டது என்ற வித்தியாஸம் உனக்கு எதிர்படா. கொடிய விஷமும் அமிர்தமாகும். ஆனால், சாதாரண மனிதனுக்குரிய இழிகுணங்கள் ஒரு அணுப்பிரமாணமாவது உன்னிடம் இருக்குமானால், நீ அப்போது இவ்வுலக மனிதனாய்விடுகிறாய். அப்போதே யாவற்றையும் ஸமத்துவமாகப் பார்க்கும் உத்தம திருஷ்டி மறைந்து போய், வஸ்துக்களின் ஏற்றத் தாழ்ச்சிபேதம் உன் மனதிற் படும். பிறகு நீ அவிவேகச் சேற்றிலே அழுந்திக் கெடுவாய்.

ஃ

6. நீ ஒரு கூட்டத்திற்கோ—ஒருவனுக்கோ அடிமைப்பட்டு, அவன் சொல்லும் வண்ணம் நடவாதே. அவ்வாறு நடப்பின் உன் சுய அறிவை நீ இழந்தவனாவாய். ஆகையால், எதையும் நீயே உன்னில் தீர ஆலோசித்து வீண் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து முதலில் விடுதலை பெறு.

விடுதலை அடைந்தால் அறிவு விளக்க மாகும். கருமேகம் நீங்கியதும் சத்தியப்பொருளின் வழி உனக்குத் தெரியும். அதன் வழியே நட. சத்தியப்பொருளை விரைவில் காண்பாய். அப்போது சத்தியம் உன்னிடம் புகும். இப்படி தனித்து நடக்க முயல்வதில் நீ சுயகாரியப்புலி யாகமாட்டாய். அவ்விதம் எண்ணிக் குருக்களின் மாயவலையில் சிக்கிவிடாதே. கடவுள் பக்தி முக்கியமே தவிர, குருக்களின் சுயலாபத்திற்காக ஏற்பட்ட கட்டுப்பாடுகள் உனக்கு முக்கியமானதல்ல. சத்தியம் என்பது ஜலத்திற்கு சமானமாகும். கழகம்—சங்கம்—குரு—கோயில் இவைகள் அந்த சத்தியம் எனும் ஜலம் இருக்கிற பாண்டமாகும். கோயிலையோ குருவையோ வேண்டி அதில் மனதைச் செலுத்துவது அந்த ஜலமிருக்கும் பாண்டத்தை விரும்பியதாகும். நீ ஜலத்தையே அருந்தப் பக்குவப் படவேண்டும்—முயலவேண்டும்.

ஃ

7. வெளிச்சடங்குகளால் சத்திய மார்க்கத்தை யடையலாம் என்று நினைத்து அதற்கு உன் சக்தியை விரயப்படுத்துவது மூடத்தனமாகும். அவ்விதம் செய்வதால் அச்சடங்குகளில் தான் தத்துவம் இருப்பதாக நீ நினைத்து விடுகிறாய். அப்போது உண்மைப் பொருள் உனக்கு மறைந்துவிடுகிறது. வெளிச் சடங்குகள் மனதைப் பரிசுத்தம் செய்ய ஆதியில் ஏற்பட்டவை. இது இப்பொழுது குருக்கள் கூட்டத்தாருக்கு ஒரு பிழைப்பிற்கான வயிறு வளர்க்கும் சம்பாத்தியமாகி விட்டது. நீ இதில் அதிகம் ஊறி ஏமாறி விடாதே.

ஃ

8. கடவுளின் சாயலோடு நீ ஐக்கியப்படு. அந்தக் கடவுளின் சாயலைத் தான் மகாத்மா—சங்கரர்—இராமாநுஜர்—புத்தர் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. கடவுளுடன் கலப்பதென்றால் வெளிச் சடங்குகளையும், சில்லரை விசேடங்களையும் அதிகப்படுத்திக் கொள்வதல்ல. அவ்வாறு நீ நினைத்தால் நீ அடிமையே. அவைகளினின்றும் நீ விலகிக்கொள்ள முயலவேண்டும். இறைவனை உன் அகத்திலேயே நீ கண்டு கொண்டு, அந்த இறைவனின் ஒளியையே உலகமுற்றும் நீ காண்பதாகிப் பக்குவப்படுவதே இவ்வுலகினின்றும் நீ கொள்ளும் விடுதலையாகும். அங்ஙனம் விடுதலையடைவதே கடவுளோடும் ஐக்கியப்படுவதாகும். அதனையே பரம சாம்பிராஜ்ஜியமென்று ஞானிகள் துதித்துள்ளார். அறிகிறவன் எதிலிருந்தும் அறியலாம். எந்த அற்ப வஸ்துவிலிருந்தும் ஞான வெளிச்சம் பெறலாம். அது பூர்வ ஜன்ம பக்குவத்தைப் பொருத்ததாகும். முதலில் நீ சத்தியவந்தனாவதே எல்லாவற்றுள்ளும் முதன்மையான விடுதலையாகும். விடுதலை வாழ்வையே நீ தேடி யடையக்கடவாய்.

---

*தன்னைக் காதலித்துக் கெடுத்துவிட்ட ஒருவனைப் பிறகு தானும் விரும்பாமல் வேறொருவனை மணந்து வாழும் சமயம், அந்த முந்திய காதலன் தன் குடும்பத்தோடு உறவின் முறையில் தன் வீட்டுக்கு வந்தபோதும் அவனிடமோ, அவன் குடும்பத்தினரிடமோ பேசாது ஒதுங்கிவிட அவ்வளவு கடூர விநோத மனமாயிருக்குமாம். இப்பெண்ணும் ஒரு காலத்தில் நேசமாய்ப் பிரீதியுடன் குலாவியிருந்தவளே.*

# என் குள்ள உருவத்தின் கஷ்டம்



கடவுள் என்னை எதற்காகக் குள்ளமாகப் படைத்தாரோ? ஐயோ! அதனல் எவ்வளவு இன்னல்களுக்குள்ளாகிறேன் தெரியுமா? குள்ளமாய் இருந்து பருமனுய் இல்லாதிருந்தால் என் குள்ளம் மிகக் குறைந்தே தோற்றும் என்று நினைக்கிறீர்களா? நான் ஐந்தடி உயரமிருந்தால் சுற்றளவு மூன்று அடி இருக்கிறேன். அப்போது என்னை எல்லோரும் கத்திரிக்காய்க்குக் கால் முளைத்திருப்பதுபோல் நானிருக்கிறேன் என்று எளனம் செய்தால் அதற்காக நான் சண்டைக்குப் போவதா? சண்டைக்குப் போனல் பளார் என்று என் கன்னங்களின் திமிர் விடும்வரை தூகி தட்டி விடுகிருர்கள். நானென்னமோ பலசாலிதான். அப்படி அடித்து விட்டு ஓடினவர்களை என் பாரி சரீரத்துடன் எவ்வாறு பிடிக்க முடியும்? அவர்கள் ஓடாது அங்கேயே இருந்தாலும் என் கை அவர்கள் கன்னங்களுக்கு எட்டுகிறதா? ஏணி ஒன்று இல்லாவிட்டால் அவர்கள் கன்னங்களை நான் சாதாரணமாகத் தொடுவது பிரம்மப் பிரயத்தனமாகும். சரி, இந்த எளனத்தோடு விட்டு விடுகிருர்களா? இவ்வளவு பருத்திட நான் எந்தக் கடையில் அரிசி வாங்குகிறேனென்று விசாரிக்கிருர்கள். என் வயிறு அப்போது எப்படி எரியும் தெரியுமா?

ஃ

இப்படி மற்ருேர் என்னை எளனம் செய்வது போகட்டும்; எனக்கே என் உடம்பின் ஸ்திதியைப்பற்றிக் கேவலமான எண்ணந்தான். பாருங்கள், ஒரு தடவை நான் ஒரு பெயர் பெற்ற கோவில் உற்சவத்திற்குப் போயிருந்தேன். உற்வத்திற்குப் போய் சுவாமியைத் தரிசனம் செய்யாது நீங்கள் வந்ததுண்டா? சுவாமி காட்சி கொடுக்கையில், தீபாராதனை பண்ணுகையில், நான் எவ்வளவோ குதித்துத்தானும் பார்த்தேன். நானென்ன சிறு குழந்தையா? என்னை யாரையாவதுத் தூக்கிக் காட்டச் சொல்ல? என்னை யார்தான் தூக்க முன் வருவார்கள்? நான் காலைத் தூக்கித் தூக்கி சுவாமியைப் பார்க்க யத்தனித்துக்கொண்டு அவஸ்தைப்பட்டது போதும் போதும்.

ஃ

ஒரு பிரசங்கம் கேட்கலாம் போகலா மென்றிருக்கிறதா? பிரசங்கிகள் பிரசங்க மேடையில் எழுந்திருந்து பேசுவதைக்கூடப் பார்க்க முடியாமல் என்னை எதற்காகக் கடவுள் இப்பூவுலகத்தில் படைத்தாரோ? பிரசங்கிதான் மேடையில் எழுந்து பேசுகிருரே, நாமெல்லாம் உட்கார்ந்து கேட்கலாம், பின்னல் இருக்கும் சிறுவர்களுக்கும் குள்ளர்

அவன் தனது விரோதியென அறிந்தபின் அவனிடம் சேர நமது மனம் இசைவதில்லை. ஆனல், அவனே நம்மைச் சுற்றியபடி இருந்து நம்மிடம் பல்லிளித்து நல்லவனுக மயக்கி விட்டுப் பின்னும் நமது சங்கதிகளைக் கிரகித்து நமது தலைக்கே தீம்புவைக்க வருகிருன்.

களுக்கும் சௌகரியமாயிருக்கும் என்று அந்த ஆறடி உயர மனிதர்களுக்குத் தெரிகிறதா?

ஃ

ஒன்று இல்லாவிட்டால் இன்னொன்றில் சமர்த்தனு யிருப்பது உலக இயல்பு. அக்கடவுள் எனக்கு நீந்தச் சொல்லிக் கொடுத்தாரா? மீன்களுக்கும், தவளைகளுக்கும் இயல்பாகவே வந்து விடுகிறது. நமக்கும் அப்படியே யென்று நானும் எனக்கு நீந்தத் தெரியுமென்று தான் நினைத்துக்கொண்டு வந்தேன். ஒரு அவசர காரியமாக நான் ஒரு ஆற்றைக் கடக்க நேரிட்டது. என் சினேகிதன் என்னைப் போலவா இருக்கிறுன்? அவன் உயரம் அதிகம் தான். அவனையும் அழைத்துக்கொண்டு அவ்வாற்றைக் கடக்கப் புறப்பட்டேன். தண்ணீர் கொஞ்சமாகவே இருந்தது. நமக்கும் நீந்தத் தெரியுமென்று காட்ட சந்தர்ப்பமில்லையே யென்றிருக்கும் சமயத்தில் ஆற்றில் அப்போது தான் வெள்ளம் வரவேண்டுமோ? நானும் நீந்தல் வித்தைகள் காட்டிக்கொண்டே மறு கரைக்குப் போய் விடலாமென்று தண்ணீரில் இறங்க உத்தேசித்தேன். என் சினேகிதன் கழுத்திற்கே தண்ணீர் வந்தது. நானும் இறங்கி விட்டேன். என்னைத் தண்ணீர் முக்கி மூன்று வளையம் சுற்றினபிறகே அறிந்தேன். என் நீந்தல் வித்தையால் மேலே வந்தேன். அண்ணாந்து என் சினேகனை நோக்குவேன். மறுமுறை தாக சாந்திக்காகத் தண்ணீரின் அடிப்பக்கமிருக்கும் மண்ணைக் கவ்வுவேன். என் சினேகிதனிடம் நான் நன்ருய் நீந்துவேனெனச் சொல்லி யிருக்கிறேன். ஆதலால் அவன் மறு கரைக்குப் போகுமளவும் திரும்பிப் பார்க்கவே இல்லை. பின் அவன் என்னைப் பார்க்க, நான் அப்போது தான் வானுலகு என்னிடம் வரும்படி என் கைகளால் சைகைசெய்து கொண்டிருந்தேனும். என் சினேகன் மறுபடியும் ஆற்றில் இறங்கி என்னைப் பிரவாகத்தினின்றும் எடுத்திராவிட்டால் நான் இந்த வியாசம் எழுதுவதற்கு முன்வர முடியுமா?

ஃ

நானெதற்குக் கலியாணம் செய்து கொண்டேனே? என் மனைவி என்னைவிட ஏன் ஆறங்குலம் உயரமாயிருக்க வேண்டுமோ? குட்டையான பெண்கள் உலகிலேயே இல்லையா? என் தகப்பனுருக்கும் என் தாயாருக்கும் இது ஒரு வேடிக்கை போலிருக்கிறது! நானென்னமோ பிறருக்கு இனிமேல் குட்டையான பெண்களை விவாகம் செய்து கொள்ளத்தான் ஆலோசனை சொல்லுவேன். நாங்களிருவரும் பக்கத்தில் நின்ருல் அவளைத் தமக்கை யென்றும் என்னைத் தம்பி யென்று மல்லவோ கூறுகிருர்கள். "அவளைப் பார்த்து அக்கம் பக்கத்திலிருக்கும் சிறுமிகள் "அதோ குள்ள ஆம்படையான் வருகிருர்; நீ வீட்டிற்குப் போ. எணி போட்டுக்கொண்டு உன் கன்னங்களை ஒத்தடம் கொடுக்கப் போகிருர்" என்று ஏளனம் செய்கிருர்களாம். நான் எதைத்தான் பொறுப்பேன்? சிறுமிகள், பெரியோர், சினேகன் எல்லாருமா என்னை இவ்வாறு ஏளனம் செய்யவேண்டும்? அவயவங்கள் எவ்வித மிருந்தாலும் அதைச் சீர்திருத்தி விடலாமாம். குட்டையாயிருந்தால் உயரமாக ஆக எவனுவது சொல்லிக்கொடுக்கிறுனு? உங்களுக்கு ஏதாவது உயரமாவதற்கு வழி தெரிந்திருந்தால் சொல்லுங்கள்.

S. ஸ்ரீரங்கராஜு.

# தந்து ஏமாறிய ரூபாய் !

மனைவி :—‘அந்த ஊரிலிருந்து நாம் புறப்பட்ட போது அவ்வீட்டுக்காரரிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கி வந்தீர்களே! அதைத் திருப்பி யனுப்பி விட்டீர்களா ?’

கணவன் :—என்னத்துக்குத் திருப்பிக் கொடுக்கிறது ? நாம் அங்கு போனதற்கு என்ன உபசாரங்கள் அவர்கள் செய்து விட்டது? ஒரு மண்ணுங் காணோம் ! நம் வீட்டில் அந்த வீட்டுக்காரர் எத்தனையோ தடவை வயிறு வெடிக்கப் புசித்திருக்கும்போது இந்தப் பிச்சைக்கார ரூபாய்க்கு மட்டும் கணக்கு ஏற்பட்டு விட்டதோ ?

மனைவி :—உங்களின் திருப்பிக் கொடுக்கிற நாணயம் இந்த மூன்று ரூபாயிலிருந்தே அவர்களுக்கு விளங்கிப் போயிருக்கும். இன்னொரு தடவை அவர்களிடம் கேட்டால் ஒரு காலணாகூட நீங்கள் பெற முடியாது தான்.

கணவன் :—அப்படி யல்லடி, அந்த மூன்று ரூபாய் தந்தவரே இவ்வூருக்குச் சென்ற வாரம் வந்து விட்டார். நானும் வழியிலே கண்டு ரூபாயைத் திருப்பிக் கொடுப்பதாகச் சொன்னேன். அவர் அதற்கென்ன இப்போது என்று சொல்லி விட்டார். அதற்கு நான் அப்படியல்ல, எப்படியும் நீங்கள் வாங்கிக் கொள்ளத்தான் வேண்டுமென்று வார்த்தைகளை அளந்தேன்! அதற்கு அவர் பதில் பேசாமல் என்னிடம் மூன்று ரூபாயைத் தந்து குழந்தைத் தொட்டில் ஒன்று வாங்கி வருமாறு வேண்டினார். ரூபாய் வேண்டாம், நானே வாங்கி அவர் இறங்கியிருக்கிற வீட்டில் கொண்டு வந்து தருவதாகக் கூறி வந்து விட்டேன்.

மனைவி :—அப்படியே வாங்கிக் கொடுத்து விட்டீர்களாக்கும். அது தான் நாணயமுமாகும்.

கணவன் :—போடீ போ ! பணத்துக்கு எவ்வளவோ கஷ்டமாயிருக்கிற இந்த நாளிலே மூன்று ரூபாய் என்ன இலேசா? நான் அப்படி ஏமாறிக் கைப்பணம் செலவிட்டு வாங்கித் தருவதற்கு இளிச்சவாயனா ? அவர் இருக்கிற பக்கமே போகாதிருந்து விட்டேன்.

மனைவி :—அல்பமான மூன்று ரூபாய் சங்கதிக்கு இவ்வளவு பித்தலாட்டமா செய்யவேணும் ?

கணவன் :—இன்னும் கேளடி கதையை! முந்தா நாள் நீ வீட்டில் இல்லாதபோது அவரே நம் வீடு தேடி வந்து விட்டார். என்ன வாங்கியாயிற்று, இந்தா அதற்கு ரூபாய் என்று மூன்று ரூபாய்களைத் தர வந்தார். நான் அந்த மரத்தொட்டிலைச் செய்கிறவன் என் நண்பர் முத்து

---

ஒரு குமாஸ்தா தன் எஜமானனின் தவறுதலான காரியங்களுக்கெல்லாம் உடனின்று உதவி செய்து துணையாக இருந்தால் அப்போது அவன் நல்லவனவதுடன் சம்பளமும் உயருமாம்!

வுக்கு மிகவும் வேண்டியவ னென்றும், அந்த முத்துவின் மூலமாகவே இதுவரையில் பலருக்கும் வாங்கிக் கொடுத்திருப்பதாயும், ஆ ன தா ல் அதன் விலை விவரங்கள் தெரிந்த முத்துவின் மூலமாய் வாங்கினால் நல்ல வேலைப்பாடாக வுள்ளதாய்க் கிடைக்குமென்றும் நினைத்து முத்துவிடம் சொல்லி யிருக்கிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் முத்து வாங்கி வந்து விட்டாரா என்றார். முத்து போய்க் கேட்டதற்கு அந்தத் தொட்டிலைச் செய்யும் தச்சன் ஊருக்குப் போயிருப்பதாயும், நாளைக்குத் தான் வருவானென்றும், வந்த பிறகு வாங்கி வந்து தருவதாக முத்து புகன்றதாகப் பதில் தெரிவித்து, நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை கொண்டு வந்து தருவதாகக் கூறி அவரைப் பக்குவமாய் அனுப்பி விட்டேன்.

மனைவி :—அவ்விதமே நடந்தீர்களா?

கணவன் :—நானா நடக்கிறவன்? மூன்று ரூபாய் என்றால் நாற்பத்தெட்டு அணாக்களாச்சுதே. என் சமர்த்து யாருக்கு வரும்? செவ்வாய்க்கிழமை அவர் தங்கியிருக்கும் வீட்டுக்குத் துணிகரமாகவே சென்றேன். வாங்கி வந்தீர்களா என்றார். அதற்கு அந்த முத்து மறுபடி வரவேயில்லை. ஏமாற்றி விட்டார். எனக்கோ வாங்கி வழக்கமில்லை, என்னடா இப்படி ஏமாற்றி விட்டோமே என் று எண்ணி உங்களிடம் வராமலே இருந்து விடுவோமா என்று நினைத்தேன். ஆனாலும், நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைத்தாலும் சரி, நடந்த உண்மையைச் சொல்லி விடுவோமென்று புறப்பட்டு இப்போது வந்தேன். என்னை மன்னித்துக் கொள்ளவேணும் என்றேன்.

மனைவி :—அதற்கு அவர் என்ன சொன்னார்?

கணவன் :—நான்தான் சரியாகச் சொக்கு பொடி போட்டுவிட்டேனே! அதற்குமேல் அவர் சொல்வது என்ன இருக்கிறது? "சரிதான் போகட்டும், அதனால் என்ன" என்று கூறி விட்டார். நானும் மிக்க விசனப்பட்டது போலக் காட்டிவிட்டு விடை பெற்று வந்து விட்டேன்.

மனைவி :—நீங்கள் வா ங் கி ன ரூபாயையாவது அவரிடம் கொடுத்து விட்டீர்களா?

கணவன் :—நானா கொடுக்கிறவன்? அவரும் அந்த மூன்று ரூபாயைக் கேட்கவில்லை. நானும் கொடுக்காமலே தந்திரமாக வேறு சங்கதிகளைப் பேசியபடியே அதை மறக்கடித்து விட்டு வந்து விட்டேன்.

மனைவி :—மூன்று ரூபாய் சங்கதிக்கு இவ்வளவு கபடமும் மோசமுமாகவா நடந்து கொள்கிறது? உங்களின் ஜால சமர்த்தை அவர் கண்டு கொண்டாலும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலிருந்திருக்கலாம். இனி ஒரு காசுக்கும் அவர் உங்களை நம்பப்போவதில்லை.

கணவன் :—ந ம் பா வி ட் டா ல் எனக்கு அதில் நஷ்ட மொன்றுமில்லை. இனி அவருடைய ஊருக்கு நாம் போகப் போவதுமில்லை. கடனாக அவரைக் கேட்கப்போவதுமில்லை. ஆயினும், வி ட் டே னா

---

மனதில் நல்ல அபிப்பிராய மில்லாதவர்களுக்குப் பிறர் தங்களுக்கு எவ்வளவு உதவியோ வேலையோ மனஸ்பூர்வமாகச் செய்யினும், விசுவாசமாக விருந்துகள் நடத்தினும், விரோதபுத்தியும் பிரிவினைக்குணமுமே தோற்றுமாம்.

அவரை! மாதத்துக்கு ஒரு கடிதமாவது க்ஷேமத்துக்கு எழுதவேண்டுமென்று ரொம்பவும் அவரை வேண்டிக்கொண்டுதான் புறப்பட்டு வந்தேன்.

மனைவி :—உங்களுடைய புரட்டுத்தனத்தை அவர் தெரிந்தபிறகு இனி கடிதம் வேறேயா எழுதப்போகிறார்? அது ஒருபோதுமில்லை.

கணவன் :—அப்படிக் கடிதமே வராதிருந்து விட்டால் எப்படியாவது அந்த ரூபாயை அனுப்பித் தொலைத்து விடுகிறேன். பிறகாவது கடிதம் எழுதுவாரல்லவா?

மனைவி:—இந்த மூன்று ரூபாயிலிருந்து உங்களின் யோக்கியதையைத் தெரிந்து கொண்டதுதான் அவருக்குப் பெரிதே தவிர, இந்த அற்ப ரூபாய் அவருக்குப் பெரிதல்ல. பின்னுக்கு எவ்வளவோ சங்கதிகளில் ஏமாறுதிருக்கும்படி இந்த மூன்று ரூபாய் அவருக்கு அதிக உதவி செய்து எச்சரித்துவிட்டதானது எவ்வளவோ பெரிய லாபமாகும். ஆனதால், இந்த மூன்று ரூபாயைத் தந்து ஏமாறியதிலிருந்தும் அடைந்த படிப்பினையை இழந்து போகவும், மறுபடி உங்களுடன் குலாவவும் அவர் ஒப்பமாட்டார். ஆனதால், நீங்கள் மணியார்டர் அவருக்குச் செய்தால் அது நிச்சயமாகவே திரும்பி உங்களுக்கு வந்துவிடும். உங்களுடைய குற்றமுள்ள நெஞ்சே உங்களைக் குத்தித் துளைக்கும்படி விட்டுவிட்டு அவர் மௌனமாய் விலகி விடுவார். இதுதான் நாளைக்கு நடக்கப் போகிற சங்கதி!

கணவன் :—சரிதானடி, உன் திருவாயை மூடிக்கொண்டு போடி.

மனைவி :—நல்லது சொன்னால் உங்களுக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது? நான் இனி வாயைத் திறக்கவில்லை.

[இந்த சமயத்தில் தபால்காரன் ஒரு கடிதம் கொண்டு வந்து தர, அதைக் கணவன் பெற்றுக்கொள்கிறான்.]

கணவன் :—பார்த்தாயா என் சொக்குபொடி வித்தையை! இதோ அவரே க்ஷேமக்கடிதம் எழுதியிருக்கிறார். அவர் விலாசம் இந்தக் காகிதத்தின்மேல் அச்சிட்டிருக்கிறது. என் பந்தயம் தான் கெலித்தது. உன் அதிகப் பிரசங்கம் அவ்வளவும் வீணே.

மனைவி :—சரிதான், கடிதத்தில் என்ன எழுதி யிருக்கிறார்?

[கணவன் கடிதத்தைப் படித்துவிட்டு முகம் சுருங்கியவனாய்க் கோபம் கொள்கிறான்.]

கணவன் :—ஏது அவர் கெட்டிக்கார மனுஷ்யன் போலிருக்கிறதே. இன்னும் அந்தத் தொட்டில் சங்கதியை விட்ட பாடில்லையே. அதை வாங்கி ரயில்வே பார்ஸலாக அனுப்பினால் ரூபாயைத் தான் கொடுத்துவிடுவதாக எழுதி யிருக்கிறார். பலே சமர்த்துப் பேர்வழிபோலிருக்கு!

மனைவி :—சமர்த்தல்ல, ஏதோ தொட்டிலுக்கு ஆசைப்பட்டு இப்படி ஆவலாதியாக எழுதியிருக்கிறார்.

---

ஒருவர் தமது மனவருத்தத்தைப் பிறரிடம் கூறுகையில், அதைக் கேட்பவர்களும் அவரைப்போலவே கஷ்டங்கள் பட்டிருந்தால்தான் உணர்ச்சியுடனும் அனுதாபப்பட்டு அறியமுடியுமே யன்றி, மற்றபடி பிறர் அவ்வளவு தெளிவாக உணர இயலாது.

நேரிலேயே ரயில் பார்ஸலில் அனுப்பும்படி சொல்வதற்கு மறந்து விட்டார் போலிருக்கிறது. இப்போது அதை நினைத்துக்கொண்டு மறுபடி எழுதினுர் போலும். அவ்விதமே அவருக்கு வாங்கி யனுப்பி விடுங்கள்.

கணவன் :—நானு வாங்கியனுப்புவேன்? அந்த மூன்று ரூபாயை இழக்க ஒரு போதும் சம்மதியேன். நான் வாங்கினுல் எவருக்குமே திருப்பிக் கொடுக்கிற வழக்கம் கிடையாது. வெகு பக்குவமாக இன்று கடிதம் அவருக்கு எழுதி விடுகிறேன்.

மனைவி :—என்ன எழுதப்போகிறீர்கள் ?

கணவன் :—நானே பார்ஸலில் தொட்டிலை யனுப்பவேண்டுமென்று நினைத்திருந்தேனென்றும், அதற்குள் அவருடைய கடிதமும் பார்ஸலில் தொட்டிலை யனுப்பும்படி வந்து விட்டதற்கு ஆச்சரியப்படுவதாயும், இருவர் மனமும் ஒன்ருக இருப்பதற்கு இது அடையாள மென்றும், ஒரு வாரத்தில் தொட்டிலைப் பார்ஸலில் அனுப்பி வைப்பதாயும் பதில் எழுதி விடுகிறேன்.

மனைவி :—அப்படியே அனுப்பி விடுவது உண்மை தானு ?

கணவன் :—அனுப்புவதேது ? மண்ணேது ? வந்த கடிதத்திற்கு ஏதாவது பதில் எழுதித் தொலைத்துத் தலை முழுகுகிற சங்கதிதான். பிறகு அவரே நான் அனுப்பாத ஜாடை தெரிந்து மௌனமாகி விடுவார். நானும் மௌனமாகி விடுவேன். இத்துடன் இவ்விஷயமும் முடிந்தது போலத்தான். மூன்று ரூபாய் சங்கதியும் திரும்பிவாராத—நாட்பட்ட கடனுகி மறைந்துவிடும்.

மனைவி :—சரி, நான் வாய் பேசவில்லை. உங்கள் பிரியம்போல் செய்து கொள்ளுங்கள் (என்று சொல்லிக் கோபமாய் உட்சென்ருள்.)

**தந்து ஏமாருதீர்கள்.**

## பர்மியர்களின் மதம்.

---

பர்மியர்களின் மதமும் ஜப்பானியர்களின் மதமும் ஒன்றே. பர்மியர்கட்கு மத விசுவாசம் அவ்வளவாகக் காணவில்லை. கிறிஸ்துமதத்தில் பர்மியர்களைச் சேர்க்கப் பாதிரிகளுக்குப் பிரயாசையேயில்லை. பர்மாவில் எத்தனையோ கிறிஸ்தவக் கோயில்கள் ஏற்பட்டு அநேக பர்மியர் கிறிஸ்தவர்களாயினர். ஐரோப்பியர் பர்மிய மாதர்களை ஆசைநாயகிகளாகப் பெறுவது சாதாரணமாம். இந்தியாவினின்று செல்லும் பல வகுப்பினர்களும் பர்மாவில் பர்மிய ஸ்திரீகளை மருவிப் பிறந்த குழந்தைகளைத் தங்கள் மதச் சார்புள்ளவர்களாக வளர்க்கிருர்கள். தங்கள் ஜாதியினர் பிறமதங்களில் சேருவதைப் பற்றிப் பர்மியர் அவ்வளவாகக் கவலை எடுத்துக் கொள்வதில்லையாம்.

# கள்ளனுக்குள் குள்ளன்.



"நான் உனக்கு ஒரு வேலை சம்பாதித்துக் கொடுக்கிறேன். அவ்வேலையில் ஏதாவது வரும்படி கிடைக்கும். வரும்படியில் பாதியை எனக்குக் கொடுக்கச் சம்மதிக்கிறாயா?" என்று கள்ளனாகிய மாயமுத்து குள்ளனாகிய இந்திர ஜித்திடம் கேட்டான். "அது என்ன வேலையப்பா. சாப்பிட்டுவிட்டு சும்மா காலத்தைப் போக்கும் நமக்குப் பணம் வரும் வேலை என்னஅப்பா" என்று கேட்டான் இந்திரஜித்து. "நீ உனக்குக் கிடைக்கும் வருமானத்தில் பாதி கொடுக்கச் சம்மதிக்கிறாயா இல்லையா? அவ்வேலை என்னாலேயே உனக்கு முடியும். ஒரு ஜவாப்தாரித்தனவேலை உன்னால் செய்யமுடியும் செய்கிறாயா?" என்று பின்னும் வற்புறுத்திக் கேட்டான் மாயமுத்து. இந்திரஜித்து எல்லாவற்றிற்கும் சரியென்று தலையசைத்து விட்டான்.

ஃ

மாயமுத்துஎன்பவன் பலர்வீட்டு சங்கதிகளில் நுழைந்து இங்கும் அங்கும் தலையீசைத்துவிட்டுத் தனக்குக் கிடைப்பவைகளைச் சுற்றி, பலருக்கும் நல்லவனாகத் தோன்றி, எல்லார் வாயிலும் மண்ணைப் போடுபவன். அவன் இப்போது ஒருவருடைய வேலையில் நுழைந்ததினாலேயே பணம் சம்பாதிக்க வழி தேடினான். இந்த வீட்டுக்காரன் அந்த வீட்டுக்காரனுக்கு ஒரு வீட்டின்மேல் ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கப் போகிறான் என்று அறிந்தான் மாயமுத்து. கடன் கொடுப்பவனிடம் சென்று தான் பத்திரம் எழுதுவதற்கு வழி பண்ணுவதாகவும், அதற்குக் கொடுக்கும் தொகையில் பாதியாகிய ரூபாய் ஐந்தைத் தனக்குக் கொடுக்கும்படியும் வாக்குறுதி வாங்கிவிட்டு, கடன் வாங்குவோனிடம் சென்று கடன் கொடுப்பவன் தானே பத்திரம் எழுத வழி செய்கிறானென்றும், பத்திரம் எழுதுவதற்கு எவனையும் அவர் அழைத்துக்கொண்டு வரவேண்டாமென்றும் எச்சரிக்கை கொடுத்துவிட்டு வந்து விட்டான்.

ஃ

இந்திரஜித்திடம் வந்து "உன் எழுத்துகள் நன்றாக இருக்குமாகையால் ஒரு பத்திரம் எழுதிக்கொடு. அதற்கு வேண்டிய தொகையை நாம் பெற்றுப் பங்கிட்டுக் கொள்ளலாம்" என்றான். பண ஆசை பிடித்த இந்திரஜித்தும் ஒப்புக்கொண்டான். ஒரு சுப நாளில் பத்திரம் சரிவர எழுதப்பட்டு ரிஜிஸ்டரெல்லாம் ஒழுங்காக நிறைவேறியது. பின் இந்திரஜித்து தனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கடன் கொடுத்தோனிடம் கேட்டான். இதற்கு முன்பே இந்திரஜித்து கடன் கொடுத்தோனிடம் மாயமுத்தின் வஞ்சக எண்ணத்தைக் கூறி அவன் மனதைக் கரைத்துத் தனக்குச் சேரவேண்டிய பணத்தைத் தன்னி

---

நெருங்கிய அண்ணன் தம்பிகள்தான்! வருஷத்திற்கு ஒரு கடிதங்கூடப் பரஸ்பர க்ஷேமத்திற்கு எழுதிக்கொள்ளவதில்லை. ஒரே தாய் வயிற்றில் பிறந்த பெண்களாயினும் விவாகமானபின் ஒருவரை யொருவர் சந்திக்கப் பல ஆண்டுகளாகிவிடுவதுமுண்டு.

டமே கொடுக்கும்படியும் மாயமுத்தின் முன்னால் தனக்கொன்றும் கொடுக்கவேண்டாமென்றும் கூறி விட்டான்.

ஃ

பின் இந்திரஜித்தும், மாயமுத்தும் தனித்தனியாயும் இருவரும் சேர்ந்தும் கடன் கொடுத்தோனிடம் தங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டு வந்தனர். இந்திரஜித்திற்கு அவன் பணம் கொடுக்காவிட்டாலும் போகிறான்; மாயமுத்துவின் முன்னால் அரைக்காசும் தனக்கு நீட்டக் கூடாதென்பது எண்ணம். இந்திரஜித்தின் தனித்த தொந்தரவின்மேல் ஒரு ரூபாய் மாத்திரமே அவனுக்குக் கிடைத்தது. அப்போதே கடன் கொடுத்தோனிடம் தான் ஒரு தம்மிடியும் யாருக்கும் கொடுக்கவில்லை யென்று சொல்லும்படியும் பின் ஏதாவது பேசினால் பணமே கொடுக்க முடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்லும்படியும் பாடம் கற்பித்து விட்டான்.

ஃ

மாயமுத்து பல தடவைகளில் கடன் கொடுத்தோனைத் தனியாக வற்புறுத்த, அந்தத் தொந்தரவு பொறுக்கமாட்டாமல் இந்திரஜித்தினிடம் தான் ஒரு ரூபாய் அன்றே கொடுத்து விட்டதாகவும், தன்னைத் தொந்தரவு பண்ணுவதில் பிரயோஜனமில்லை யென்றும், அவனைக் கேட்கும்படியும் கூறி விட்டான். வந்தான் மாயமுத்து இந்திரஜித்திடம்! தனக்கும் பங்கு கொடுக்கும்படி வற்புறுத்தினான். இந்திரஜித்து சொன்னதாவது "நான் ஒரு தம்மிடியும் எவரிட மிருந்தும் பெறவில்லையே? உனக்கு யார் சொன்னது" என்று கேட்க, நடந்ததைக் கூறினான் மாயமுத்தும். இந்திரஜித்திற்குக் கோபாவேசம் அதிகமாகி மாயமுத்தைப் பார்த்து "அடே கள்ளா அவரிடமே வா. அவர் கொடுத்ததை ரூபித்து விடட்டும்" என்று மாயமுத்தை அவரிடம் இழுத்தான். இந்திரஜித்தும் மாயமுத்தும் கடன் கொடுத்தோனிடம் ஆஜரானார்கள்.

ஃ

மாயமுத்து கடன் கொடுத்தோனைப் பார்த்து, "நீங்கள் இவருக்குப் பணம் கொடுத்தது உண்மையா இல்லையா?" என்றான் "நான் செம்பாலடித்த அரைக்காசும் யாருக்கும் கொடுக்கவில்லையே. அப்படி யிருக்க அவரைப் பங்கா கேட்கிறாய். அவர் எங்கே யிருந்து கொடுப்பார். நீங்கள் சினேகிதர்களாயிற்றே. நமக்கு உதவி செய்வீர்களென்று அதை எழுதிக் கொடுக்கச் சொன்னேன். அதற்குப் பணம் கேட்பது உங்களுக்கே வெட்கமா யில்லையா? நானும் ஒரு தம்மிடியும் உங்களுக்குக் கொடுக்கப்போவதில்லை" என்று கண்டிப்பாய் சொல்லி விட்டு எழுந்து போய்விட்டார். இப்போது இந்திரஜித்தும் மாயமுத்தும் கடன் கொடுத்தோனின் நம்பிக்கைத் துரோகத்திற்காகப் பழி வாங்குவதற்காகக் கூடிப்பேசிக் கொண்டிருக்கின்றனர்!

---

பேதிக்குச் சாப்பிட நினைத்த தினத்தில் அன்று சரிப்படாமல் தவறி விட்டால், அதற்காக வருத்தப்படாமல், அன்று பேதிக்கு உண்டு கஷ்டப்படாதிருக்க நேர்ந்ததேயென்று ஸந்தோஷிக்கும்படியாகவே இருக்குமாம்! மருந்தின் கசப்பை நினைக்கையில் மறு தினத்திற்கு என்று தள்ளி வைக்கவும் தோன்றுமாம்!




ஆநந்த கதா கல்பகம் முதல் வால்யம், இரண்டாம் பதிப்பு:—

ஸ்ரீரங்கம் "பிரஜாநுகூலன்," சென்னை "அமிர்த குணபோதினி" பத்திரிகைகளின் ஆசிரியரும், பிரபல கிரந்த கர்த்தாவுமாகிய ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு இயற்றிய "ஆநந்த கதாகல்பகம்" முதல் வால்யம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது 912-பக்கங்கள் கொண்டுள்ள பெரிய நூலாய்ப் படங்களும் சேர்க்கப்பட்டு, மிக்க நயமாக மூன்றே ரூபாய் விலை வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு சுலபமான விலையில் இந்த நாவல் களஞ்சியத்தினை வெளிபிடுவதற்கு இதன் ஆக்கியோன் ஒரு தனவந்தரல்லவாயினும், யாவரும் எளிதில் பெற்று நூலின் அருமையையும் பெருமையையும் உணரவேண்டு மென்பதே ஸ்ரீமான் நாயுடுவின் நோக்கமாயிருந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறோம்.

நூல்கள் இயற்றுவதை இரு வகையினதாகப் பிரிக்கலாம். ஒருவர் சென்ற வழியிலேயே தாமும் சென்று இயற்றுவது ஒரு விதம். இதுவே பெரும்பான்மையும் காணக்கூடியது. இவ்விதம் பழய வழியிலேயே செல்லாமல் தமக்கென்று ஒரு புது அமைப்பை நிர்மாணித்துக்கொண்டு நூதன முறையில் இயற்றி வெளியிட்டு, அதனையே ஸர்வ சிலாக்கியமாக மற்றவரும் கருதிப் பின்பற்றுமாறு புரிவது மற்றொரு விதமாகும். இந்த இரண்டாவதான நவீன வழியில் சுயகற்பனா சக்தியுடனும் ஸ்ரீமான் நாயுடு இந்த "ஆனந்தகதா கல்பக"த்தை இயற்றி யிருக்கின்றார். இதனை ஒரு அனுபவஞான நூல் என்று சொல்வது பொருந்தும்.

நமது பார்வைக்கு வந்துள்ள "ஆனந்தகதா கல்பகம்" முதல் வால்யம் ஒரு விஸ்தாரமான வசனப் பிரபந்தமாயுள்ளது. இதனில் 21—நாவல்களும், 27-கதைகளும், 890-அனுபவ ரகசியங்களும், பல்வேறு விஷயங்களைப் பற்றிய 90-குறிப்புகளும் அடங்கி வாசிப்பதற்கு மிக்க இனிமை பூட்டுகின்றது. "கணவனை அவமதித்த காரிகை" என்ற நாவல் பெண்மணிகட்குச் சிறந்த படிப்பினைகளைத் தரக்கூடியது. "எனது இன்ப உலக யாத்திரை" என்பது முற்றிலும் இன்பமயமாகவே யுள்ள அரியதோர் மனோ கற்பிதமாகும். நகைப் பைத்தியம் பிடித்த மங்கையர்க்கு "ஒயிலாம்பாள்" என்ற நாவல் தக்க மருந்தாகும். "கமலாபாய்" என்ற நாவல் வாசகர்களின் மனத்தைக் கவரவல்லது. யுத்தகளத்தில் தோன்றும் "பிரேம விருக்ஷம்" என்ற நாவல் அதிக ருசிகரமாயுள்ளது. இவ்விதமே ஒவ்வொரு நாவல்களும் கதைகளும் ஆழ்ந்த படிப்பினைகளுடன் சமத்காரமான கற்பனையோடும் ஆக்கப்பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் தமது அனுபவஞானங்களையும், உலக ரகசியங்களையும் இந்நூலின்

---

அருமை தெரியாதவனிடத்தில் ஒரு பிரஸித்த புருஷரின் படம் போகுமானால், அதை அவன் சக்கரைப் பொட்டணம் கட்டவே உபயோகிப்பான்.

ஒவ்வொரு பக்கத்திலும் நிறைத்து வைத்திருக்கின்றார். ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடுவை நாம் தமிழ் நாட்டிற்குப் புதிதாய் அறிமுகம் செய்துவைக்க வேண்டியதில்லையாதலின், அவர் அரும்பெரும் பிரயாஸத்துடன் இயற்றிய இந்த "ஆநந்த கதா கல்பக"த்தினை நமது அன்பர்களனைவரும் பெற்று வாசித்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். இப்புஸ்தகம் வேண்டுவோர் ஸ்ரீரங்கம் மேலடைய வளஞ்சான் வீதி 617-இலக்கமுள்ள "பிரஜாநுகூலன்" ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

"சுதேசமித்திரன்" விமரிசனம்.

["ஆநந்தகதா கல்பகம்" அமிர்த குணபோதினி ஆபீசிலும் பெற்றுக் கொள்ளலாம். வி.பி.யில் ரூ. 3-9-0]

ஃ

"சோதனையின் கொடுமை" அல்லது செல்வமே சோர்க்கம்:-

[சென்னை திருவல்லிக்கேணி "ஜகன்மோஹினி" பத்திராசிரியர் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் இயற்றியது. விலை ரூ. 1-8-0.]

தற்கால வாழ்க்கையே பெரிய சோதனையின் கொடுமையாயிருக்கையில், அப்பெயரையே தரித்து ஒரு நூல் வெளிவருவதாயின், எவருமே அதனை வாசித்துப் பார்க்க விரும்புவர். அதற்கேற்றவாறு இந்நூலின் கற்பிதமும் மிகச் சிறந்து விளங்குகின்றது. பெற்றோர்கள் தம்மக்களிடத்து உயர்வு தாழ்வு உணர்த்திக் காட்டும் இழிதன்மையால், அம் மக்களுள் பிற்காலத்தில் அந்நியோந்நியமென்பதே அருமையாகிப் பொறாமையும் துவேஷமும் மிகுந்து, கொடும்பகை சாதிக்கும் தன்மையில் ஸர்வநாசமாய் முடிகின்றதென்ற அரிய உண்மையினை இந்நூலகத்தே ஆசிரியர் மிக்க ஆழ்ந்த கருத்துகளுடன் எடுத்து விளக்கியிருக்கின்றார். அபாக்கியவதியான சாந்தா படும் சோகம் கன்மனத்தையும் கரையவைக்கும். எத்துணைச் சோதனைத்துயர் நேரிடினும் இடையிடையே ஆறுதலுக்கான வெளிச்சம் சிறிதேனும் தோற்றிக் கொண்டு செல்லின், எவ்விதமேனும் விதியின் பிழையைச் சகித்துத் தாங்கலாம். சாந்தாவின் ஜீவியமோ சற்றும் மனோசாந்தி கொள்வதற்கே யில்லாத விதமாய்க் கனத்த சோதனைகளுடன் நூலின் இறுதிவரைக்கும் செல்கின்றது. இவ்விதமும் சோதனை ஸமுத்திரம் சூழ்ந்து விழிநீர் பெருக்கினோரும் இல்லாமலில்லை. கதையின் முடிவில் சாந்தாவின் விஷயமாய்த் தெய்வம் கண்திறந்து நலம்புரிகின்றது. இந்த இடம் வாசகர்களின் மனத்தை வசீகரிக்கக் கூடியது. செல்வத்திலுயர்ந்து ஜமீன்தாரனியான செல்வமணியின் பிற்கால வாழ்வும், தீய நடத்தைகளும், அவற்றிற்கேற்ப அமைந்துள்ள முடிவும் சிறந்ததோர் படிப்பினையாகும். ஒரு நற்குடும்பத்தினிடையே புகும் அன்னிய ஆடவர் எத்துணைத் தீமையும், கற்புநாசமும் தேடிக் குடும்பத்தைச் சிதைத்து விடுகின்றார்களென்பதை அறிய விரும்பின் அதற்கு இந்நூலே ஏற்றதாகும். இன்னும் எத்தனையோ அனுபவங்களும், துப்பறியும் நயங்களும், நற்போதனைகளும், எளிய நடையிலமைந்த கவிதைகளும் நிறைந்து இந்நூல் உயர்ந்து விளங்குகின்றது. இதனை இயற்றிய பிரபல ஆசிரியையான ஆரிய குலாங்கனைக்கு பகவான் மேன்மேலும் விவேகஞான ஸம்பத்துகளை அநுக்கிரகித்து ஆசீர்வதிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்.

# குமாஸ்தாக்களுக்கு ஓர் படிப்பினை

அவர் :—தங்களுக்கு என்னை நன்ருகத் தெரிந்திருக்கும். என்னைத் தம்பு சாமிப்பிள்ளை கடையில் பார்த்திருப்பீர்கள். இப்பொழுது அவர் என்னை வேலையிலிருந்தும் விலக்கிவிட்டார். ஜீவனத்திற்கு மிகவும் கஷ்டப்படு கிறேன். எவ்விடத்திலாவது சிபாரிசு செய்து ஒரு வேலையில் என்னை அமர்த்தினல் தங்களுக்கு வெகு புண்ணியமுண்டு.

இவர் :—உம்மை அவர் நீக்கி விட்டாரா? பாவம்! அவரவர்கள் தங்களின் ஜீவனத்திற்காகவென்று அமர்ந்திருக்கிற வேலையிலுங்கூடத் தங்களால் இயன்ற வரையில் சத்திய நடத்தையையும், பிறருக்கு உதவுகிற குணத்தையும் கொண்டால்தான், நாளைக்கு அந்த வேலையிலிருந்து விலக்கப்படுகிற காலத்திலும் மற்றவர்களிடமிருந்து தாங்கள் ஒரு உதவியை யடைந்து கொள்ளமுடியும். அவ்விதமாக, நீர் எனக்கு எந்தெந்த சமயங்களில் உதவியைச் செய்திருக்கிறீரென்று தெரிவித்தால். நானும் பதிலுக்குப் பதில் இப்போது உமக்கு வேண்டிய சகாயங்கள் செய்யத் தடையில்லை.

அவர் :—தாங்கள் தம்புசாமிப்பிள்ளையிடம் வரும் சமயமெல்லாம் தங்களிடம் நான் அன்பாக நடந்து கொண்டிருக்கிறேன்.

இவர் :—அந்த அன்பு உண்மையான அன்பாக இருந்ததா என்பது கேள்வி. நீர் உமது எஜமானனின் தவறுதலான மோசச் செய்கைகளிலும் துணையாக இருந்து, உமது எஜமானன் பிறரை வஞ்சித்து ஏமாற்றியவைகளுக்கும் உட்கையாக நின்று மகா கபடப்பூனையாக நடந்து கொண்டீர். இப்போது உமது எஜமானனே உம்மை வேலையிலிருந்து நீக்கிவிட்ட பிறகு, அந்த எஜமானனின் மூலம் உமக்குப் பழக்கமான என்னிடம் உதவிகேட்க வந்திருக்கிறீர். உமக்கும் எனக்கும் பழக்கமுண்டுதான். ஆனல், இந்தப் பழக்கத்தை நீர் மனதில் வைத்து, நீர் அங்கு வேலையில் இருந்தபோது எனக்கு ஏதாவது நன்மை செய்திருக்கிறீரா?

அவர் :—நான் எளிய குமாஸ்தாவாயிற்றே. உங்களுக்கு நான் என்ன நன்மையைச் செய்யப்போகிறேன்? அவ்வளவுக்கு எனக்கு சக்தி ஏது?

இவர் ;—நீர் வேலையிலிருந்த காலத்தில் பிறருக்கு ஒரு காசும் செலவிடாமலே வாய்மொழியாக உபகாரம் செய்ய உமக்கு எவ்வளவோ சக்தியிருந்தது. நீர் கொஞ்சம் பெரிய மனசு வைத்து, உமது எஜமானன் என்னை ஏமாற்றி மோசம் செய்ய விருக்கும் சங்கதியைக் குறிப்பாக ரகசியமாய்த் தெரிவித்திருந்தால், நான் அதன் மூலம் விழித்துக்கொண்டு உமது எஜமானரால் கனத்த தொகைகளுக்கு மோசம் போகாமலும், என் சரக்குகளை நம்பிக் கொடுத்து நஷ்ட மடையாமலும் முன் ஜாக்கிரதையாக இருந்திருப்பேனே! அவ்விதமான உதவியை உம்மிடமிருந்து நான் அடைந்திருந்தால் அந்த விஸ்வாசத்தை என் மனதில் வைத்து இப்போது உமக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும் நான் கடமைப்பட்டிருப்பேன். பதிலுக்குப் பதில் நன்றி தெரிவித்துக் கொள்ளவும் முடியும். நீர் அவ்வித உதவியாவது, எச்சரிக்கையாவது ஒன்றுமே செய்யாமல், உமது எஜமானன் என்னை மோசம் செய்ததற்குத் துணையாக இருந்து வேலை செய்துவிட்டு இப்போது என்னிடம்

உதவிக்கு வந்தால் நான் உம்மீது எப்படி இரக்கப்படுகிறது? உம்மைப் பார்த்ததும், "இந்த மனுஷ்யனுங்கூட இருந்துதானே நாம் மோசம் போகும்படி செய்தான்" என்று ஆத்திரம் பொங்கும்போது, உம்மைப்பற்றி நான் நல்ல அபிப்பிராயம் கொள்வதற்கு முடியுமா?

அவர்:—என் எஜமானரின் வார்த்தைகட்கு உட்பட்டு நடந்தேன். எஜமானரின் ரகசியங்களை வெளியிடுவது நம்பிக்கைத் துரோகமாகுமென்றே தங்களிடம் எதையும் நான் சொல்லமுடியாத நிலையிலிருந்தேன். இதைத் தாங்கள் குற்றமாகக் கொள்ளக்கூடாது.

இவர்:—எஜமான விசுவாசத்துக்கும் ஓர் அளவு உண்டு. எஜமானன் ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயன்று வஞ்சகமாக அவளை இட்டு வரும்படி கூறினால் அவ்விதமே செய்கிறதா? எஜமானனின் கபட எண்ணத்தை அப் பெண்ணுக்குத் தெரிவித்து அவள் கற்பைக் காப்பாற்றினால் அது எஜமானனுக்குச் செய்த நம்பிக்கைத் துரோகமாகுமா? ஒரு கொலையை எஜமானன் ரகசியமாகச் செய்ய விருக்கும்போது, அநியாயமாகக் கொல்லப்படப் போகிற மனிதனை எச்சரித்துத் தப்பிப்போகுமாறு செய்தால், அது நம்பிக்கைத் துரோக மாகுமா? அவ்விதமே, எஜமானன் ஒருவரை மோசம் செய்ய இருப்பதை இனி மோசம்போக இருப்பவருக்குத் தெரிவித்து ஜாக்கிரதைப் படுமாறு புரிவது தவறுதலான செய்கையாகுமா? எஜமானன் சத்தியத்திலிருந்தும், யோக்கியதையான நடத்தையிலிருந்தும் மீறிக் கிரமப்பிசகாக நடக்கும்படி தன்னைத் தூண்டும்போது தான் அவ்விதம் செய்ய முடியாதென்று வணக்கமாகவும் தைரியமாகவும் தெரிவித்து விடுவதே ஒழுங்காகும். வயிற்றுப் பிழைப்புக்காகவென்று மனிதனுக்குப் பயப்படுவதைவிடக் கடவுளுக்கு அதிகம் அஞ்சவேண்டுமல்லவா? அவ்விதமின்றி, எஜமானனுடன் சேர்ந்து அவரது மோசச் செயல்களுக்கெல்லாம் உடந்தையாக நின்று எத்தனையோ பேர் மோசமடைந்து கலங்கும்படி செய்த உம்மைப்பற்றி நான் எப்படி நல்ல எண்ணம் கொண்டு உமக்கு வேறிடத்தில் வேலைக்கு சிபாரிசு செய்வது?

அவர்:—என் குற்றங்களை மன்னியுங்கள். இனிமேல் சத்தியம் தவறியோ, யோக்கியதை கெட்டோ வஞ்சகமாய் நடப்பதில்லை.

இவர்:—உமக்கு இந்த நற்புத்தி உண்டானதற்கு மிகவும் சந்தோஷம். ஆனால், நீர் முன்பு உமது எஜமானனுடன் சேர்ந்திருந்து செய்த தீவினைக்குக் கடவுளின் சோதனையை அனுபவித்தே தீரவேண்டும். பிறரை மோசம் செய்த உமது எஜமானனும் வாழவில்லை. நீரும் வேலையை இழந்து இப்போது ஏங்குகிறீர். உமது தீவினையை அனுபவித்தானபிறகு என்னிடம் வந்தால், அப்போது உமக்கு என்ன உதவியைச் செய்யலாமென்பதை அது சமயம் யோசித்துச் சொல்லுகிறேன். உங்களால் மோசம்போய் நஷ்டமடைந்த நான் உங்களைப்போல் முழுதுமே கெட்டுப் போகவில்லை. கடவுள் கிருபையால் நான் நஷ்டத்தை சமாளித்துவிட்டு க்ஷேமமாகவே இருக்கிறேன். இதிலிருந்தாவது நீர் ஒரு நல்ல படிப்பினையைக் கற்றுக்கொள்வீராக.

[குமாஸ்தா ஏக்கத்துடன் விடைபெற்றுச் செல்லுகிறார். முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். குமாஸ்தாகளுக்கு சொல்லிய இந்தப் பாடிப்பினை மற்ற வேலையாட்களுக்கும் பொருந்தும்.]




1. வீட்டிற்கு—நடந்துசெல்வது—மூடத்தனம்:—திடீரென்று யோசனைகள் மனதிற்குத் தோன்றி மறுகணத்தில் மறைகின்றன. மறக்க முடியாதென்று கருதியவைகளும் மறந்துவிடுகின்றன. அவற்றை மறக்குமுன் எழுதிக்கொண்டால் தான் நமது சொந்து சொத்து ஆகும். எழுதுதற்கோ அந்த சமயம் காகிதமும் பென்ஸலும் கிடைப்பதில்லை. ஒரு யோசனைக்குப் பிறகு இன்னும் இரு யோசனைகள் எழுகின்றன. ஆகவே, அவற்றை மறவாதிருக்க அந்த விஷயத்தின் தலைப்புகளை ஒரு வாக்கியமாகக் கோர்த்து மனப்பாடம் செய்து கொண்டால், அது நமது ஞாபகத்திலேயே இருந்து, பிறகு எழுதுவதற்கும் விட்டுப் போகாமல் சரியாக வரும். உதாரணமாக (1) வீட்டிற்கு (2) நடந்து செல்வது (3) மூடத்தனமாகும் என்று குறிப்புகளை ஒரு வாக்கியமாக்கிக் கொள்ளலாம். நாலாயிரப் பிரபந்தத்தில் பாசுரங்களின் தலைப்புகளை இவ்விதமே வாக்கிய ரூபமாக்கியுள்ளார். மறதியின் கொடுமை மகா பெரிது.

2. "வீட்டிற்த"ள் வருவோர்:—நாம் போய்த் தங்கியிருக்குமிடத்தில் நமக்கென்று அவ்வீட்டினர் தந்துள்ள தனியறையில் வேறு சிலர் உட்கார்ந்து பேசவரின், நாம் அந்த அறையின் சொந்தக்காரராகவும், அங்கு வந்தோர் ஏதோ இரவல் மனிதராகவும் கருதிக்கொண்டு, அங்கு வந்தவர்கட்குத் தாராளமாய் இடம் தந்து நாம் ஒரு மூலையில் தரையில் உட்கார்ந்தபடி உபசரிப்பதில் அதிக கௌரவமே ஏற்படும். வந்தவர்கள் சிலநிமிஷங்களே குந்தியிருந்து சென்றுவிடுவர். பிறகு அந்த அறை நம்முடையதேயாகும். இவ்விதமின்றி அங்கு வந்தோரைக் கடுகடுப்பது கூடாது. அவர்களுக்காக நமது சௌகரிய வசதிகளை அதிகமாகக் குறைத்துக் கொள்ளவும் வேண்டியதில்லை. சிறிதளவு விட்டுக்கொடுத்தால் போதும். ரயில் வண்டியிற் செல்லுவோருக்கும் இக்குறிப்பு பொருந்தும். எது சாச்வதம்? இந்த உலகமுங்கூட நமக்கு ஒரு இரவல் மாதிரிதான்.

3. "நடந்து செல்வது":—பாதரக்ஷை எப்பொழுதுமே சித்தமாயிராது. வெறுங்காலால் நடப்பதே அதிகம். காலம் வித்தியாஸமாயிருப்பின், அச்சமயம் ஒரு முள் காலில் தைக்கிறது. உடனே அந்த முள்ளை எடுத்து விடுகிறோம். சில நாட்கள் சென்றபின் மறுபடி அந்த இடத்தில் வலி தோன்றுகிறது. அதை ஆழச் சோதித்து உள்ளே ஒடிந்துள்ள முள்ளை வெளியில் எடுத்தெறிகிறோம். பிறகு சிலநாள் பொறுத்து மறுபடி வலிக்கிறது. டாக்டரிடம் காண்பிக்க, அவர் மறுபடியும் ஆயுதத்தால் அங்கு சோதிக்கையில் சீழ் பிடித்திருப்பதாய்த் தெரிகிறது. பிறகு பலநாள் டாக்டரிடம் வைத்தி

---

தங்களிடம் ஆபாசம் வைத்துக்கொண்டு யோக்கியர்களைப் பழித்தால் யோக்கியர்களின் மனம் சகிக்குமா ?

பம் செய்துகொள்ள நேர்ந்து, பிறகு அது புரையோடிவிட, அங்கு சோதித்து டாக்டர் துணியை நுழைக்கிறார். படுக்கையில் ஒரு மாதம்போல் கிடக்க நேர்ந்து, எல்லாம் ஆறிவிடும்போது திடீரென்று பிராணன் பிரிகிறது. இது சாதாரணமாய் ஒருமுள் குத்தியதிலிருந்து வந்த வினை. காலம் நல்லதானால், எத்தனை முட்கள் குத்தினாலும் இரண்டு தினங்கள் நோவெடுத்துப் பிறகு சாதாரணமாகி விடுகிறது. பொல்லாத வேளையில் நாம் மாடியின் கைப்பிடிசுவரிற் சாய்ந்தால், அது இடிந்து நாமும் கீழ்விழுந்து படுகாயப்படலாம். இவ்விதமே ஸ்நானம் செய்ய நதிக்குச் சென்று ஆற்றோடு போனவர்களும் எத்தனையோ பேர்! காலகதியைக் கடக்க முடிகிறதா?

4. "மூடத்தனம்" :—தான் மூடத்தனமாய் ஒரு காரியம் செய்துவிடும்போது, அருகிலுள்ள மற்றவர்கள் அதைக் கவனித்துப் பார்த்து விட்டனரா என்று நாற்புறமும் நோக்கப் புத்தி போகிறது. மற்றொரு பக்கத்தில் தன்னை நோக்கிச் சிலர் புன்னகை புரிவதைக் கண்டதும் நாணித் தலை குனியும்படியாகிறது.

5. நீரிழிவு நோய்:—ஒரு பாவமும் செய்யவில்லை; ஒரு அக்கிரம காரியத்திலும் சம்பந்தப்பட்டதில்லை. வெகு கிரமமான வாழ்க்கையிலேயே ஒழுங்காக நடந்து வந்திருக்கும்போதுகூட, இந்தப் பாழும் நீரிழிவு ரோகம் எவ்விதமோ வந்து தொட்டுக்கொள்கிறது. சிறு நீர் பெய்யப் போவதில், மலோபாதைக்கு ஒதுங்குகிற அவ்வளவு நேரம் வரையில் மடமடவென்று சிறுநீர் வருகிறது. இன்னும் முக்க முக்க இன்னும் சிறுநீர் வருகிறது. பிறகுதான் அப்படா என்று எழுந்திருக்க வைக்கிறது. இரவிலோ நல்ல தூக்கமின்றி அடிக்கடி எழுப்பிவிட்டு சிறுநீர் பெய்யச் செய்கிறது. கடைசியில், ஒரு சிரங்கு தேகத்தில் எங்காவது உண்டானால் இந்த நீரிழிவின் காரணமாய் அது சுலபத்தில் ஆறுகிறதில்லை. சில சமயம் புரையோடிப் பிராணனும் பிரிகிறது. காபி, டீ, முதலியவற்றால் நீரிழிவு வருவதாய் எண்ணி அதைப் பருகாதிருந்தோருங்கூட இந்த நோயினாலேயே பிராணனை விட்டுள்ளார். படித்தவர்கட்குத்தான் இந்த நோய் வருமென்கிறார்கள். இந்த நோய்க்குப் பயந்து படியாமல் இருக்கவேண்டுமா? இந்த நோய் உயிரைப் பிரித்தாலும் பிரிக்கட்டும்; படித்து அனுபவிக்கும் ருசியை விட்டுவிட முடியாது.

6. ஜீவனார்த்த பாதையின் மிருதுமயம்:—ஒருவன் தன் ஜீவன மார்க்கத்தில் தான் வேலைசெய்யு மிடங்களில் எவ்வளவோ சாந்தமாய் மிருதுமயமாய் உட்பட்டு நடந்து தன் கூலியை—சம்பளத்தைப் பெற்றுக் கொள்கிறான். இது ஜீவன வழியின் ரகசிய நிலை. அவனை அவன் வீட்டில் பார்ப்பினோ வெகு அதிகாரத்துடன் சுயேச்சையாய்த் தலைவணங்காமல்திற்கிறான். தன் ஜீவன ரகசியத்தையோ, தான் வேலையில் இருந்தபோது காண்பித்த மிருதுவான தன்மையையோவெளியிட்டுக்கொள்வதில்லை. இவ்விதமே ஒரு பெரிய விருக்ஷமானது தன் ஜீவனார்த்தத்துக்கு இருப்

---

நமது மாய வலையில் சிக்கவைத்துப் பிடிக்க எவ்வளவோ முயன்றும், அதற்குத் தப்பி அகப்படாது போய்விடுவோரை மறுபடி ஒரு சமயம் காணும் போது, அப்படிப் பிடிக்க முயன்று ஏமாறியவர்களின் மனம் கனத்த ஆத்திரா அவதி கொள்ளுமாம்.

பிடமாயுள்ள பூமிக்கு அடியில் தன்னை மிருதுமயமான வேர்களாக வைத்துக்கொண்டு, அவற்றால் ஜலத்தையும் மண்ணின் சாரத்தையும் பெற்றுத் தன் பசி தீர்த்துக்கொண்டு, பூமிக்குமேல் அந்த மிருதுமயமான வேர்கள் தோற்றாதபடி மறைத்துவிட்டுப் பெரிய உருவத்தோடும் கெட்டியாயும் நிற்கிறது. வெளிப் பார்வைக்கு மிக்க அழகாகவும் தன்னைக் காண்பித்துக் கொள்கிறது. ஜீவன வழி எப்பொழுதும் மறைவாய் ரகசியத்தில் இருக்கவேண்டும் போலும்! அத்துடன் அந்தப் பிழைக்கிற இடத்தில் மிருதுமயமாய் வணங்கியும் செல்லவேண்டும் போலும்!

7. அதிக நாள் தங்குவதின் ரகசியம்:—சிலர் சுபாசுபங்கட்குச் சென்றால், தாங்கள் ரயில் சார்ஜ் கொடுக்கும் பணத்திற்குப் பதிலாகப் போய்ச் சேர்ந்த இடத்தில் அதிக நாள் தங்கி, அங்கு அந்த செலவிட்ட பணத்திற்குச் சரிகட்டும்படியாக அதிகமாகப் புசித்தோ, இனாமாகப் பல சாமான்கள் பெற்றோ தங்கள் மனதைத் திருப்தி செய்துகொண்டு பிறகு தான் பிரயாணப்படுவார்கள். இவர்கள் ஊருக்குத் திரும்பிச் செல்லும்பொழுது ரயில் செலவுக்கு ஜாடையாகப் பணம் கேட்காமலிருந்தால் அதுவே பெரிய காரியமாகக் கருதலாம். இவர்களைத்தான் வெகு முக்கிய உறவாகவும், மிகவும் வேண்டியவர்களாகவும் உபசரித்து அனுப்ப வேண்டி யிருக்கிறது. இவ்வளவு பெரிய விருந்துக் கூட்டத்தில் உள்ளன்பினர்எவரோ ஒருவர்தான். அதுவும் உண்டோ, இல்லையோ!

---

## பொருட்காட்சியும் பிரசங்கங்களும்.

இவை வீணாகுமா என்பது கேள்வி. பொருட்காட்சி காண வந்தோர் அனைவரும் அங்குள்ள சாமான்களை வாங்கி ஆதரித்து விடுவதில்லை. ஏதோ சிலருக்கே அந்த நன்னோக்கம் அமைந்து சில பண்டங்களை வாங்கி மகிழ்கின்றனர். அவ்விதமே, பிரஸங்கங்களிலும் அதைக் கேட்போர் யாவருமே அவ்வாறு நடந்துவிடுவதில்லை. ஆயினும், அந்தப் பிரஸங்கம் மனதிற் பதிந்துவிடும் வித்தாயுளது. பிறகு ஒரு காலத்தில் அவ்விதம் பதிந்தவை பக்குவப்பட்டுப் பூரணஎழுச்சிபெறவும் கூடும். நுனிப்புல் மேய்வதிலும் சிறிது பசி தணியலாம். மேல் நோக்காக வாசிப்பதிலும் முக்கிய குறிப்புகளை அறிந்துவிடலாம். எதுவும் பயனற்றதன்று. எதிலும் சகிப்புடன் ஓயாமுயற்சிகள் செய்து காத்திருந்தே பிற்றைநாளில் அதன் பயனை எதிர்நோக்கவேண்டும்.

சில குடும்பங்களில் ஒரு நாளாவது சண்டை என்பதில்லாமல் கழிவதில்லை. காரணம், ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடா திருப்பதே.

# நீக்ரோவரின் விநோத ஆசரணைகள்.



நீக்ரோவர் என்போர் மேற்கு ஆபிக்காவின் வாஸிகள். கரிய நிறமுள்ள கோர ரூபிகளான காட்டு மிராண்டிகளாவர். பற்பல வகுப்புகளாகப் பிரிந்து வசிப்பர். நீண்ட உதடுகள் அவர்களுக்கு அடையாளமாகும். நல்ல பலசாலிகள். பிரீதியா யிருக்கும்போதே கோபமுங் கொள்வர். விநயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போதே புஸ்ஸென்று விழுவர். (நமது தேசத்தவர்கட்கும் இக்குணமுண்டு.) மாம்ஸமும் மீனும் பிரீதியுடன் உண்பர். காய் கறிகளும் புசிப்பர். காலையிலும் இரவிலும் கஞ்சியைப் பருகுவர். பகலில் கோழிக்குஞ்சுகளை உணவாகக் கொள்வர். கள்ளும், ரம் என்ற சாராயமும் விருப்பமாய் அருந்துவர். அநேகர் பொடியை உறிஞ்சுவர். நீக்ரோ ஸ்திரீகள் குழந்தைகளை முதுகில்வைத்துத் துணியால் தங்கள் உடம்புடன் சேர்த்துக் கட்டித் தூக்கிச் செல்வர். குழந்தைகள் படுத்துறங்க ஒரு வகை மெத்தையுண்டு. இதையும் முதுகில் கட்டிங் கொள்வார்கள். குழந்தைகளுக்குத் தாங்கள் வணங்கும் தெய்வத்தின் பெயரை வைப்பர். பத்து வயதுக்குள் இறந்த குழந்தைகளைக் காட்டில் கொண்டுபோய் வைத்து விடுவர். சிறு குழந்தைகள் இளைத்தால் அவற்றின் உணவைப் பைசாசங்கள் தின்னுகின்றனவென்று அப்பைசாசங்கட்கு ஏதேனும் பலிகொடுப்பர். இத்துடன் காலில் இரும்புச் சங்கிலியைப் போட்டு வைப்பர். இரும்பின் ஒலியைக் கேட்டுப் பிசாசு ஓடிப்போகு மென்பது நீக்ரோவரின் கொள்கை. (நம்மவரிலும் சிலருக்கு இந்த நம்பிக்கையுண்டு.)

ஃ

நீக்ரோச் சிறுமிகட்கு 16-வயது வந்தவுடன் கல்யாணமாகும். மணமகன் மாமனாருக்குப் பணம் கொடுப்பான். காதையும் மூக்கையும் பெரிதாய்த் துளைத்து நகைகளைத் தொங்கவிடுவர். (நம்மவர் சிறிதாய்த் துளைக்கின்றனர் போலும்!) சூரியாஸ்தமான பிறகு நீக்ரோவர் ஆடிப்பாடிக் களிப்பர். (நம்மவரும் மாலையில் கடற்கரைக்கும், சினிமா காட்சிக்கும் பந்தாட்டத்திற்கும் போகிறார்கள்!) நீக்ரோ ஆண் அடிமை 40-ரூபாய்க்கும். நீக்ரோ பெண் அடிமை மிக்க அழகியானால் 70-ரூபாய்க்கும் பழைய நாட்களில் அகப்பட்டு வந்தனர். அடிமை வியாபாரம் தற்போது இல்லை. நீக்ரோவரின் கொடிய வழக்கங்களிற் பல ஐரோப்பிய நாகரீகத்தில் மறைந்துபோயின. அவர்கள் தெய்வத்தை வணங்குகிறதற்காக ஒரு விக்கிரகத்தைச் செய்வதில்லை. ஒரு மரக்கட்டையில், கருங்கல்லில், அல்லது புலத்தில் தங்கள் தெய்வமிருப்பதாக நிச்சயிப்பர். ஸாதாரணமாய்ப் பெண்கள் நிர்வாணிகளாகவே இருப்பர். பருவ மடைந்த பிறகு தான் வஸ்திரம் தரிப்பர். கர்ப்பவதியானாளென்று தெரிந்தால், அவளைத்

---

உற்சாகமான பேச்சின் மத்தியிலே இன்னும் அதிக உற்சாகமேற்றிக் கொள்ளக் கையானது பொடி டப்பியைத் தேடுமாம். மூக்கிலும் பொடியை விரும்பி நிற்கிற நமைச்சல் அதிகமாகுமாம். பொடியைப் பத்திய காலங்களில் தள்ளி வைக்கும்போது கண்கள் சுருண்டு சுருண்டு தூக்கம் எதிரே வந்து முன் நிற்குமாம்.

துரத்தி ஆற்றுக்குக் கொண்டுபோய் ஸ்நானம் செய்வித்தபின் வீட்டுக்குக் கொண்டு வருவர். கல்யாணமாகும் பருவத்தில் சீமைச் சுண்ணும்புப் பொடியால் முகத்தைத் தேய்த்துக் கொள்வர். (நம்மவரும் தேய்த்துக் கொள்கிருர்கள்!) சிறு வயதில் லக்ஷணமாயிருக்கும் பெண்கள் கஷ்டமான வேலைகளைச் செய்து அடிபட்டு நொந்து குரங்குகளைப் போலாய் விடுவர். (இது நம்மவரிலு முண்டன்ருே!) புருஷர்கள் வீட்டிற்கு வந்ததும் ஸ்திரீகள் அவர்கட்கு முழங்காலிட்டு மரியாதை செய்வர். (இந்த நல்ல வழக்கம் நம்மவர்களில் என் இல்லையோ?) சில சமயங்களில் பயிர்த் தொழில்கள்கூட ஸ்திரீகளே செய்கிருர்கள். ஸ்திரீகள் ஆயுதபாணிகளாய்ச் சண்டைக்குச் செல்வது முண்டு. (நமது நாட்டு ஸ்திரீகள் வீட்டுக்குள் கணவன் மாமி நாத்திகளுடன் சண்டை செய்வர்!)

## ஏமாருதே!

**வி**ழித்துக்கொண்டிரு. உலகத்தார் உன்னை ஏமாற்றுவார்கள். நீ அவர்களை ஏய்க்க வழியைத் தேடு. நீ பின்வாங்காதே. பயப்படாதே. பயந்தால் காரியம் கெடும். நாம் தான் ஸகலத்தையும் செய்ய வல்லமை யுள்ளவர்களென்று நினை. எல்லா ஸித்திகளும் உடனே உண்டாகும். அவிவேகியைப் போல் பிறர் செய்யும் காரியங்களைப் பார்த்துப் பொருமைப் படாதே. உனக்குத் தெரியாவிடில் பிரயாஸைப்படு, கிடைக்கும். எதிரிகள் உன்னை விழுங்கப் பார்ப்பார்கள். அவர்களை நீ விழுங்க வழியைத் தேடு. பேச்சில் வீண்காலம் போக்காதே. ஒருவேளை பேசினுலும், எதிராளியின் கண், மனம், காது, நெஞ்சு, மார்பு முதலிய அவயவங்கள் என்ன நிலையிலிருக்கின்றன வென்பதைக் கவனித்துக்கொள். உடனே உண்மை விளங்கும். அழுமூஞ்சியா யிருந்தால் ஆநந்தம் வராது. கா கூ என்று கூச்சலிடுவதைவிட அமைதியாயிருந்து ஒரு வெற்றியான தீர்மானத்துக்கு வா. கண்ணைமூடு, உலகமே யில்லை. காதைப் பொத்திக்கொள், ஓசையேயில்லை. வாயைமூடு, கோபதாப கலக வார்த்தைகள் வராது. மனதை யடக்கு, எங்கும் சமாதானம் தோன்றும். இதை யறியாமல் நீ ஏமாறுகிருயே? முதலில் நீ பிறரால் ஏமாருதே என்றேன். இப்போது நீ ஏமாறுவதற்கு நீயே காரணமானுய். உன் இந்திரியங்களே உனக்குச் சத்துருக்கள். அவற்றை யடக்க முதலில் வழி தேடு. அவற்றினிடமும் ஏமாருதே.

# கிரந்த கர்த்தர்களும் பத்திரிகைகளும்.

புஸ்தக மெழுதுவது மகா பிரயாசமான காரியம். நாலு வாக்கியங்க ளெழுதினுலும் அவைகள் மனிதர்களுக்கு உபகாரத்தைத் தரக்கூடியவைகளா யிருந்தால் எழுதினவர்களின் சிரமம் சாந்த மடையும். ஒரு பதம் அநேக இடங்களில் விதவித அர்த்தங்களுடன் உபயோகப்படும். உதாரணமாக, படி என்பது ஓதுவதற்கு அர்த்தமாகும். படி யென்ருல் அரிசி அளக்கும் படிக்கும் பொருளாகும். வாசற்படியையும் படி என்றே அழைப்பர். இடமறிந்து வாக்கியங்களைப் பிரயோகிக்கத் தெரியவேண்டும். ஏற்கெனவே படித்தறிந்த விஷயங்களும், கிரகித்த மொழிகளும், கற்பனைகளும் அமைந்துள்ள புஸ்தகத்தை வேருெருவர் தன் புத்தியால் வித்தியாஸப்படுத்தி ஏகவசனத்தைப் பகு வசனமாய் முடித்து உருவத்தில் புஸ்தகத்தைப்போல் பைண்டு செய்து வெளியிடுவதில் வந்த லாபமென்ன? கிரந்த கர்த்தர்களுக்கு ஈசுவரனு லேற்பட்ட புத்தி யிருக்க வேண்டும். நூலாசிரியர்களென்ற உத்தமமான பெயருக்கு ஹானி தேடும் மனிதர்கள் இக்காலத்தில் அநேகருளர்.

ஆபாஸமான வாக்கியங்களும், அழகில்லாத நடைகளும், முடிவு பெருத சொற்களுமமைந்த புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பதைக் காட்டிலும், ஏற்கெனவே பெரியோர்கள் எழுதிவைத்துள்ள ஸத்கிரந்தங்களைப் பாராயணம் செய்வது பயன் தரும். உத்கிருஷ்டமான கிரந்தங்களுக்கும், பிரஸித்திபெற்ற பத்திரிகைகட்கும் ஒருபோதும் குறைவுண்டாகாது.

# தாதா விவாக வைபவம்.

வாலிபர்கள் விவாகம் செய்ய எத்தனிக்குங்கால் பெண்ணின் குலமென்ன, குணமென்ன, நிறமென்ன, அழகென்ன, நகையென்ன என்ற கேள்விகளை இயல்பாகக் கேட்கிருர்கள். கிழவர்கள் விவாகம் செய்யும்போதோ பெண்ணின் நிறம் சிவப்பா, கருப்பா என்ற கேள்வி ஒன்றே ஏற்படுகிறது.

பணத்தின் மகிமை பேசொணுது. அது வாலிபத்தை வெறுத்து வயோதிகனை விரும்பச் செய்து அவனுக்கே தன் பெண்ணைத் தரவும் சம்மதிக்க வைக்கிறது. கரிய முடியைப் பகைத்து, வெட்டின பஞ்சுபோன்ற வெளுத்த முடியைச் சிநேகிக்கச் செய்கிறது. மல்லிகை யரும்பை யொத்த பல் வரிசையை இகழ்ந்து பல்லில்லாத பொக்குவாயைப் புகழப் பண்ணுகிறது. காந்தி மேனியைப் பழித்து ஒந்தி மேனியை மதிக்கப் பண்ணுகிறது. நற்குணத்தையும் ஸன்மார்க்கத்தையும் தள்ளி, துர்க்குணத்தையும் பெண் துரோகத்தையும் தழுவப் பண்ணுகிறது. கடைசியில் விவாகமும் நிறைவேறுகிறது.

கல்யாணமான இரண்டு மூன்று வருஷத்திற்குள் தாத்தா அதிக பலவீன மடைகிருர். மணப்பெண் சரியான யௌவன மடைந்த காலத்தில் அய்யா தெற்கென்ருல் மணப்பெண் வடக்கென்பாள். அவர் என்னருகே உட்காரென்ருல், இவள் எழுந்திரும், உம்முடைய உடம்பைக்கொண்டு போய்க் கட்டையில் வையுமென்பாள். கொஞ்சம் நல்ல பதார்த்தமாய்

வாய்க்கு ருசியாய் வைத்துக்கொடு என்றால், காடு வாவா வென்கிறது, வீடு போபோ என்கிறது. இதிலே வாய்க்கு ருசி, கைக்கு ருசி வேணு மோ என்பாள். அடியே, நீ அயலார் அண்டை வீடுகளுக்குப் போகலாகாது ; அன்னிய புருஷர்களோடு சிரிக்கவும் பேசவும் கூடாது என்றால், காலிருந்தால் போவாள், வாயிருந்தால் சிரிப்பாள், பேசுவாள் என்பாள். இவ்வித பேச்சுகளைக் கேட்கையில் ஐயாவுக்குக் கோபம் பிறந்து இடிக்க எத்தனிப்பார். ஆனால் அதற்கு சக்தியிராது. சிலவேளைகளில் தாதா தமது கண்ணுட்டியை ஏசுவார். அவர் ஒரு ஏச்சு ஏசு முன்னே இவள் இரண்டு ஏச்சு ஏசியாகும். சில சமயங்களில் இடம் வாய்த்து அடிக்கத் தொடங்கினால் இவருக்கும் பதில் அடிகள் விழும். இப்படியே ஆயுள் முழுதுக்கும் ஆறாத் துயரத்துக்கு ஆளாக நேரும். பணத்தைச் செலவிட்டு என் இந்தக் கஷ்டத்தைஏற்றுக்கொள்ளவேண்டும் எனில், மனைவியைப்போல் மற்றொருவர் உடனிருந்து உதவுவார்களா வென்ற ஆலோசனையற்ற பேதமையான எண்ணத்தால் தான். பெண்ணின் பெற்றோர் கை நிறைய வரும் பணத்தால் திருப்தி யடைவது போலப் பெண் திருப்தி யடைவதற்கு மார்க்க மின்மையே கலக காரணம். பெண்ணுக்கு வேண்டியது தனது கணவனின் யௌவன சம்பத்தே யன்றி, திரவிய ஸம்பத்தை அதற்கு இரண்டாவதாகவே கொள்ள வேண்டும். முடிவில் விருத்த விவாகத்தால் குடும்ப கௌரவம் தொலைந்து, மானம் சிதைந்து, சொத்துக்களும் விடனுன அன்னிய மனிதனை யடைந்து விடுகின்றன. "பிறகு அமங்கலியாயினும், கற்பு குலைந்திடினும் பாதகமில்லை ; இப்போது தங்களின் பெண்ணுக்கு விவாகமாகி விடிற் போது" மென்று கருதும் பெண்ணின் பெற்றோர்களது மௌடீக அக்கிரமத்தை என்னென்பதோ !

---



எவ்வளவு தீங்கு செய்தவர்களையும் நாம் அன்பினால் அடக்கி விடலாம் எனச் சிலர் கூறுகிறார்கள். ஆனால், இவர்கள் அன்பினால் செய்யும் காரியங்கள் எதையுமே சந்தேக புத்தியுடன் நோக்கி இவர்களைத் திரஸ்கரித்தால் என்ன செய்ய இயலும் !




# புது மாப்பிள்ளைக்கு மைத்துனர் கூறும் புத்திமதி.

*கல்யாணி—இராகம்—அடதாளம்*

பல்லவி.

புதிய மாப்பிள்ளையானீர்! நான் சொல்லும்
புத்திமதியைக் கேளீர்! (புதிய)

*அநுபல்லவி.*

அதிசயம் உமக்கிந்த அதிர்ஷ்டம் நேர்ந்தது!
ஆகா! உமக்கினி ஆனந்தம் சேர்ந்தது!! (புதிய)

*சரணங்கள்.*

ஒண்டி மனிதனாய் ஒடுங்கிப் படுப்பதும்
ஒரு சுற்றுச் சோமனே உடையாய் உடுப்பதும்
உண்டியின் சுவை காண ஓட்டலை அடுப்பதும்
உதவாத நண்பருக்(கு) உம் பொருள் கொடுப்பதும்
நீங்கவே சுகம் ஓங்கவே இனி
நாங்கள் வாடிட நீங்கள் இன்புற (புதிய)

சேர்ந்தாலும் சேர்ந்தது இந்திர போகம்!
செல்வி என் தங்கையும் நீரும் ஓர் தேகம்!
நேர்ந்த(து) உமக்கினி என்ன வைபோகம்!
நீர் இவள் கைப்பற்றச் செய்தீரோ யோகம்?
நித்தமும் மனம் ஒத்து பத்தினி
சித்தம் இன்புற வைத்து வாழுவீர்! (புதிய)

"யாரடீ! இலை போ(டு)"—என்றதிகாரம் பண்ணுவீர்!
இலையில் எவ்வள வவள் இட்டாலும் உண்ணுவீர்!
'யாரும் நமக்கிணை இல்லை'—என்று எண்ணுவீர்!
இகத்திலேயே சொர்க்க இன்பத்தை நண்ணுவீர்!
இன்பம் மீறிட அன்பு மேலிட
துன்பம் யாவையும் மங்கி ஓடிட (புதிய)

சீற்றப் பேய்க்காளாகி அடிக்கக் கை ஓங்கிடில்
சிரிக்கும் முகங் கண்டு உம் கைபின்னால் வாங்கிடும்;
ஆற்றல் அழிந்தொரு முத்தத்திற்(கு) ஏங்கிடும்! . . .
அகத்திற் புகுந்த சினம் முற்றுமே நீங்கிடும்

அகமுந் திருமுகமுங் குளிர்
வுறு நங்கையி னுேடு மின்புற (புதிய)
தாயைப்போல் உம்மிடம் தயைமிகக் கொள்ளுவாள் ;
சல்லாபஞ் செய்தும்மைச் செல்லமாய்க் கிள்ளுவாள் ;
சாயை போல் உம்மோடும் காலத்தைத் தள்ளுவாள் ;
தக்க சமயத்தில் நன்மதி விள்ளுவாள்
தாரமாமிவள் வீர வாசகம்
சோர்வுறுதுமைத் தீரனுக்கிட (புதிய)
மனையினுக் கிவளொரு மங்கள தீபம் ;
மனமார்ந்த மெய்யன்பைப் பரப்பிடும் தூபம் ;
மனைவியை அவமதிப்பது பெரும் பாபம் ;
மாதவள் மலர் முகம் தணித்திடும் தாபம்
மனித வாழ்வினில் புனித மாதுணை
மனைவியாமெனல் உணரவே இனி (புதிய)

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

## பெருமைக்கு நேசன் பொறுமை.

முற்காலத்தில் விசுவாமித்திரர் பிரம்மரிஷி யென்ற பெருமையை அடைவதற்காக அநேக ஆயிர வருஷங்கள் தவமிழைத்தார். பொறுமை இல்லாமல் அடிக்கடி சினத்துக்கு இடம் கொடுத்து, செய்த தவமழிந்து, மறுபடியும் சிரமப் பட்டு தபஸ் பண்ணி பிரம்மரிஷிப் பட்டம் பெற்றுர். பொறு மையைவிரதமாகக்கொண்டதால் தர்மராஜன், ஹரிச்சந்திரன், இராமபிரான், பிரகலாதன், ஜானகி, திரௌபதி முதலியோர் பெருமையை அடைந்தார்கள். நம்முடைய நிலைமைக்குக் கீழ்ப்பட்டவன் செய்யும் அபராதத்தை க்ஷமித்துப் பொறுமை பாராட்டுவது சிரேயஸ்தரம். நமக்கு ஸமான மான நிலைமையிலுள்ளோன் நம்மை நிந்தித்தால் நாம் தக்ஷ ணமே அவனை சிக்ஷிக்கவேண்டியது கடமை. இப்படி சிக்ஷிக் காமல் பொறுமை பாராட்டுகிறேன் என்போன் சக்தியற்ற வனே ; அவன் கர்மப்பிரஷ்டனும் பயங்கொள்ளியுமே யாவன். பொறுமையற்றவர்கள் பெருமை கெடுவதன்றிப் பொருளையும் இழப்பர். கோபம் என்னும் பிசாசு அவர் களின் மனதில் குடிபுகும். பேராசை யென்னும் தோழ னுேடு வந்து கோபத்துடன் ஸகவாஸம் செய்யும். இவ்வளவு துஷ்டர்கள் ஒன்று சேர்ந்து நம்முடன் உறவாடினுல் நம் முடைய பெருமை ஓடாமல் நிற்குமா ?

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

# சோதனையா? வேதனையா? தடுமாற்றமா?



மூன்றுந்தான்! ஒன்று வந்தால் மற்றொன்றும் இன்னொன்றும் தானே தொடரும். சோதனை எதிலிருந்தும் வருகிறது? தோல்வியிலிருந்துதான்! நினைத்ததொன்று, நிகழ்வதொன்றாய் முடிவது எங்குங் கண்ட சங்கதி! எழுந்து நிற்பதற்கு முயன்றுத் தவறிக் கீழே விழும் குழந்தையின் தோல்வி ஒரு தோல்வியாகுமா? காந்தி தாதா தோல்வியைப்பற்றி ஒரு திருவசனம் சொன்னார்! "தோல்வி இந்த லோகத்தில் அதிகமான முயற்சிக்கே காரணமாக இருக்கும். ஒவ்வொருவரும் தமது கோரிக்கைகளின் பலனை அனுபவிப்பதற்கான யோக்கியதையை அடையும் வண்ணம், அவர்களது முயற்சிகளின் பலன்கள் சீக்கிரம் கிட்டாதபடி கடவுள் விதி செய்திருக்கிறார்." இந்த வாக்கியம் உண்மை தான். தோல்வியின்போது இந்த மாதிரி வேதாந்த வார்த்தைகளைச் சொல்லி மனதைத்தேற்றிக் கொள்ள வேண்டியதுதான்! மறுபடியும் துணிந்து இன்னொரு வழியைத் தொட்டுக்கொள்ளப் பார்க்கவேண்டியதுதான்! சோதனை எப்போது தோன்றிற்றோ அப்போது மனோ வேதனையும் எதிர்ப்பட்டு முட்டிக் கொள்ளும்! இந்த இரண்டும் கூடி விட்டபோது செய்கிற சங்கதியெல்லாம் தடுமாற்றமாகவும் அரைகுறையாகவும் தான் இருக்கும்! எல்லா ஏற்பாடும் ஆகிவிட்ட பிறகு கல்யாணப் பந்தலுக்கு மாப்பிள்ளை வர மாட்டேனென்றால், அது பெருத்த சோதனை தானே! அப்போது கனத்த வாதனையும் கூடிக் கொள்ளுமல்லவோ? தடுமாற்றமும் அந்த வேளையில் தானே நேர்ந்து கொள்ளும்! இப்போது காங்கிரஸ் மகா சபையின் கதையும் இப்படித் தான் சோதனை, வேதனை, தடுமாற்றமாய் முடிந்துவிட்டிருக்கிறது!

ஃ

---

தாய் தந்தையற்ற பெண்ணெனக் கருதித் தகாத வார்த்தைகளாடினால் அப்பெண் பொறுக்கும் வரை பொறுத்து, இன்னும் அதிகமாக அளவு மீறினால் தற்கொலைக்கோ, துணிகரமாய் வீட்டை விட்டு வெளியேறி விடவோ கருதுகிறாள்.

பூனுவிலே இந்தியத் தலைவர்கள் கூட்டின மகாநாடு பெரிய பிரதி நிதித்துவம் வாய்ந்து பொறுப்பேறிய முக்கிய மகா நாடுதான். அந்த மகா நாடு எல்லாப் பேச்சுகளும் பேசிவிட்டுக் கடைசியில் காந்தி தாதா இராஜப்பிரதிநிதியைப் பேட்டி கண்டு முடிவு செய்வதென்று முடிபோட்டு முடிந்து விட்டது! இப்படி முடி போட்டதிலே "சட்டமறுப்பு" என்பதை ஒரு துளி வைத்துக்கொண்டு விட்டதில், அந்த சட்ட மறுப்பை அடியோடு விட்டுத்தொலைத்துத் தலை முழுகும் வரையில் இராஜப் பிரதிநிதியின் போட்டி கிடைக்காதென்று பதில் வரும்படியானது. இதிலே காந்தி தாதா சட்ட மறுப்பிலே ஒரு துளி கௌரவமாவது தமக்கு இருக்க வேண்டுமென்று வைத்துக் கொண்டாரு! அரசாங்கத்தினரோ தாம் கொஞ்சமும் விட்டுக் கொடுப்பதில்லை யென்ற அபிப்பிராயத்துடன் ஒரே உறுதியில் இருந்து விட்டார்கள்! பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் தர்க்கம் நடத்துகிற சங்கதியிலே மாப்பிள்ளையின் பாடு திண்டாட்டமாவதுபோல, இந்த இரண்டு தர்க்கங்களுக்கும் நடுவே காங்கிரஸின் கதி பெரிய கவலையாய் முடிந்து விட்டது! சட்ட மறுப்பின் கௌரவத்தைக் காந்தி தாதா அடியோடு விட்டுவிட்டு, இராஜப்பிரதிநிதியாருடன் பேட்டிகாணத் தயாராகியிருந்தால் காரியம் ஒருவிதமாக சமரஸப்பட்டுப் போயிருக்கும்! அல்லது இராஜப்பிரதிநிதியே காந்தி தாதாவுக்குப் பேட்டி தரச் சம்மதித்து சட்ட மறுப்பை விட்டு விட்டால் தான் எதுவும் முடியுமென்று நேருக்கு நேராகப் பேசித் தெரிவித்திருந்தால் அப்போதும் ஒரு நல்ல முடிவு ஏற்பட்டுக் காந்தி தாதாவும் இணங்கிப் போயிருக்கலாம். இப்படியான ஒரு நல்ல பேட்டி நேராமற் போனது பெரிய துக்கந்தான்! சோதனைதான்! வேதனைதான்!

ஃ

இப்படிச் சோதனையும் வேதனையும் புகுந்து கொண்டதிலே தடுமாற்ற ஜன்னியும் பிறந்து விட்டது! காங்கிரஸின் ஆக்டிங் தலைவரான ஸ்ரீமான் ஆனே தடுமாற்ற ஆனே ஆனாரு! ஒரு பெரிய அறிக்கையை அவர் வெளியிட்டாரு! சட்டமறுப்பு நிறுத்தப்பட்டு விட்டதென்றும், ஆனால், தனித்த சிலர் சட்டமறுப்பு செய்வதைக் காங்கிரஸ் ஆதரித்து நிற்குமென்றும், தேச முற்றிலும் வியாபித்துள்ள காங்கிரஸின் ஸ்தாபனங்களை யெல்லாம் மூடி முழுகிவிட வேண்டுமென்றும் அந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறாரு! பெரிய தலைமை ஸ்தானத்திலே ஒருவர் இருந்தபோதிலும், அவர் செய்கிற ஒரு உத்திரவு பெரும்பான்மையாய் எல்லாராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய விதமாயிருந்தால்தான் அதற்கும் ஒரு மதிப்பு உண்டாகி யாவரும் ஏற்றுக்கொள்ளும்படியாக இருக்கும்! ஸ்ரீமான் ஆனே ஆனையவ்வளவு ரொம்ப பெரியார்தான்! ஆனால், அவரது அறிக்கையின் தடுமாற்றத்தைக் கண்டு விகடன் திகைக்கிறேன். இந்திய அரசாங்கத்தினர் ஒரேமுடிவான உறுதியுடன் இருக்கையில், சட்ட மறுப்பில் காங்கிரஸை இன்னும் சம்பந்தப்படுத்துவது பெரிய தவறாகும்.

---

உனது குமாரனே யாயினும், அவனுக்கு வயது வரும் வரையுமே எந்தச் சொல்லையும் பொறுப்பான். வயது வந்தபின் சொல்லத்தகாத சொல்லாவது மரியாதை தவறிய சொல்லாவது கேட்பதாயின் அதற்கு சகிக்க மாட்டான். ஆறு குளங்களில் விழுந்து முடிந்த சிறுவர்களும் எவ்வளவோ பேர்!


தளிப்பட்டவர் சட்டமறுப்பு செய்தால் அவர் பாட்டிலே தனித்துச் செய்துகொண்டு சிறையில் உட்காரட்டும். அதில் காங்கிரஸ் சம்பந்தப்படாமல் விலகுவதே—விலக்கி விடுவதேதான் சரியாகும். காங்கிரஸின் ஸ்தாபனங்களை யெல்லாம் மூடிவிடும்படி சொல்வது ஒரு தமோற்ற விபரீத யோசனைதான்! நேற்று முளைத்த சட்ட மறுப்புக்காக, அது வெற்றி கொள்ளவில்லை யென்று காங்கிரஸைக் கொன்று விடுவதா? எதிர்பார்த்த வரன் கிடைக்கவில்லை யென்று பெண்ணைக் கழுத்தை முறித்துச் சாகடிப்பதா? இதை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. இந்த மாப்பிள்ளை தவறினால் இன்னொரு மாப்பிள்ளை கிடைக்க வழியில்லையா? தேசத்தின் லட்சியத்தைச் சித்தித்துக்கொள்வதற்கு ஒரு கருவியாகவே சட்ட மறுப்பு கைக்கொள்ளப்பட்டது. அது தோல்வி யடைந்த போது, அதை விட்டுவிட்டு வேறு சமாதான வழியில் அரசாங்கத்துடன் ஒருமித்துச் சென்று காங்கிரஸையும் சாஸ்வதமாய் நிலைத்திருக்கும்படி செய்வதுதான் சரியாகும். இதை விட்டுவிட்டு சட்ட மறுப்பிலே ஒரு சிறு துளி விஷத்தை வைத்துக் கொள்வதாம்! காங்கிரஸைக் கொன்று அதன் ஸ்தாபனங்களை யெல்லாம் மூடிப்போடுவதாம்! ஐயா! இதென்ன தமோற்றமோ வென்று விகடன் கலங்குகிறேன்.

ஃ

மேலே, ஸ்ரீமான் ஆனேயின் தமோற்ற அவதியைச் சொன்னேன்! இனி காந்தி தாதாவின் சங்கதியும் தமோற்றமாகவேதான் தோன்றுகிறது. அவர் தக்க ஏற்பாடுகளுடன் நன்றாக நடந்து வருகிறதும், 350000-ரூபாய்களுக்குமேல் மதிக்கக்கூடிய ஸ்தாவர சொத்துகளும், பணம் உட்பட 300000 ரூபாய்கள் பெறுமான ஜங்கம சொத்துக்களும் உள்ளதாய் வெகு பேருக்கு உதவியாக இருப்பதுமான ஸபர்மதி ஆஸ்ரமத்தை அடியோடு கலைத்து மூடிவிட்டார். பணக் குறைவினால் இப்படிச் செய்யவில்லையாம்! ஏராளமான பணம் தாராளமாகத் தர எவ்வளவோ பேர் இருக்கிறார்களாம்! ஆனாலும், ஆஸ்ரமத்தைக் காலி செய்துவிட்டார். அங்கிருந்த யாவரும் வெளியேறி விட்டனர். ஸ்ரீமான் ஆனே காங்கிரஸை மூடிவிடப் பார்க்கிறார்! காந்தி தாதா ஸபர்மதி ஆசிரமத்தை மூடிவிட்டு ஆகஸ்மோதம் முதல் தேதியன்று காலை பொறுக்கி எடுத்த தமது கூட்டத்தாருடன் ஸபர்மதி ஆசிரமத்திலிருந்து 75-மைல் தூரமுள்ள ராஸ் என்னும் கிராமத்திற்குக் கால்நடை யாத்திரையாகப் புறப்பட்டுவிட நினைத்ததில் அவர் மறுபடியும் கைதியாகிச் சிறைவாசம் செய்ய நேர்ந்துவிட்டது. கடைசியாக இருவருடைய சங்கதியும் தமோற்றச் சங்கதிதான்! இந்தத் தமோற்றம் எப்போது வேறு மாற்றம் காணுமோ வென்று விகடன் என் கோணைத் தடியைத் தூக்கிக்கொண்டு காத்து நிற்கிறேன். எப்படி யாகிறதோ? ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

---

ஒரு விஷயம் கூறினால் அதன் சாரத்தைக் கிரகித்துச் சரிதான் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அவ்விதமின்றி, எந்த சங்கதிக்கும் மறுத்துப் பேசுவதே வேலையாகக் கொண்டால், அத்தகையோருக்கு எவ்வளவு தான் நியாய பூர்வமாக விவரிப்பினும், அதற்கும் அவர்கள்—"அது ஒரு பேச்சாகாது"—என்றே மூடத்தனமாய்க் கூறுவார்.



அதிகம் படித்து மேதாவியான வர்களில் சிலரை அரைக் காசுக்கும் நம்ப முடியவில்லையாம் !

ஃ

தங்களின் பெருமையைத் தாங்கள் எழுதியனுப்பிய கடிதத்திற்குப் பதில் வராமற் போவதிலிருந்து அறியலாமாம் !

ஃ

மௌனமாயிருந்துவிடில் நல்லவனோ, கெட்டவனோ எதையுமே பிறர் அறிய முடியாமற்போய் விடுமாம்!

ஃ

என் பட்டாணிக்கடை வியாபாரத்துக்கு என் குமாரனின் மூன்றாவது வகுப்புப் படிப்பே போதுமென்று ஒரு செட்டியார் கூறுகிறார்!

ஃ

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விரதத்தில் விழுங்குகிற தோசை வடைகளின் ஏப்பம் வைகுண்ட ஏகாதசி வரைக்கும் வரவேண்டுமோம் !

ஃ

ஒன்றிலே அதிர்ஷ்டம் தலைக்கு மேல் ஏறினால் மற்றொன்றிலே இறங்கித் தாழும்படி யிருக்கிறதாம் !

ஃ

வீட்டுப் பெண்களைச் சுலபத்தில் ஏமாற்றுகிறதுபோல வீட்டுக்காரனை ஏமாற்ற முடியவில்லையாம் !

ஃ

படித்தவனும் படிக்காதவனும் ஒரு ஜாண் வயிற்றை நிறப்புவதற்காகத்தான் வேலை செய்கிறார்களாம் !

ஃ

இலவசத்தில் எவ்வளவு வந்தாலும் படிக்கலாமாம், குடிக்கலாமாம். ஆனால், சொந்தத் துட்டுபோட்டுச் செலவழிக்கக் கூடாதாம் !

ஃ

கடனும் மோட்டாரும் இல்லாதவர்களுக்கு அந்தஸ்து கிடையாதாம் !

ஃ

சீக்கிரம் சீக்கிரமாய்க் கடன்களைத் தீர்த்துப் போடுகிறவர்களுக்குத்தான் புதிய கடன்கள் உடனுக்குடனே முளைத்துக் கொள்ளுமாம்!

ஃ

தன்னை ஒரு கபடப்பூனை யென்று அறிந்தவர்களைத் தான் எவ்வளவு தலை வணங்கி நடந்தாலும் ஏமாற்ற முடியாதாம் !

ஃ

பக்கத்து வீட்டுக்காரன் தோட்டத்தில் ஒரு செடியும் வைக்காதிருப்பதற்கு எதிர் வீட்டுக்காரன் ஆடுகளை வளர்க்கவேண்டுமோம் !

ஃ

நாலு பேரிடத்தில் இரவல் வாங்கி அணிந்தால்தான் நகையும் நட்டும் நன்றாக ஜொலிக்குமாம். இரவல் உடமைகள் செய்கிற பெருமை சொந்த உடமைகள் செய்யாதாம் !

ஃ

படிக்கிறதற்குப் புஸ்தகமில்லை யென்பவனுக்குப் பணம் கொடுத்து வாங்கிக்கொள்ளும்படி சொல்ல வேண்டுமோம் !

ஃ

உனக்கு உதவாத புஸ்தகத்தைக் கொடு என்று ஒருவன் கேட்டாலும் நல்ல புஸ்தமாகப் பெறவே உள்ளுக்குள் ஆசையாக இருக்குமாம் !

ஃ

இறந்து விட்டவர்கள் நல்லவர்களாம் ! இருக்கிறவர்கள் தான் கெட்டவர்களாம் !

# பழமொழி குறிப்புகள்

## 4. மக்கள்.

"அடக்குவாரற்ற கழுக்காணியும் கோட்டுவோரற்ற மேளமுமாய்த் திரிகிறான்."

கட்டையும் குட்டையுமாயுள்ளவனைக் கழுக்காணி என்பார்கள். இது வழக்கச்சொல். அடங்காப் பிள்ளையாய்ப் பிறந்த தன்மைக்குக் கட்டையும் குட்டையுமான தேக அமைப்பும் கூடிக்கொண்டு விகாரரூபியா யிருக்கலாம். தேகத்தில் இவ்விதம் விகாரம் தோற்றுவிட்டாலும் குணத்திலாவது கட்டையும் குட்டையுமான கோணல் போக்குகள் ஏற்பட்டிருக்கலாம். குணம் எப்பொழுது கேடு கெட்டதாய் அடக்குவாரற்ற தன்மையாய் அவலக்ஷணமாகி விட்டதோ, அப்பொழுது எவ்வளவு அழகாக இருந்தால்தானென்ன, அவனை அவலக்ஷணம் பிடித்தவனாகத்தான் மதிப்பார்கள். தாய் தந்தையர்களுக்கும், பெரியோர்களான மற்றவர்களுக்கும் அடங்காது நெறி நீங்கி தறிகெட்டுத் திரியும் வாலிபர்களை உத்தேசித்து வந்த பழமொழி யிது. இயற்கையாகவே அவர்களுக்கு இந்த அடங்காத்தன்மையான குணம் ஏற்பட்டுப்போய் அவ்விதமே அவர்களும் கெட்டலைந்து பாழ்படுவோராகிறார்கள். கோட்டுவாரற்ற மேளம் அதிக விறைப்பு கொண்டிருக்குமாதலால், அம்மாதிரி அடக்குவாரற்றவனும் திமிர்பிடித்து இறுமாப்பு கொண்டிருப்பான். இது பிள்ளைகளுக்குப் பிற்காலம் க்ஷேமமடைய நல்ல லக்ஷணமல்ல. இவ்விதமானவர்களுக்கு ஒரு விவாகத்தைச் செய்து வைத்துவிட்டால் அடங்கிப்போவார்கள் என்று நினைத்து அவ்விதமே சிலர் செய்வதுமுண்டு. சிலர் ஒருவித ஒழுங்குக்கு வருகிறதுமுண்டு. சிலர் மனைவியின் நகைகளை விற்க ஆரம்பித்தும், குடி முதலியவைகளில் தேர்ந்தும், பிறகு எவருக்கும் சொல்லிக்கொள்ளாமலே எங்கேயோ ஓடிவிட்டுச் சில வருஷங்களுக்குப் பிறகு வீடு திரும்புவதுமுண்டு. இத்தகையோரிடம் சிக்கிய மனைவிகள் குரங்கு கையில் அகப்பட்ட பூமாலைகளின் பாடுதான் படவேண்டி வரும்.

---

வேறு ஆதரவற்றவன், நம்மிடமே கிடப்பான், நாம் என்ன வேண்டுமாயினும் செய்யலாமென்று வெகு கேவலப்படுத்தி அவனுக்குப் படுகுழி வெட்டிவிட, இவர்களையே உண்மையானவர்களென்று நம்பிக்கிடந்தவன் பிறகு யாவும் உணர்ந்து எதிர்த்துப் பிரிந்து விடுகிறபோது மற்றவர்களும் இனி அவனை அடக்க முடியாதென ஒதுங்கிவிடுவதுடன், வணக்க நடிப்பும் படிக்கத் தொடங்கிக்கொள்கிறார்கள்.

"தகப்பன் தேடக்கற்ருன், பிள்ளை யழிக்கக் கற்ருன்."

இந்தமாதிரி ஜென்மம் பிறந்திருக்கவே கூடாது. தனது முன்ஞேர்களும், தனது தந்தையும் தேடிச் சேர்த்தவைகளை இன்னும் மேன்மேலும் அபிவிர்த்தி செய்துகொண்டு போகிற நல்ல குணம் இருக்கவேண்டும். இந்தக் குணம் ஏற்படுவதற்கு அந்தச் சொத்துகளில் கையிடாமல் தானே தனியாக உழைத்துத் தேடி உண்ணுகிற புத்திசாலித்தனம் இருந்தால் முடியும். உழைத்து நாலுகாசு வீடு கொண்டுவந்து சேர்க்கிறவனுக்குத்தான் தன் தந்தை பாடுபட்டுச் சேர்த்த சொத்துக்களின் அருமை தெரியும். தனது பூர்வசொத்தையும் அபிவிர்த்தி செய்துகொண்டு, தானும் நல்ல வழியில் ஒரு சம்பாதிய முள்ளவனுயிருந்தால் அப்பொழுது எந்தச் சொத்தும் கெடுவதற்கு மார்க்கமிராது. அவ்விதமின்றிச் சோம்பிக்கிடந்து வீட்டிலேயே உட்கார்ந்து காலம் தள்ளுவதாகில் தந்தை வைத்துச்சென்ற முதலிலிருந்துதான் எடுத்துப் புசிக்கும்படியாகும். இவ்விதம் உட்கார்ந்து தின்பவனுக்கு எவ்வளவு காலத்திற்கு அந்த முதல் இருக்கப்போகிறது? ஆகவே, பெரியவர்கள் தேடி வைத்ததை நாம் மேலும் வளர்க்க முயலவேண்டுமென்பதை இப்பழமொழி எடுத்துக் காட்டுகிறது. ஆனுல், இங்கு அனுபவமான ஒரு விஷயத்தைக் குறிப்பிடவேண்டும் தந்தை தேடிய சொத்துக்கள் நியாயமான முறையிலிருந்தால், அது பிள்ளைகளின் காலத்திற்குமட்டுமல்ல. பேரப்பிள்ளைகளின் காலத்திற்கும் அதற்குப் பிறகுங்கூட வளர்ந்து விருத்தியடையக் கூடும்தான். அவ்விதமின்றித் தந்தை, அக்கிரமவழியிலும், நல்லோர்களை மிதித்துக் கெடுத்தும், ஏமாற்றியும், தவிக்கவிட்டும், பலருடைய கொடிய சாபங்களைப் பெற்றும், நெறிகெட்ட முறையில் தேடிய சொத்துக்களாயிருந்தால் அவைகள் பிள்ளைகளின் காலத்தில் அழிந்து தரைமட்டாகிப் போவதும் சாதாரணந்தான். அத்தகைய அக்கிரமஸ்தர்களுக்கு அழிக்கக்கற்ற பிள்ளைகள் பிறப்பதும் வழக்கம் தான்.

"காதவழி பெயரில்லான் கழுதையோடொக்கும்."

ஒவ்வொருவனும் தனது நற்குண விசேஷங்களால் பெயரும் புகழும் அடைந்து வெகு தூரத்திலும் அவனைப்பற்றி நல்ல அபிப்பிராயம் தெரிவிக்கும்படியாக அவ்வளவுக்குக் கீர்த்தி பரவி யிருக்கவேண்டும். கீர்த்தியானது குறைந்தபட்சம் ஒரு காதவழியாவது எட்டியிருக்க வேண்டும். அவ்விதம் இல்லாத பிறப்பு ஒரு பிறப்பாகாது. அது கழுதைப் பிறப்புக்கே சமமாகும். கழுதைக்கு இருக்கிற இடத்திலும் மதிப்பில்லை. அது போகிற இடத்திலும் மதிப்பில்லை. முதலில் கழுதை என்கிற பெயருக்கே எந்த மதிப்பும் கிடையாது. அந்த நிலைமையில்தான் காதவழி பெயரில்லாதவன் பிறப்பும் மதிப்புகெட்டு மண்ணுகும் என்பது கருத்து.

---

பத்திராசிரியர்களுக்கு ஸூக்ஷ்மமான புத்தி யுக்திகளிருக்கவேண்டும். வஸ்துக்களின் குணதோஷங்களை நன்ருய் ஆராய்ச்சி செய்யும் அனுபவக் கல்வி அவசியம். பொறுமை என்னும் தேவதையை ஸதா கைக்கொண்டு ஆராதனை செய்யவேண்டும். சாந்தகுண மில்லாவிடில் ஸகல காரியங்களும் ஆபத்துதான்.

# சொள்ள முத்துவுக்குக் கௌன்சிலர் பதவி!

(ச. ஸ்ரீ.)

கள்ளுக்கடை சொள்ள முத்துவிற்குப் படிக்கவும் தெரியாது; எழுதவும் தெரியாது ஆனால். தன் கள்ளுக்கடைக்கு முன்னால் உட்கார்ந்து மீசைமேல் கையைப் போட்டுக் கொண்டு, "ஏ! அண்ணாத்தை! நம்ம கடைக்கு வரவில்லையோ" என்று வழியில் போவோரை வருவோரையெல்லாம் வெகு சமர்த்தாகக் கூப்பிடுவான். அவன் அழைக்கிற மரியாதையின் தினுசிலே இதுவரையிலும் மதுபானத்தைக் குறித்து எதிர்த்து வார்த்தையாடி வந்த வல்லாளர்களுங்கூட இந்தத் தடவை மட்டும் கடையினுள் நுழைந்து ருசி பார்த்துவிட்டு வந்து விடலாமே என்று நினைத்து மயங்கி விடுவார்கள். கள்ளுக்கடை விஷயத்தில் அவனுக்கிருந்த அனுபவம் வேறு யாருக்கும் கிடையாது. ஆனால், வேறு உலக விஷயத்திலோ 100-க்குப் பூஜ்யம் தான் அவன் வாங்குவான்.

ஃ

கள்ளுக்கடை சொள்ளமுத்துவின் வீட்டிற்குப் பக்கத்தில் ஷண்முகசுந்தர முதலியார் என்பவர் வசித்து வந்தார். அவர் மிகவும் சாதுர்யமான மனுஷ்யர். நாலு வழியில் தன்னைப் பெரிய மனிதனென்று ஊரார் சொல்லும் விதமாக எப்போதும் எதிலும் நுழைந்துகொண்டு பாடுபடுவதுதான் அவர் வழக்கம். அந்தரங்கத்திலோ அவரைக் காட்டிலும் கபடனும் அயோக்கியனும் வேறில்லை.

ஃ

சொள்ளமுத்து வசித்த ஊரில் முனிசிபல் எலெக்ஷன்கள் நடக்க ஆரம்பித்தன. சொள்ளமுத்து வார்டில் ஷண்முகசுந்தர முதலியார் ஓர் அபேஷகராக நின்றார். கையில் முன்னோர்கள் அரும்பாடுபட்டுச் சம்பாதித்த பணம் வீணாக நடமாடியதே அவர் முனிசிபல் எலெக்ஷனுக்கு நின்றதற்குக் காரணம்.

ஃ

ஊரில் இருப்போருக்கு ஒருவன் எவரும் எதிரியின்றித் தன்னந் தனியே தேர்ந்தெடுக்கப் பட்டானென்றால் யார் மனம்தான் ஒப்பும்? அதிலும் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் நாலு காசு பிடுங்கித்தின்ன இருப்பவர்களுக்கு இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பந்தான் கிடைக்குமா? உடனே, சும்மா சிவனே என்றிருந்த சொள்ளமுத்துவைப் பார்த்தார்கள். ஓடோடியும் சென்று "நீயேன் இந்த முனிசிபல் எலெக்ஷனில் இந்த வார்டில் ஓர் அபேக்ஷகராகத்தோன்றி அந்தக் கர்வம் பிடித்த ஷண்முகசுந்தர முதலியாரைத் தோற்கடித்து வெற்றி மாலையுடன் வெளிவந்து முனிசிபல் கொலு மண்டபத்தில் கௌன்சிலர் என்ற ஹோதாவில் கம்பீரமாக உட்காரக் கூடாது?" என்று அவனைத் தூண்டி விட்டனர். சொள்ள முத்துவிற்கு அவர்கள்

சொல்வது ஒன்றும் புரியவில்லை. முன்னமேயே அவனைப்பற்றிச் சொல்லி யிருக்கிறேன். அவனுக்கு அவன் கள் வியாபாரத்தைத் தவிர மற்றவைகளில் அவன் ஞானம் பூஜ்யம் தான்! ஆயினும் அவனை இலகுவில் விட்டார்களா? அவனுக்குப் போதனைகள் எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து பார்த்தார்கள். அவன் "எனக்குப் படிக்கத் தெரியாதே. நான் எப்படி ஊர் விஷயத்தில் தலையிடுவது?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "1-வது வார்டில் அபேக்ஷகராக நின்று இப்போது கௌன்சிலர் ஹோதாவில் பிரகாசிக்கும் முத்துக்கோனுருக்கு என்ன படிப்பு இருக்கிறது. இப்போதும் அவர் பால் வியாபாரத்தை விட்டாரா? அது ஒரு பக்கம், இது ஒரு பக்கம். நீயும் அதைப்போல் உன் கள் வியாபாரம் ஒரு பக்கம் இருக்கட்டும்; கௌன்சிலர் வேலை மற்றொரு பக்கத்தில் இருக்கட்டும்; புறப்படு எலெக்ஷனுக்கு" என்று சொல்லி அவனைச் சரிப்படுத்தி விட்டார்கள்.

ஃ

சொள்ளமுத்துவிற்கு இப்போதுதான் எலெக்ஷன் பைத்தியம் ஆரம்பமானது. உடனே கடையைக் கவனிக்காமல் புறப்பட்டான் எலெக்ஷனுக்காக! பாடு பட்டான் தன் கையாலானவரை! தன் வியர்வை நீர் கொட்டச் சம்பாதித்த பணத்தை ஓட்டாஞ் சல்லிகளென மதிக்காது செலவழித்தான். சண்முக சுந்தர முதலியாரும் அமோகமாகப் பணம் விரயம் செய்தார். ஓட்டு எண்ணும் நாளும் வந்தது. இரண்டு பேரும் பட்ட பிரயாசைக்கு இருவருக்கும் சமமான ஓட்டுகள் கிடைத்தன. உடனே சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டன. அதிர்ஷ்ட ஷண்முகசுந்தர முதலியார் வெற்றி பெற்றார். சொள்ள முத்துவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பலரிடமும் தன் விஷயத்தைச் சொல்லிப் பார்த்தான். அவர்களில் ஒருவர் அவனுக்காகப் பரிந்து அந்த எலெக்ஷன் சரிவர நடைபெறவில்லையென்று கேஸ் எடுத்து வாதிக்கச் சொன்னார்.

ஃ

முன் ஒன்றும் அறியாத சொள்ள முத்துவிற்கு இப்போது எலெக்ஷன் பைத்தியம் பிடித்தாட்டிற்று! கேஸும் போட்டான். செலவழித்தான் அமோகமான பொருள்! வக்கிலுக்கும் ரயிலுக்கும் கோர்ட்டிற்கும் அவன் வாரியிறைத்தது ஈசனுக்குத்தான் வெளிச்சம்! முனிசிபல் தேர்தலுக்குப்பின் முனிசிபல் கௌண்சிலர்களாக மூன்று வருஷ காலமே ஒருவர் வீற்றிருக்கலாம். அதற்குப் பின் பொதுத் தேர்த்தல் நடைபெறும். இப்போது சொள்ளமுத்துவின் கேஸ் இருவருஷங்களாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுமார் 55-வாய்தாக்கள் வரையில் போடப்பட்டு நான்கு ஜட்ஜுகள் மாற்றப்பட்டு பின் ஐந்தாவது ஜட்ஜ் கேசை நன்றாய் விசாரித்து மறு எலெக்ஷன் நடைபெற வேண்டுமென்றும், சொள்ளமுத்துவிற்கு ஷண்முக சுந்தர முதலியார் கேஸ் செலவாகிய ரூபா 100-கொடுக்க வேண்டுமென்

---

ஒரு விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போதே அதில் சம்பந்தித்தவர் அங்குவர, பேச்சும் வேறு விதமாய்த் திரும்புகிறது. பிறகு வந்தவர் சென்றுவிட, மறுபடியும் தொடங்குகிறது. ஆயினும், சென்றவர் திரும்பியும் வரலாமானதால் உடனே பேச்சை ஆரம்பிப்பது கூடாதென்கிறார் ஒருவர்.

றம் தீர்ப்பு சொன்னர். சொள்ள முத்து செலவழித்திருந்ததோ அமோ மான பொருள். அதில் நூறு ரூபாய் தான் இப்போது அவனுக்குக் கிடைக் கும். மறு எலெக்ஷனும் ஒரு நாள் தீர்மானிக்கப்பட்டது. சொள்ள முத்து இந்தத் தடவை மிகவும் கஷ் டப்பட்டுத் தன்னுல் ஆனதைப் பார்த் தான். ஷண்முகசுந்தர முதலியாரும் தன்னுலான தந்திரங்களும் சதியா லோசனைகளும் செய்து வேலை செய் தார். எலெக்ஷனும் நடைபெற்றது. இனி சொள்ள முத்துவை "அவர்" என்றே மரியாதை கொடுத்து அழைக்கவேண்டும்.

ஃ

மறுதினம் எலெக்ஷன் ஓட்டுகள் எண்ணப்பட்டன. சொள்ளமுத்து இந்தத் தடவை 2-ஓட்டுகளில் தோல் வியடைந்தார். அவரைக் கண்டால் தான் எனக்குப் பரிதாபகரமாக இருக்கிறது. கள்ளுக் கடையிலேயே நிம்மதியாய் உட்கார்ந்திருந்தால் அவ ருக்கு அவரது அண்ணுத்தைகள் எவ் வளவோ மதிப்புதான் கொடுப்பார்கள். இப்போது இந்தப் பாழும் எலெக்ஷ னில் நுழைந்து அவரிடத்திலிருந்த பணமும்போய், கடை வியாபாரத்தி லும் கவனம் செலுத்தாது வியாபார மும் குன்றி அவதிப்படுகிருர். அவ ரைச் சந்தியில் இழுத்துவிட்டவர்கள் இப்போது அவரை ஏனென்று கேட் பதில்லை. எப்படியும் சும்மாயிருந்த சொள்ளமுத்துவிற்கு இந்தப் பைத் தியத்தை உண்டாக்கி விட்டார்கள். அவர் இதனுல் லாபமடைந்ததோ ஒரு சிறிதுமில்லை. என்ன செய்வது! உலகத்தில்பெரிய மனிதனுய்க்கௌர வம் பெறுவதென்பது இவ்வளவு கஷ்டத்திலிருக்கிறது! சொள்ள முத்து பழயபடி தன் கள்ளுக்கடை யில் உட்கார ஆரம்பித்திருக்கிருர். ஷண்முகசுந்தர முதலியார் சீக்கிரம் பெரிய இன்ஸால்வெண்ட் மனு கொ டுப்பார்போல் தோன்றுகிறது. இந் தக் கௌரவங்களால் குடும்பசொத் துக்களின் நாசத்தைத் தவிர வேறு எந்த லாபத்தையுங் காணும் !

---

தனது சொந்தத் தந்தை இளையாள் மோகத்தில் தனக்குச் செய்கிற அநியாயங்களைத் தானே நேரில் அவரைக் கேட்கப்புகின், உனக்கு அத்தனை திமிரா என்று மாற்ருந்தாய் ஏசுகிருள். ஆனுல், அவள் மட்டும் அவரைச் சிடு சிடுத்துத் தூஷித்து ஆரவாரிக்கலாமாம்! நேற்று முளைத்தவர்களுக்குத்தான் எங்குமே அதிக பாத்தியதை ஏற்படுகிறது!

---

ஒருவனது ஏழ்மைத்தனம் அவன் கோரிய ஒன்றுக்குப் பிறர் சம்மதிக் காதபடி செய்து விடுகிறது. அவனே பிறகொரு காலத்தில் சீமானுகிவிடில், அவனுடைய இஷ்டத்திற்கு யாவரும் அடங்கி நடப்பதன்றி, தன் விருப்பத் தின்படியே பிறரை நடக்கச் செய்யவும் சக்திவந்தனுகிருன். எல்லாம் பணம் செய்யும் காரியம்.

---

இருவரும் ஒரு வீட்டில் பெண்கொள்ள, மூத்தபெண்ணை மணந்தவ னுக்கே சகல உரிமையையும் கொடுத்து, இளையபெண்ணை மணந்தவனுக்கு நியாயமாயுள்ள உரிமையையும் தராமல், அவனும் அவன் மனைவியும் மூத்த பெண்ணை மணந்தவனின் அதிகாரத்துக்கு உட்பட்டு நடக்க வேண்டுமென்று நிர்ப்பந்தித்தால், இந்த அவமானக்கேட்டைவிட, அவ்விடத்தைவிட்டு வெளி யேறுதல் மேலன்ருே?

# ஒலி பரவுவது எப்படி?

குளக்கரையில் ஒருவன் வேஷ்டி துவைக்கும் போது அந்த சத்தம் எதிர்க்கரையில் நிற்பவனுக்கு, கல்லின்மேல் துணி விழுவதைப் பார்க்கும் தக்ஷணமே கேட்கிறதில்லை. அதுபோலவே பாணவேடிக்கைகளின்போதும், ஆகாயத்தில் உயர வெடிகுண்டு பலவர்ணப் பொறிகளை ஜோதிர்மயமாய் வீசி இரைத்து சில நொடிகளான பிறகே வெடிச்சத்தம் கீழே நிற்பவர்களுக்குக் கேட்கிறது. இதனால் தெரிவது யாது? இடையேயுள்ள தூரத்தைத் தாண்டி நமது செவிகளில் வந்து பட ஒலிக்குக் காலம் பிடிக்கிறது. இதன் வேகமோ வினாடி ஒன்றுக்கு 1100-அடி தூரம் எனக் கணித்திருக்கிறார்கள்.

ஃ

இந்த சத்தம் நமக்கு எப்படி வந்து சேருகிறது? குளத்தின் நடுவில் ஒரு கல்லை எறிந்தால் கல் மறைந்த பின், நாலாதிசைகளிலும் வட்டம் வட்டமாய்ச் சிறு அலைகள் எழுந்து கரையை நோக்கி நீந்துகின்றன. இவ்வண்ணமே சத்தம் தோன்றுமிடத்திற்குச் சுற்றி எல்லா பக்கமும், எங்கும் பரவி நம்மைச் சூழ்கின்ற காற்று அலை அலையாய்ப் புறப்படும். இந்த அலைகள் நம்செவியில் புகுந்தவுடனே அந்த ஒலியை நாம் உணருகிறோம். எனினும், சத்தம் ஏற்பட்ட இடத்துக்கு அருகிலுள்ள காற்றே ஒலியலைகளில் மிதந்து நம்மிடம் வந்து சேர வேண்டியதில்லை. குளத்துநீரில் கல்லெறிந்த இடத்துக்கருகே ஒரு புல் மிதக்குமாயின், அணுவளவும் புல் நகராமல் மேடுபள்ளங்களில் தத்தளித்து ஊசலாடிக்கொண்டு மட்டும் இருக்கிறது. ஆகவே, அலைகள் வேறு, தண்ணீர் வேறு. அங்ஙனமே இங்கேயும் அலைகள் வேறு, காற்று வேறு. அலைகளே ஒலியை உணர்த்துகின்றன. அலைகளின் நீளத்துக்கும் உயரத்துக்கும் பொருந்தியதாய் ஒலியின் குரலும் ஓசையும் இருக்கும். அலைகள் சிறிது தூரம் சென்று வேகமும் பலமுமில்லாமல் ஓய்ந்து நின்றுவிடலாமாகையால், ஒரு சத்தம் எல்லோருக்குமே கேட்காமலும் போய்விடுகிறது. இதுபற்றியே தூரப் போகப்போக ஒலியின் ஓசை தேய்கிறது.

ஃ

அலைவேறு, தண்ணீர் வேறுதான். ஆயினும் தண்ணீரில்லையேல் அலையுண்டோ? தற்சமயத்துக்கு தண்ணீரே அலையுருவத்தைக் கொள்கிறது. ஆதலால், காற்றில்லாவிடின் சத்தமும் கேட்காது என்பது எளிதில் புலப்படும். சதா நம்மைச் சூழ்கிற காற்றானது பூமண்டலத்தை விட்டு என்றேனும் ஒழியுமாயின், மூச்சுவிட முடியாமல் அனைத்தும் மாண்டுபோமென்கிற கோரசம்பவம் ஒருபுறமிருக்க, அப்போது நாம் தெரிந்து பழகிய பலவகை ஒலிகளை நாம் கேட்கவே முடியாது. தொண்டையும் செவியும் கடவுள் அளித்தது வீணாகிவிடும்! பேசுவோரின் குரல் சப்தம் வெளியேறி உலாவ வழியற்றுப்போம். கேட்போரின் காதுக்கும் எதுவுமே எட்டி ஓசை தொனிக்காது. நக்ஷத்திர கணங்கள் என் ஊமையாய் கண்ணைமட்டும் சிமிட்டுகின்றன? நாற்பது மைலுக்கு

மேலே, இடையே காற்றேயில்லாமல், அலகிலா ஓர் "நிர்மப"க் கூட்டில் அவை அடைபட்டிருப்பதால் நமக்கு வந்து, ஒலி அலைக்க வழியேயில்லை!

ஃ

எனினும் காற்றுமட்டுமெல்ல, மற்றவை மூலமாயும் ஒலி செல்லக்கூடும். கட்டை, இரும்பு, தண்ணீர், தரை, கல், சுவர்—இவைபோன்றவைகளிலும் ஒலி ஊடுருவிப்பாயும். தரையில் படும்படி செவியைச் சாய்த்துக் கவனித்தால் வெகு தூரத்துக்கு அப்பால் உருளும் வண்டியின் சப்தமும், குதிரையின் காலடி ஓசையும் நன்றாய்க் கேட்கலாம். தண்ணீரின் அடியில் கல்மேல் கல்லைக் கொட்டினால் 10-மைல் தூரத்துக்குக்கூட தண்ணீரில் மூழ்கினவருக்கு மிகத் தெளிவாய்க் கேட்கிறதாம். ஆனால், சுவர், பலகை முதலியன இடையே தடுத்தால் ஒலி கடக்கிறதில்லை வந்த வழியே திரும்பிவிடும். இதுபற்றித்தான் சில அறைகளில் ஏதாவது நாம் பேசினால் எதிரொலிகள் தோன்றுகின்றன. இந்த எதிரொலிகள் சுவற்றுக்குச் சுவர் மேலும் கீழும் அங்குமிங்கும் அலைகளால் மோதுண்டு, நாம் பேசியதை—முக்கியமாக, இறுதிச் சொற்களை—திரும்பியும் பல குரல்களுடன் தோற்றுவிக்கின்றன. ஆனால், அறைகளில் துணிமணிகள் கட்டை முதலியவைகள் நிறையுமாயின், இம்மெதுவான சாமான்களால் ஒலி எதிர்த்துத் தள்ளப்படாமல் அடங்கி அமர்ந்துவிடும். மலைச்சாரல், கற்குன்றுகள் இவைகளுக்கு எதிரே பேசும் சப்தம் போய்த் தாக்கி, திரும்பிவரப் போதுமான தூரத்தில் நின்று பேசினால் சொற்கள் மட்டுமல்ல—நீண்ட வாக்கியங்களைக்கூடப் பலர் கேட்டு வியப்புற்றிருக்கிறார்களாம்.

K. N. சுந்தரேசன் M. A.

---

எவருக்கும் எந்தத் தீங்கையும் கருதாமல் தன் வயிற்றுப்பாட்டை மட்டும் கவனித்துச் செல்லும் சாதுவே எல்லோராலும் பொல்லாதவனாகக் கருதப்படுகிறான். அவனைப் பல செலவு செய்யவிட்டுப் பிறகு அவன் என்ன செய்துவிட்டானென்று ஏசவும் புறப்பட்டுக் கொள்கிறார்கள்.

நூலாசிரியரிடம் இனாமாகப் புஸ்தகம் கேட்கும் பிசாசுகள் அந்த நூலை எழுதியதற்கும் அச்சிடுவதற்கும் அவர் பட்ட பாட்டையும், அதில் அவருக்கு ஏற்பட்டிருக்கிற கடன் ஹிம்ஸைகளையும் கவனிக்காத சுயநலக்காரர்களாகின்றனர். ஆசிரியருக்கு என்றும் உபகாரிகளாயுள்ளோர் இனாமாகப் பெறுவதைக்குறித்துப் பேச்சே இல்லை. அவர்கள் எதிலும் பங்குபெறத் தக்கவர்களே.

இருவரும் ஒருவரை யொருவர் சந்தேகித்தவாறாக இருப்பினும், செய்ய வேண்டிய காரியங்களை இருவரும் ஒற்றுமையாகவே இருந்து செய்யவேண்டி வருகிறது. ஆயினும், தாங்கள் இப்படி ஒன்று சேர்ந்திருப்பது வெகு நேரத்திற்கில்லை யென்பதை இருவர் மனமும் தெரிந்துகொண்டிருக்கிறதாயினும் அதை வெளியிடுவதில்லை.

எவ்வளவுதான் கணவனுக்கோ, கணவனைச் சேர்ந்தவர்க்கோ, மாற்றாந் தாயினது வகையார்க்கோ உழைத்தாலும், விஸ்வாசமற்றுச் சதா பழித்தபடியும், சிடுசிடுவென முகத்தைக் காட்டியபடியும், சந்தேகித்தபடியும் இருந்தால்—பிறகு தெய்வத்தினிடம் முறையிட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

# பார்வதியின் குடும்ப சமர்த்து

ஜெகந்நாதர் ஒரு பெரிய உத்தியோகஸ்தர். ஏராளமான வருமானம் தாராளமாயுள்ளவர். பயிரிடும் குடிகளையெல்லாம் கசக்கிப் பிழிந்து பெருமை பெற்றவர். அவர் இட்டதே சட்டம். உயர்ந்த சம்பளம் பெற்று வந்தார். மிக்க தர்மவான். பிரதி வருஷத்திலும் புரட்டாசி மாதத்தன்று ஒரு சனிக்கிழமையில் தளிகை விட்டு ஏழைகளுக்கு அன்னதானம் செய்வார். பிச்சைக்காரர்களின் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு சவுக்கடிப் பிரயோகம் தாராளமாகத் தருவார். இந்த அன்னதான பலனே வருட முழுதுக்கும் தாங்குமென்பது அவரது சித்தாந்த மாதலின். பிறகு மறு வருஷம் புரட்டாசி மாதம் வரும் வரையில் அவர் ஒரு காசும் தருமம் செய்வதேயில்லை. இரண்டு மாதத்திற்கு ஒரு தரமே அவர் தமது துணிமணிகளைச் சலவைக்குப் போடுவார். மற்ற காலங்களில் தாமே துவைத்து வெண்மையாக்கி உடுத்திக்கொள்வார். நீர்க்காவியேறும்வரைத் துவைத்துக் கட்டி அதன் பிறகேதான் வண்ணானுக்கு எறிவார். எவ்வளவு கடும் வெயிலாயினும் நடந்தேதான் செல்வார். வண்டி வாடகை முக்காலணாவாயினுங்கூட அதைத்தந்து வீணாக்குவதில்லை. வியாதி வரின் வைத்தியச் செலவின்றி ஆஸ்பத்திரியிலேயே படுத்துக்கொண்டு குணம் பெற்றபின் இல்லம் வந்துவிடுவார். ஒரு நூறு வருஷத்திற்குப் பிறகு நேரக் கூடியதை இன்றே கவனித்து ஆழ்ந்த ஆலோசனையுடன் அதற்குத் தகுந்தவாறு நடந்து கொள்வார். விதவையான தனது தம்பியின் மனைவியும், அவள் குமாரனும் தனது வீட்டில் ஒரு சிறிய அறையைப் பெற்று வசித்து வருவது பிற்காலத்தில் ஏதாவது ஒரு பாத்தியதையை உண்டாக்கி விடுமோவெனக் கவலை கொண்டவராகி அவ்விருவரையும் வேறு வீட்டிற்குக் குடி போகும்படி செய்துவிட்டார். இவ்வளவு ஜாக்கிரதைப்படுகிறவர்களின் குடும்பமே நாளைக்குச் சந்தியில் நிற்கும்படி நேர்ந்து விடுகிறது.

ஃ

ஜெகந்நாதரின் மனைவி பார்வதியின் குடும்ப சமர்த்து எவருக்குமே வராது. அம்மாள் சொல்லித் தந்தபடி அய்யா ஆடுவார். பார்வதியின் வாய் மகா பெரிது. கல்வியில்லாவிடினும் ஐந்து ரூபாய் நோட்டுக்கும் பத்து ரூபாய் நோட்டுக்கும் அடையாளம் நன்கு தெரிந்து கொள்ளக்கூடிய சாமர்த்தியவதி ! ஜெகந்நாதருக்கு வேண்டிய ஒருவர் காலையில் வந்தால், உடனே தமது மனை

---

தாமாகவே நேரில் முன்வர யோக்கியதை யற்றவர்கள்தான் அநாமதேயக் கடிதங்களை எழுதவும், பிறரை ஏவிவிட்டுத் தமது எதிரிகளை ஹிம்ஸிக்கவும் முற்படுவரேயன்றி, நிரபராதிகளா யுள்ளோர் தங்களுக்குப் பக்க பல மில்லையாயினும் தங்களின் சத்திய நெஞ்சுத் துணிவை உபயோகித்துப் பிறரை நேரிலேயே கண்டிக்கப் பின்னடைவதில்லை.

வியை யழைத்து அவருக்கு இட்டிலி வை என்பார். பார்வதியின் முகம் கோணிவிடும். “அவர் சாப்பிட்டு வந்திருப்பார்” என்று பல்லவி பாடுவாள்.



வந்தவரும் தனக்குப் பலகாரம் வேண்டாம், புசித்துத்தான் வந்தேன் என்று சொல்லும்படியாகிவிடும். உடனே பார்வதி அநுபல்லவியைத் தொடங்கிக் கொள்வாள். கேட்டீர்களா அவர் சொல்வதை? அவர் சாப்பிட்டு வந்தேனென்று சொல்லும்போது இட்டிலி வை, வை என்கிறீர்களே! அவர் வேண்டா மென்னும்போது எப்படி வைக்கிறது? விடிந்து இவ்வளவு பொழுதாகியும் உண்ணாமலா இருப்பார்கள்? என் எல்லார் முன்னிலையிலும் என்னை இடாதவள் மாதிரியாகக் கெட்டவளாக்குகிறீர்கள்? உங்களுடைய ஈனக்குணம் உங்களை விட்டுப்போகக் காணோமே என்று பெரிய பிரஸங்கம் ஆரம்பித்துக் கொள்வாள். ஜகந்நாதரும் மௌனமாகி விடுவார். வந்தவரும் திகைத்து வெட்கிப்போவார்.

ஃ

ஜெகந்நாதருக்கு உத்தியோக பருவம் தீர்ந்ததால் உபகாரச் சம்பளம் பெறுகிற பருவம் நேர்ந்து வீட்டிலுட்காரும்படியானது. ஸர்க்கார் சம்பளத்தைவிட மேல் வருமானத்தையே முக்கியமாக அவர் நாடி யிருந்ததால் தமக்கு உண்டான பெரிய நஷ்டத்துக்கு ஏங்கி வீங்கினார். வயதைத் தமது இஷ்டபடிக் குறைத்துக் கொள்வதற்கோ முடியவில்லை. வீட்டில் உட்கார்ந்தவருக்கு ஏதேனும் ஒரு உத்தியோகம் வேண்டாமா? ஒரு தினத்துக்குப் பல தடவைகள் இரவிலும் பகலிலும் வெளியே எழுந்து சென்று சிறு நீர் விடும் கௌரவபதவியைத் தேடிக்கொண்டார். அந்த நீர் வியாதி எந்த மருந்திலும் குணமாகவில்லை. அவர் வீட்டில் ஒரு பெரிய திண்ணையுண்டு. அத்திண்ணையில் வியாதியாகப் படுத்தவர்கள் பிராணனோடு எழுந்ததில்லை. அப்படியே பச்சைப் பல்லக்கில் ஊர்கோலம் செல்வதுதான் அதிகம். அவரது புத்திரி மோகனா புஷ்பவதியானதற்கு வந்திருந்த பந்துக்களில் ஒருவர் அந்தத் திண்ணையில் படுத்து உறங்கினார். மறுதினம் அவருக்குக் காலரா கண்டு விட்டது. அய்யையோ! அந்தத் திண்ணையில் படுக்கவைத்தால் பரமபதத்திற்கல்லவா பிரயாணம் கட்டிவிடுமென்று பக்கத்து வீட்டார் கூறி அவரை வேறிடத்தில் படுக்கவைத்தார்கள். அவரும் இடம் மாறிய விசேஷத்தால் பிறகு குணமானார். தமது வீட்டுத் திண்ணையைப்பற்றிப் பக்கத்து வீட்டார் கேவலமாகப் பேசியதற்கு ஜெகந்நாதர் கடுங்கோபம்கொண்டு ஏசினார். பார்வதி அம்மையும் தமது பெருவாயைத் திறந்து வீசினார். பக்கத்து வீட்டாரோ

---

மனிதர்களை ஏமாற்ற நினைத்து முடிவில் தாங்களே ஏமாந்து போவதை ஆரம்பத்தில் அநேகர் அறியார்கள் போலும்.

ஜெகந்நாதரின் பாட்டனுர் முதற்கொண்டு அத்திண்ணையில் படுத்து வைகுண்டபதவி யடைந்தோரின் ஜாப்தாவை வரிசையாக ஒப்புவித்துப் பதிலுக்குப் பதில் திருவாய்மொழி ஸமர்ப்பித்தார்கள். இதிலிருந்தும் ஜெகந்நாதர் தாம் இனி என்றைக்கும் அந்தத் திண்ணையில் படுக்கலாகாதென்று தமது திருவுள்ளத்தில் தீர்மானம் செய்து கொண்டார்.

ஃ


ஜெகந்நாதரின் புத்திரி மோகனுவுக்குப் படிப்பே வரவில்லை. தாய் கற்றிருந்தாலன்றோ பெண்ணுக்கும் கல்விதானுகவே வளரும். தாய் எழுத்து வாசனை காணுதபோது பெண்ணும் அதற்கேற்பவே அமைவாள். ஆயினும், மோகனு தனது பெயரை "மோசனு" என்று போடுகிற அவ்வளவுக்கு நன்ருகக் கற்றுத் தேறிவிட்டாள். மோகனு தன் தாயைப்போலின்றி சாந்த குணரத்னமாய் நற்குணங்களோடும் விளங்கினுள். ஜெகந்நாதரின் தமக்கை குமாரன் பத்மநாபனுக்கே தரவேண்டுமென்று மோகனு பிறந்த நாள் முதல் பேச்சு வார்த்தை ஏற்பட்டிருந்தது. ஆனுல், பார்வதிக்கு இப்போது அந்த இடத்தில் பிரியமில்லை. பத்மநாபனே பெரிய துஷ்டனு யிருந்தான். அவன் தந்தை காலமாகி தரித்திராதேவி தாண்டவமாடி வந்தாள். தமது பத்தினியின் வாக்கையே திருவாக்கெனக் கொண்டுள்ள ஜெகந்நாதரும் தமது புத்திரியைப் பத்மநாபனுக்குத் தர மறுத்து விட்டார். பத்மநாபனும் பினுங்குக்கு ஓடி விட்டான். அவனுக்கு வியாபாரத்தில் நல்ல ஞானம் இருந்ததால் புகையிலை வர்த்தகத்தில் தலைமைக் குமாஸ்தாவாகி மாதம் நூறு ரூபாய் சம்பளம் பெற்றுத் தன் தாய்க்கும் பணம் அனுப்பிவருவதானுன்.

ஃ

ஜெகந்நாதர் வீடு நிறைந்தவர். உத்தியோகஸ்தரென்ற கௌரவப் பிரதாபம் தாங்கியவர். அந்தக் கௌரவத்திலே அவரது மனைவிக்கும் பாதி கிடைத்து எல்லோராலும் துதிக்கப்பட்டாள். ஜெகந்நாதரின் காலில் ஒரு புண்தோன்றி நீர் வியாதியால் பெருகி டாக்டர் வந்து ரணசிகிச்சை செய்ய நேர்ந்தது. திண்ணையில் படுக்க அஞ்சி மேல்மாடியிலேயே சயனித்துக் கொண்டார். டாக்டர்கள் இருவர் கூடிக்கொண்டு ஒரு மாதமாக அவரது தேகத்தைச் சித்திரவதை செய்தனர். தமது உத்தியோக காலத்தில் தான் பிறரை வருத்திச் செய்த கொடுமைகளுக்குப் பிரதிபலனுக டாக்டர்களிடமிருந்து ஜெகந்நாதர் பெற்றுக்கொண்டார். உடம்பு துரும்பாயிற்று. இனி அவர் பிழைக்கமாட்டாரென்று டாக்டர்கள் கூறிக் கைவிட்டு விட்டனர். ஜெகந்நாதர் தம் சொத்துக்களில் பாதியைத் தமது புத்திரிக்கும், மறு பாதியை மனைவிக்குமாக உயில் எழுதிவைத்து ரிஜிஸ்தர் செய்தார். ஜெகந்நாதரின் உத்தியோக சம்பளம் எழுபது ரூபாயாயினும், அவரது சொத்துக்கள் ஐம்பதினுயிரத்துக்கு நெருங்கியிருந்தன. இதில் நோட்டுகளாகப் பதினுயிரத்துக்கு இருந்ததை உயிலில் சேர்க்காமல் அதை இருப்புப்பெட்டியிலேயே வைத்து விட்டார். வட்டிக்கு விட்டால் இவ்வளவு சொத்துக்கள் எப்படிச் சேர்ந்ததென்ற கேள்வி தோன்றுமென்று பயந்து ரகசியமாக நோட்டுகளாகவே மாற்றி வைத்திருந்தார்.

ஃ

ஜெகந்நாதருக்கு அந்திய காலம் நெருங்கியது. டாக்டர் வந்து பார்த்துவிட்டு இனி இரண்டு நாள்தான் என்று கூறினர். பார்வதி அம்மாள் டாக்டருக்கு நோட்டு நோட்டுகளாக எடுத்துக் கொடுப்பதில் தனக்கு விசேஷ கௌரவமிருப்பதாகக் கருதிக்கொண்டாள். தனது கணவனின் செவியில் படும்படியாக "நீங்கள் இன்னும் இரண்டு நாளைக்குத்தான் இருப்பீர்களாம்; டாக்டர் சொன்னர்" என்று உபதேசம் செய்தாள். இது அங்கிருந்த பந்துக்களுக்கு சகிக்காமல், அதை என் அவர் காதில் படும்படி சொன்னாய் சீச்சீ! அப்பாலே போ என்று கடிந்து கொண்டனர். பார்வதி அதற்குப் பதிலாக "நான் வாழ்ந்த வாழ்வு போதும், இவருடன் இழவு கொடுத்துக் கஷ்டப்பட்டதும் போதும்" என்று திருவாய்மலர்ந்தாள். சூழ்ந்து நின்றவர்கள் வெறுத்தனர். ஜெகந்நாதரின் பிராணன் போகும் சமயத்தில் அவரைத் திண்ணையில் கொண்டுபோய்ப் படுக்கவைக்கும்படி பார்வதி உத்திரவு செய்தாள். பாதி பிராணனுடன் தத்தளித்த ஜெகந்நாதர் கண்விழித்துப் பார்த்துத் தாம் திண்ணையில் கிடத்தப்பட்டிருப்பதை யறிந்து திகைத்து இனி மரணம் நிச்சயமென உணர்ந்து கொண்டார். அன்றிரவு பிராணனும் பிரிந்தது. பார்வதி மிக்க ஆடம்பரமாய்ச் செலவுகளை நடத்திக் கௌரவம் பெற்றாள்.




ஃ

கணவன் போனதுடன் பார்வதியின் மதிப்பும் தொலைந்தது. புருஷனைப் பிடுங்கி வதைத்த பாவியென்று ஊரார் திருப்புகழ் பாடினர். மோகனா புஷ்பவதியாகி எழு வருடங்களாயின. விவாக விசாரம் தோன்றிற்று. ஐயோ! அவர் இருந்தால் நான் இப்படிக் கவலைப்படவேண்டியதில்லையே யென்று பார்வதி கலங்கினாள். கணவனின் நினைவு தோன்றிப் பிரலாபித்தாள். புருஷன் போனபின்பு புத்தி வந்து ஆவதென்ன? பத்மநாபன் பெரிய பணக்காரனாக ஊர்வந்து சேர்ந்தான். நல்ல சிவப்பும் அழகும் வாய்ந்து வைரக்கடுக்கன் மோதிரங்களுடன் பிரகாசித்தான். பார்வதிக்கு வெகு பிரியமாகப் பத்மநாபன் நடந்துகொண்டான். மோகனாவும் பத்மநாபனையே விரும்பினாள். கடைசியில் பிராப்தமிருந்தால் விடாதென்றபடி பத்மநாபனுக்கும் மோகனாவுக்கும் விவாகமாயிற்று.

ஃ

---

உன்னிலும் மிகு பலவான்களுக்கும், அதிக விவகாரம் பேசுகிறவர்களுக்கும் உன் வீட்டில் இடமோ, குடிக்கூலியோ விடாதே. நாளைக்கு அவர்கள் பகைவராகிவிடின் நீ எங்கு நேரும். நல்லொழுக்கத்தைத் தீர விசாரியாது வீட்டிற் சேர்ப்பது குடும்பத்தின் நற்பேரைக் கெடுக்கும். மானம், கற்பு இவற்றையும் சிதைத்துவிடும்.

விவாகத்திற்குப் பிறகு பத்மநாபன் புது 'துரை' யாகி விட்டான். மோகனுவிடம் பணம் பெற்று மோட்டார் ஒன்று வாங்கினுன். வேசிகளின் வீடே கதியானுன். மோகனுவின் ஆபரணங்களெல்லாம் வேசிகளின் வீட்டிற்குச் சென்றுவிட்டன. சொத்துகள் ஸர்வ நாசமாகத் தொடங்கின. மோகனுவின் பாக சொத்துகள்யாவும் தீர்ந்துபோயின. பார்வதிக்கு இது சகிக்காமல் பத்மநாபனைக் கண்டித்ததில், அவளுக்குக் கும்மா குத்துகளும் தண்டப்பிரயோகங்களும் கொடுத்து விட்டு, மோகனுவையும் கூந்தலைப் பிடித்துஉதைத்து அவளை யழைத்துக் கொண்டு பர்மாவுக்குப் போவதாக ஆரவாரித்தான். பார்வதி ஜெகந்நாதரை ஆட்டிவைத்த சமர்த்தெல்லாம் பத்மநாபனிடம் பலிக்கவில்லை. தன் பெருமை தன் கணவனேடு தொலைந்ததென்று கண்ணீர் விட்டாள். பத்மநாபனைக் கடன்காரர்கள் வாரண்டில் பிடித்துச் சிறையில் அடைத்தனர். மோகனு அலறினுள். ஜெகந்நாதரின்




இரும்புப் பெட்டியிலிருந்த நோட்டுகள் வெளியில் வந்தன. பார்வதி கடன்காரர்களுக்கு எழாயிரம் ரூபாய் கொடுத்து பத்மநாபனை வீட்டுக்கு வரச்செய்தாள். முன்னேர் வாழ்ந்த பூர்வீக வீட்டையும் விற்கும்படியாகி, வாடகைக்கு வேறு வீட்டில் குடிபுகுந்தனர்.

ஃ

பத்மனுபனே இப்போது ஸர்வாதிகாரி. ஐம்பதினுயிரம் ரூபாய் சொத்துக்களும் பத்மநாப தர்மப் பிரபுவால் கரைந்து மாயமாய் விட்டன. மோகனுவுக்குத் தினமும் அடிகளும் உதைகளும் வீழ்ந்தன. மோகனு புலம்பினுள். பார்வதி அவளைத் தேற்றினுள். பத்மநாமன் பெரிய குடிகாரனுக மாறி விட்டான். நித்தமும் வீட்டில் கலகமும் சண்டையுமாயின. பிரபல உத்தியோகஸ்தரது குடும்பத்தின் பிற்காலம் இவ்வளவு பரிதாபமாய் முடிந்தது. ஜெகந்நாதர் எவ்வளவோ சிரத்தையுடன் தேடிய சொத்துக்களை அவர் அனுபவிக்காமலே சாக, பத்மநாபன் அவற்றை மனம்போல் செலவிட்டு அனுபவிக்க அவதரித்திருந்தான். தேடுவது ஒருவர்! அனுபவிப்பது மற்ருருவர்! பார்வதி தனது குடும்ப சமர்த்து இவ்வாறு குலைந்து போயினதே! எனது அற்ப புத்தியால் கணவனுடன் வாழ்ந்த வாழ்வு போதும் என்றேனே! அவர் இருந்தால் இவ்விதம் ஆகுமா! பத்மனுபன் என் வீட்டை மிதிப்பானு என்று அங்கலாய்க்கிருள். தேடும் சொத்து நல்ல சொத்தானுல் தான் பிற்காலத்தில் நீடிக்கும் போலும்!

---

அதிகம் கற்றுவிட்டதன்மையால் கபடமும், நேசம்போற்காட்டும் பாசாங்கும் அதிகமாய் விடுகின்றன. கல்வி வேறு, நற்குணம் வேறு.

# ஸராமாவின் கதி.

[மாடர்ன் ரிவியூ பத்திரிகையில் 'அடிமை' என்று ஒரு கதை பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஸராமா ஒரு ஏழைபெண். கல்கத்தாவில் தன் பெற்றோருடன், பருவ மங்கையாகியும் விவாகமின்றி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு வயது இருபது இருக்கும். அக்ஷர ஞானமேயில்லை சேஷதார் என்றவாலிபன் அவளுக்குக் கல்வி கற்பித்து ஆங்கிலத்திலும் தேர்ச்சி யடையச்செய்து காலேஜில் அவளை வாசிக்கச்செய்தான். இருவருக்கும் பரஸ்பர நேசம் பெருகி வந்தவேளையில் சேஷதார் லண்டனுக்கு வாசிக்கச்சென்றான். அவனிடமிருந்து ஸராமாவுக்கு அன்புக்கடிதங்கள் வந்தவாறிருந்தன. சேஷதாரின் படிப்புக்காக அவன் தாய் தந்தையர் வீட்டையும் நகைகளையும் விற்றுக் கொடுத்துக் கனத்த கடனில் மூழ்கி விட்டனர். சேஷதாரின் தாய் வியாதிப் படுக்கையில் கிடந்தாள். சேஷதாரின் தந்தை தன் குமாரன் திரும்பி வந்ததும் தன் கடன்கள் தீரும்படியான இடத்தில் பெண் பார்த்து மணமுடிக்கக் கருதிப் பெண்ணையும் பேசிவிட்டான். இது தெரிந்த ஸராமாவின் தந்தை தன் குமாரியை இனி சேஷதார் மணக்கமுடியாதெனக் கண்டுகொண்டு வேறிடத்தில் மாப்பிள்ளையைத் தேடிப் பலாத்காரமாக ஸராமாவுக்கு விவாகம் நடத்தினான். கல்யாணத்திற்குப் பின் மணமகன் பூர்ண பைத்தியம் பிடித்தவனென்று தெரிந்தது. ஸராமா தனக்கு விவாக காலத்தில் அணிவித்த எண்ணாயிரம் ரூபாய் நகைகளையும் விற்று மனம்போல் செலவிட்டு விட்டாள். ஸராமாவின் தாய் நகைகளைப்பற்றிக் கேட்டதற்கு எண்ணாயிரம் ரூபாய் நகைகளிட்டுத் தன்னை ஒரு பைத்தியக்காரனுக்கு அடிமை மனைவியாக விலக்கு வாங்கியதால், தனக்கே பூரண சொந்தமான நகைகளைத் தன் இஷ்டப்படி செலவு செய்து கொண்டதாகக் கூறிவிட்டாள். இது நிற்க, சேஷதாரின் தாய் அந்த வாரம் தன் குமாரனுக்கு எழுதிய கடிதத்தில், தங்களை மிக்க ஹிம்ஸை செய்து வந்த கடன்காரன் தனக்கு முழுக்கடன் தொகையும் ஒரு ரகசியமான இடத்திலிருந்து வந்து விட்டதால் வீட்டுப் பத்திரத்தைத் திருப்பிக் கொடுப்பதாகக் கூறி அவ்விதமே தந்துவிட்டானென்றும், தொகை செலுத்தியவரைத் தெரிவிக்க மறுத்து விட்டதாயும், ஸராமா அக்கிரம விவாகத்தால் பாழ்பட்டனளென்றும் குறிப்பிட்டிருந்தாள். இத்துடன் கதை பூர்த்தி செய்யப்பட்டுளது. இதன் பிற்பகுதிக் கதையை நமது சொந்தக் கற்பனையின் வழியே இங்கு எழுதிச்சென்றிருக்கிறோம். ப-ர்.]

ஸராமாவைத் தாய்வீட்டிலிருந்தும் அழைத்துச் செல்லவந்த மாப்பிள்ளையின் பெற்றோர்கள் ஸராமா நிராபரணியாய் நிற்பதைக்கண்டு திகைத்தனர். நகைகளைப்பற்றிக் கேட்டதற்கு, ஸராமா தன்னை மோசமாய் முழுப்பைத்தியம் பிடித்துள்ளவருக்கு விவாகம் செய்வித்து விட்டது போல, நகைகளையும் பிறகு வஞ்சகமாய் அபகரிக்கலாமென்றெண்ணி, அவற்றை வேறிடத்தில் பத்திரப்படுத்திவிட்டதாகத் தெரிவித்தாள். உடனே பெரிய கலகம் உண்டாயிற்று. ஸராமாவின் தாய் தந்தையருக்கே அவள் செய்த காரியம் சம்மதமாயில்லை. மாப்பிள்ளையின் வீட்டார் வஞ்சகமாய் அவளை யழைத்துச் சென்று ஹிம்ஸிப்பதென்று தீர்மானித்துத் தங்களுடன் புறப்படும்படி கடுஞ்சினத்துடன் கூறினர். அதற்

கும் ஸராமா மறுத்துவிட்டு, தன் கணவனுக்குப் பைத்தியம் தீர்ந்து தன் மனைவி இன்னாளென்று அறிவதற்கான தெளிவு பிறந்ததும் தான் வரச் சித்தமாயிருப்பதாயும், தன் கணவனைப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச் சிகிச்சை செய்யும்படியும் கூறினாள். மாப்பிள்ளை வீட்டார் அவளைப் பலாத்காரமாகக் கொண்டு போக முயன்றனர். ஸராமா ஆங்கிலத்தில் தேர்ந்த பண்டிதையாதலின் சட்ட ஞானத்திலும் நிபுணத்துவம் கொண்டிருந்தாள். மாப்பிள்ளை வீட்டாரின் ஆரவாரத்துக்கு அவள் சற்றும் அஞ்சவில்லை. கல்கத்தா போலீஸ் கடிஷனருக்கு எல்லா சங்கதிகளையும் ஏற்கெனவே ஸராமா தெரிவித்து உதவி கோரியிருந்தபடியால், மறைவாகவே இரு போலீஸார் ஸராமாவின் வீட்டை வட்டமிட்டுக்கொண்டிருந்தனர்.

ஃ

**மா**ப்பிள்ளையின் தந்தையும், மற்றொரு உறவினனும் ஸராமாவைத் தூக்கிக்கொண்டு வெளியில் வந்து



மோட்டாரில் ஏற்ற முயல்கையில், அங்கு மறைந்திருந்த போலீஸார் வெளிப்பட்டுத் தூக்கிவந்தவர்களைப் பிடித்துத்தள்ளி ஸராமாவை விடுவித்து, உங்களுக்குள்ள நியாயத்தைக் கோர்ட்டில் வழக்கு தொடுத்துத் தெரிவித்துக் கொள்ளுங்கள் என்று கூறினர். மாப்பிள்ளையின் தந்தை போலீஸாருடன் தர்க்கம் பேச, அதற்குப் போலீஸார் தாங்கள் கமிஷனரின் உத்திரவுப்படி ஸராமாவுக்குப் பாதுகாப்பாகக் காத்து நிற்பதாகத் தெரிவித்தனர். மாப்பிள்ளையின் தந்தை மிகுந்த ஆக்கிரகத்துடனும் புறப்பட்டுச் சென்றார். உடனே ஸராமாவின் மீதும் அவள் பெற்றோர் மீதும் வழக்கு தொடர்ந்துவிட்டார்.

ஃ

**ஹை**கோர்ட்டில் விசாரணை ஆரம்பமாயிற்று. ஸராமா விசாரிக்கப்




பட்டபோது, முழுப் பைத்தியக்காரனாயுள்ளவனுக்கு சட்டப்படி விவாகமே செய்யக் கூடாதென்றும், தன்னை ஏமாற்றிப் பலாத்காரமாய் விவாகம் நடைபெற்றதாயும், தனக்கு சீதனமாகக் கொடுக்கப்பட்ட நகைகள் சட்டப்படித் தனக்கே உரியவையாதலின் அதைப்பற்றித் தன் கணவ

னின் பெற்ரோர் கேட்கச் சுதந்தரமில்லை யென்றும், தன் கணவன் பைத்தியம் தெளிந்து நல்லறிவு பெற்றுவரின் அவரிடம் ஆபரணங்களை ஒப்புவித்து அவருடன் வாழ்க்கை நடத்தச் சித்தமாயிருப்பதாயும், இப்போதைய நிலையில் தன் கணவனுக்குத் தன்னை மனைவி என்று அறிவதற்கே சுயஞானமில்லாததால் கணவனின் வீட்டிற்குத் தான் செல்லமுடியாதென்றும் தெரிவித்துக் கொண்டாள். சேஷதாரின் நண்பர்கள் ஸராமாவுக்காகச் சிறந்த பாரிஸ்டரை நியமித்திருந்தபடியால் அவர் ஸராமாவின் கக்ஷியை வெகு திறமையோடும் வாதித்தார். மாப்பிள்ளையின் தந்தை வஞ்சகமாய்த் தன் குமாரனின் பைத்தியத்தை மறைத்து ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கியது பெரிய அக்கிரமமென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு ஸராமாவின் பக்ஷமாகவே தீர்ப்பு செய்துவிட்டனர். மாப்பிள்ளையின் தந்தை மனம் நொந்து வீட்டிற்குச் சென்ருன்.

ஃ

மேற்கண்ட ஸம்பவங்கள் நடந்து இரண்டு வருஷங்களாயின. ஸராமா சேஷதாரின் தாயிடமே தன் காலத்தைக் கழித்துவந்தாள். சேஷதாரின் தாய் குளிர் ஜ்வரத்துடன் படுத்திருக்கையில் ஸராமா அவள்மேற் சாய்ந்து குளிரின் நடுக்கலுக்காக அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்தாள். அந்த சமயத்தில் வீட்டின் வாயிலில் ஒரு மோட்டார் வந்து நிற்க, அதினின்றும் சேஷதார் இறங்கி உட்சென்ருன். தன் தாயின் அருகே ஸராமா அன்புடன் வீற்றிருப்பதைக் கண்டு களித்து, தாயின் பாதங்களில் குனிந்து வணங்கினுன். ஸராமா அத்தியந்த பிரேம திருஷ்டியுடன் புன்னகைகூர்ந்த வதனத்தோடு சேஷதாரை உற்று நோக்கினுள். வெளியிற் சென்றிருந்த சேஷதாரின் தந்தை வீட்டிற்குள்வந்து தன் தனயனைத் தழுவிக்கொண்டு மகிழ்ந்தார். ஸராமாவுக்கும் சேஷதாருக்கும் நடந்த ஸம்பாஷணையிலிருந்து ஸராமாவே தன் ஆபரணங்களைப் பாங்கி




யில் வைத்துத் தொகைபெற்று சேஷதாரின் தந்தையினுடைய கடன்காரனுக்குச் செலுத்தியதாயும், தன்னை வெளியிடாதிருக்கும்படி அவனிடம் வாக்கு பெற்றுக்கொண்டதாயும், சேஷதாரின் நண்பர்கள் பாங்கிக்கு வட்டியைச் செலுத்தி வந்ததாயும் தெரிந்தது. சேஷதார் தனக்காக ஸராமா செய்த பெரும் உபகாரத்திற்கு அவளை விசேஷமாகக் கொண்டாடினுன்.

ஃ

ஸராமாவின் கணவனுக்கு அவனது தந்தை எத்தனையோ சிகிச்சைகள் செய்தும் பைத்தியம் தீரவில்லை. எவ்வளவோ ஜாக்கிரதையுடன் அவனை வைத்திருந்தும் ஒரு தினம் மாடியினின்றும் கீழ் குதித்ததில் மண்டையுடைந்து ஆஸ்பத்திரியில் ஒரு வாரம் கிடந்து பரலோகம் சேர்ந்தான். ஸராமா தன் கணவனின் பக்கத்திலேயே அவன் இறக்கும் பரி

யந்தம் பக்தியுடன் பணிவிடை புரிந்து நின்றாள். கடைசியில் கன்னிகா விதந்துவாக ஆயினள்.

ஃ

சேஷதார் கல்கத்தாவில் பாரிஸால் நகரத்தின் ஸப்கலெக்டராக நியமனம் செய்யப்பெற்றான். ஸாரமா பாங்கியில் வைத்திருந்த நகைகளை ஒரு வருஷத்திற்குப் பிறகு திருப்பி அவளிடம் சேர்ப்பித்தான். ஸராமா அந்த ஆபரணங்களுடன் தன் கணவனின் வீட்டிற்குச் சென்று தன் மாமனாரின் பாதங்களில் நமஸ்கரித்து நகைகளை ஒப்புக்கொள்ளுமாறு பிரார்த்தித்தாள். ஸராமாவின் மாமனார் தன் மருகியின் உத்தம குணத்திற்காக வியந்து தன் குமாரனை நினைத்துக்கொண்டு புலம்பி, அநியாயமாக ஸராமாவின் வாழ்க்கையைப் பாழ்படுத்திவிட்டேனே யென்று கதறினார். பிறகு அந்த ஆபரணங்களில் பிரியமானதை எடுத்துக் கொள்ளும்படி ஸராமாவை வேண்டியும், அவள் மறுத்துவிட்டு விடைபெற்றுச் சென்றாள்.

ஃ

சேஷதார் கல்கத்தாவிலேயே கலெக்டர் பதவிக்கு உயர்த்தப்பட்டான். அவன் தந்தைதான் விவாகத்திற்காக முன்பு பார்த்திருந்த பெண்ணை ஏற்பாடு செய்ய முயல, சேஷதார் அதற்கு ஒப்பவில்லை. ஸராமாவையே விதவா விவாகம் செய்துகொள்ளப் போவதாகத் தெரிவித்து விட்டான். தன் குமாரனை அதிகாரம் செய்து அடக்கியாளும் நிலையில் இப்போது தந்தையில்லையாயினும், விதவா விவாகத்திற்குப் பலமாக ஆக்ஷேபித்தார். சேஷதாரின் தாயோ இந்த விவாகத்திற்குப் பூரணமான சம்மதம் கொடுத்தாள். ஸராமாவின் மாமனாரும் இந்த விவாகத்தைத் தானே அருகிலிருந்து நடப்பிப்பதாயும், தான் ஏமாற்றிச்செய்த அக்கிரமத்திற்கு இது ஒரு பரிகாரமாயிருந்தால் தனக்கு மனோ சமாதானமாகுமென்றும் தெரிவித்து இவர்களுடன் கூடிக்கொண்டார். ஸராமாவின் தாய்க்கும் இந்த விவாகம் மிக்க திருப்தியாக இருந்தது. ஸராமாவின் தந்தை தான் இனி தன்புத்திரியின் மனதுக்கு விரோதமாக நிற்கப்போவதில்லை யென்றும், எவ்விதமேனும் தன் குமாரி மஞ்சள் குங்குமத்தோடும் விளங்கினால் அதுவே தனக்குப் பெரிய பாக்கியமென்றும் கூறுவதானான். இத்தனைபேர்களும் இணங்கிய பின்பு சேஷதாரின் தந்தையும் கடைசியாகச் சம்மதித்தார்.

ஃ

நல்ல சுபமுகூர்த்தத்தில் கல்கத்தா நகரத்தின் கலெக்டரான சேஷதாருக்கும், ஸ்ரீமதி ஸராமா தேவிக்கும் விவாகம் மங்களகரமாய் நிறைவேறிற்று. பல பிரமுகர்கள் விவாகத்திற்கு விஜயம்செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். ஸராமா தனது பழய மாமனாரைத் தன்னிடமே வைத்துக்கொண்டாள். அவரும் சேஷதாரைத் தன் குமாரன் போலவே கருதி மகிழ்வதானார். ஸராமா தன்னிடம் திருப்பித்தந்த ஆபரணங்களனைத்தையும் ஸராமாவுக்கேதந்து, அவளது கையாலிடப்பெற்ற அன்னத்தை யுண்டு வருகிறார். ஸராமாவும் சேஷதாரும் சுகமாக வாழ்ந்து வருகின்றனர். விதவா விவாகம் கூடாதெனில், மூடத் தந்தையின் பலாத்கார மணத்திற்குப் பலியான ஸராமாவின் கதி என்னவதோ? கன்னிகா விதந்துகளின் விசாரம் சொல்லற்பாற்றோ ?

---

குணமே பூஷணம். நல்ல நடத்தையோடு எல்லோரிடமும் சாந்த ஸ்வபாவமுள்ளவனாய் வசனிப்பது மனிதனுக்குக் கீர்த்தியைத் தரும்.

# சென்றமாதம்

**பூனு மகாநாடு :—**

பூனு மகாநாடு ஏமாறிய ஒருமகா நாடாகிவிட்டது. காங்கிரஸ் தலைவரின் முடிவான அறிக்கைக்கும் நாட்டில் மதிப்பேற்படவில்லை. காங்கிரஸையே அழித்துவிடக்கூடிய அறிக்கையாக அது இருப்பதை எவருமே ஒப்பவில்லை. சட்டசபையில் முன்போல் புகுந்து வாதாடுவதென்ற முடிவுக்குச் சிலர் வருகின்றனர். அந்த முடிவும் பல முறைகண்டு சலித்துப் போனதுதான். விட்டு விட்டதை மறுபடியும் தொட்டுக் கொள்ளுகிற சங்கதிதான். கிடைத்த மட்டில் சுதந்தர வாழ்வைப் பெற்றுக் கொண்டு, சரிசரி என்று காலத்தைக் கடத்தினால்தான் மனோ சமாதானம் தரும்.

ஃ

**லக்ஷ்மீகாந்தம் திருவிளையாடல்:-**

தப்பியோடிவிட்ட லக்ஷ்மீகாந்தம் ஒரு பெண்ணை வஞ்சித்துப் புது விவாகம் செய்துகொண்டு பின்னர் போலீஸார் வசமாகி விசாரணையிலிருப்பது தெரிந்ததே. லக்ஷ்மீகாந்தம் என்ற பெயரே பிரசித்தி பெற்றுவிட்டது. எவ்வளவோ தேர்ந்த படிப்பாளி. ஐகோர்ட்டு விசாரணையில் அவரது ஸமத்காரமான வாதம் பத்திரிகையில் பக்கம் பக்கங்களாகவந்தன. இவ்வளவு நன்கு தேர்ந்த இவரது இயற்கை வாசனை துன்மார்க்கமாகவே இருந்ததனால், எவ்வளவு படித்தும் நல்வழியில் திரும்புவதற்கின்றி கேடுகெட்ட கோணல் வழியிலேயே புத்தி புகுந்து கடைசியில் சிறைவாசமும் லபித்தது. லக்ஷ்மீகாந்தத்தைப் போலவே படித்துக் கெட்டவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்களின் காரியங்கள் லக்ஷ்மீகாந்தத்தைப்போல் வெளிவந்து பிரக்யாதி பெறாதது தொன்றே பேதம்!

ஃ

**தமிழ் அன்பர் மகாநாடு :—**

சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கத்தார் தமிழ் அன்பர் மகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு முயன்று விஸ்தாரமான அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளதை நாம் போற்றுகின்றோம். தமிழ் நூல்களின் விற்பனை வெகுவாகக் குறைந்து நூலாசிரியர்களின் காலம் மிக்க கடுமையாகி விட்டதாய் எங்கணும் கூக்குரல் மலிந்து நிற்கின்றது. இந்த சமயம் இந்த மகாநாடு கூடுவது தக்கதேயாகும். ஆயினும், மகாநாடு வெறும் கூச்சலிலும், நீண்ட பிரஸங்கங்களிலும், காகித அளவிலேயே நிற்கக்கூடிய தீர்மானங்களிலும் முடிவுறுவதாயின் பயன் என்னும்? பேசிவிட்டு முடிவதுடன் நில்லாது, செய்கையளவிலும் ஒன்றிரண்டு ஏற்பாடுகளையேனும் செய்வதற்கு இந்த மகா நாட்டைக் கூட்டுவோர் சிரத்தை கொள்வது உண்மையாகில், அப்போதுதான் இந்த மகாநாடு பயன் தரும். புஸ்தகாலயப் பிரசாரசங்கத்தின் அங்கத்தினராக அநேக பிரபலஸ்தர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. நீண்ட பெயர் ஜாப்தா சரிதான்; சாதித்த வேலைகள் என்னென்னவென்பதே கேள்வி. பெயரளவிலேனும் முன்வர இசைந்ததற்கு ஸந்தோஷிக்கிறோம்.

சென்குப்தா காலமானர் :—

வங்காட்டின் தவப்புதல்வர்களில் ஒருவரான ஸ்ரீமான் சென்குப்தா மரணதேவதையின் வசமானர். அவரது ஆத்மாவுக்கு இளைப்பாறுதல் கிடைத்து விட்டது. கவலைப்படாத வாழ்வான இறைவனின் திருவடி நீழலைச் சேர்ந்து விட்டார். அவரது தேசஹித சிந்தனைகள் அவரது காலத்தில் ஒரு உருக்கொண்டு திரண்டு அவர் அதைக் கண்டு களிக்கமுடியாது போயின. ஸர்க்காரின் பார்வையிலேயே ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில் வசித்து அங்கேயே கண்மூடினர். காங்கிரஸ் மகா சபைக்காகவும் தேசோன்னதத்திற்காகவும்தமது உடல்பொருள்ஆவி மூன்றையும் உதவினர். சென்னை மாகாணத்திலுள்ள சில முக்கியஸ்தர்களைப்போல், அவர் சுயநலஸ்தராயிருந்திருந்தால் தமது வக்கீல் வேலையில் எவ்வளவோ லக்ஷக்கணக்கான பணம் தேடி யிருக்கலாம். எவ்வளவோ சுகவாழ்விலும் இருந்திருக்கலாம். கங்காநதி பாயும் வங்க தேசத்தின் காற்று அவரை அப்படி சுயநலப்பிரியராய் வாழவிடவில்லை போலும்!

ஃ

கிருஷ்ணு புஷ்கரம் :—

சமீபத்தில் கும்பகோணத்தில் மகாமகம் கண்டோம். இப்பொழுது பெஜவாடாவில் கிருஷ்ணு புஷ்கரம் என்ற தீர்த்தோற்சவம் ஆகஸ்டு மாதம் 3-ம் தேதிமுதல் ஆரம்பாகி 18-ம் தேதி முடிவு பெறுகின்றது. இந்தப் புஷ்கரம் 12-வருஷங்கட்கு ஒரு முறை கொண்டாடப்படுவதாம். கிருஷ்ணு நதியில் அச்சமயம் எல்லா தேவர்களும் பிரஸன்னமாயிருப்பார்களென்றும், அந்த சமயம் நீராடுவோர் இகபர ஸாதகம் அடைவரென்றும் சொல்லப்படுகிறது. இதைத் தவிர, கும்பகோணம் மகாமகத்துக்குள்ள தனித்த ஒரு பெரிய கதா மஹாத்மியம்போல இந்தப் புஷ்கர உத்ஸவத்திற்கு ஒரு தீர்த்த மகத்துவக்கதை உண்டென்று காணவில்லை. அவ்வித கதா கற்பனு சக்தி தமிழ் நாட்டுக்கு மட்டுமே சொந்தம் போலும்!

ஃ

மகாத்மா கைதியானர் :—

ஆகஸ்டு மாதம் முதல் தேதி அதிகாலையில் 1-35-மணிக்கு நள்ளிரவில் மகாத்மாவையும், அவரது பத்தினியையும், இன்னும் 34-பேர்களையும் கைது செய்து விட்டனர். அதிகாரிகள் வந்த சமயம் மகாத்மா நித்திரையிலிருந்தார். பிறகு விழித்துக் கொண்டு அரைமணி நேரத்திற்குள் பகவத் பிரார்த்தனையுடன் தம்மை அதிகாரிகளிடம் ஒப்புக்கொடுத்து விட்டார். கைது செய்து கொண்டு போகப்படும்பொழுது சபர்மதி ஆச்ரமத்தின் வழியே மோட்டார் வரவும், மகாத்மா சற்று நிறுத்தும்படி செய்து, தமக்கு இதுகாறும் பூலோகத்தின் பெரிய சொத்தாயிருந்து ஏராளமான ஜனத்திரளுடன் கூடி விளங்கித் தற்போது நிர்மானுஷ்யமான காடு போலாகிவிட்ட சபர்மதி ஆச்சிரமத்தை சோகம் நிறைந்த நேத்திரங்களோடும் உற்றுநோக்கினர். அதன் பின்னர் மோட்டாரும் அவ்விடத்தை விட்டுச்சென்றது. யாவரும் சபர்மதி சிறையில் வைக்கப்பட்டனர். மகாத்மா மீண்டும் பழய எர்ரவாடா சிறைக்குச் சென்றூர். இம்முறை மகாத்மா தம்மை அரசாங்கத்தினர் கைது செய்வதற்கான வழிகளைத் தாமே உண்டாக்கிக் கொண்டார். அவர் ராஸ் யாத்திரையைத் தொடங்கி சட்டமறுப்பை ஆரம்பிக்க முயன்றதே கைதியானதற்குக் காரணமாயிற்று. மகாத்மா தமது

உத்தேச லக்ஷியத்தை இம்முறை வெளிப்படையாகத்தெரிவிக்கவில்லை. காங்கிரஸ் பெரும் தோல்வியடைந்து விட்டதில் மகாத்மாவின் மனம் தடுமாற்ற மடைந்து, காங்கிரஸையும் மூர்ச்சித்து விழச்செய்து விட்டுத் தம்மையும் சிறைவாசத்திற்கு ஆளாக்கிக் கொண்டார் போலும். இவ்வளவு துரிதமாக மகாத்மா சிறை செல்வாரென்று எவரும் நினைக்கவில்லை. இதற்குப் பிறகு மகாத்மா ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி காலை 9-மணிக்கு விடுவிக்கப்பட்டதும், பூனா நகர எல்லையை அவர் கடக்க லாகாதென உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும், அதை அவர் மீறி விடவே, மீண்டும் கைதியாகி விசாரணை நடைபெற்று ஒருவருஷ வெறுங்காவல் சிக்ஷையுடன் சிறை புகுந்ததுமான விவரங்களை வர்த்தமானப் பத்திரிகைகளில் காணலாம்.

---

## கல்வியில் மூன்று வகை.

---

ஒன்று சரீரத்திற்குப் பலத்தை யுண்டாக்கி வியாதி யணுகாவாறு காப்பாற்றுவது. இதற்காக சரீர முயற்சிகள் செய்து தேகத்திற்குத் தகுந்த வேலையைக் கொடுக்கவேண்டும். இரண்டாவது, நூல்களைக் கற்று, பகவான் நமக்குப் பாலித்துள்ள அறிவை விர்த்திசெய்து கொள்வதாம். கல்லாதவனுக்குப் புண்ய பாப பேதம் எப்படித் தெரியும்? இதர பிராணிகளை ஹிம்ஸிப்பது பிசகு என்றறிந்தவன் தயை யுள்ளவனாகி விருப்பான். அவனுக்குள்ள முகமலர்ச்சியும் மந்தஹாஸமும் யாருக்கு வரும்? பூர்வ ஜென்ம புண்ணிய விசேஷத்தால் படிப்பில் ஆஸக்தி உண்டாகவேண்டுமேயன்றி, நம்முடைய நிர்ப்பந்தத்தால் ஆசை உண்டாகாது. மூன்றாவது, தாம் கற்ற கல்வியைப் பிறருக்குப் போதித்துப் பயன் பெறச்செய்வது. சிலர் பண்டிதர்களாயிருந்தும் கோர கிருத்தியங்களைப் புரிவர். ஆதலின், நன்னடக்கையைக் கற்பிக்கும் படிப்பு அத்யாவசியம். மதகிரந்தங்களைக் கற்பது மட்டும் போதாது. ஸத் ஸகவாஸம் முக்கியம். ஸர்வ சக்தியுள்ள ஒரு தெய்வ மிருக்கிறதென்று உறுதியாய் நம்பி யோக்யர்களோடு நேசமாயிருந்தால், அவர்களின் பழக்கம் நலத்தைத் தரும். பாபசிந்தையையும், பாப கர்மத்தையும் தொலைத்தாலன்றி நற்கதி கிடைக்காது. தன்னாலாகக்கூடிய நன்மையைச் செய்வது உசிதமேயன்றி தீமையை யிழைப்பது அநுசிதம்.



# ஹாஸ்ய சஞ்சீவினி



நேசன் :—ஓ ! வந்தாயா ? வா. சிறைவாசம் எப்படியப்பா இருந்தது ? எதிர்ப்பட்டவரை யெல்லாம் கத்தியால் குத்திய திமிர் அடங்கிற்று ?

சிறைவாசி :—மூன்றுவேளை சாப்பாடு. புசிப்புக்குத் தகுந்த வேலை. திங்களன்று விடுமுறை நாளாகையால் அன்று பாட்டும் குதிப்பும் இருக்கிறது. குஷால்தான். இந்தத் தடவை களி போட்டார்கள். மற்றொரு தடவை போகும்போது சோறு வேண்டுமென்று கேட்பேன்.

ஃ

சேஷி :—குப்பியின் சங்கதி தெரியுமா ? பணத்தைப் புதைத்து வைத்தாளாம். அந்த இடத்தில் புருஷன் அவரைவிதை போடத் தோண்டிய போது அந்தப்பணம் அவருக்கு அகப்பட்டதாம். குப்பிக்கு அதைத் தன்னுடையதென்று சொல்லத் தைரியமில்லாமல் அழுகிறாள்.

சுப்பி :—அவள் ஒரு பைத்தியக்காரி. தபாலாபீஸ் சேவிங்க் பாங்கியில் ரகசியமாய் போட்டிருக்கலாமே !

ஃ

மனைவி :—அவர் அடிக்கடி இங்கு வருகிறாரே ? வரும்போதெல்லாம் பழங்கள் பக்ஷணங்கள் கொண்டு வருகிறாரே !

கணவன் :—அவருக்குத்தான் உன்னை முதலில் பேசியிருந்ததாம். அந்த நினைவோடு என்னைக் காண்பதுபோல் உன்னைப் பார்க்க வருகிறார் !

ஃ

குமாரன் :—அத்தையோடு வந்திருக்கிற பெண் மிகவும் அழகாயிருக்கிறாள். என்மேல் வெகு பிரியம்.

தாய் :—பிரியம் சரிதான், வேறு விதமாய் எண்ணி விடாதே. எனக்குப் பிறந்த அப்பெண்ணை இரண்டு வயதில் இரங்கூனுக்கு எடுத்துப் போன உன் அத்தை பத்து வருஷம் கழித்து உன் மாமாவுடன் இப்போது தான் வந்திருக்கிறாள். உனக்கு அவள் தங்கை.

ஃ

நாணு :—இங்கிலீஷ் பாஷையை நீச பாஷையென்று என் பழித்தார்கள் ?

வேணு :—இங்கிலீஷில் 'பாபம்' என்னும் பதத்திற்கு 'ஸின்' என்ற பிரதிபதம் இருக்கிறது. 'புண்ணியம்' என்னும் பதத்திற்குப் பிரதிபதம் ஆங்கிலத்தில் சரியாக இல்லாததால் தானும் !

ஃ

முத்து :—உன் குடையால் என் கண்ணைக் குத்திவிட்டாயே ?

குப்பு :—என் குடையால் நான் குத்தவில்லை. அது இரவல் குடையப்பா !

ஃ

ஜெயிலைக் காணவந்தவர் :— நீ இங்கு கைதியாக இருப்பதற்குக் காரணமென்ன ?

---

பெரிய மனிதர்களில் சிலருக்கு சாதாரண நிலையிலுள்ளவர்கள் கடிதம் வரைந்தால் பதில் கிடைப்பதேயில்லை. ஆனால், தடபுடலான அச்சிட்ட கடிதத்தில் வரைந்து மயக்கினே சீக்கிரத்தில் விடை கிடைக்கின்றது!

கைதி :—விருப்பமே காரணம். நான் ஒருவனது கடியாரத்தில் விருப்பங்கொண்டேன். அவன் என்னைச் சிறையில் அடைக்க விருப்பம்கொண்டான். நியாயாதிபதி என்னை இங்கே ஒரு வருஷம் வைக்க விருப்பமானுர்.

ஃ

உபாத்தியாயர் :—ஏன் நேரம் கழித்து வந்தாய் ?

மாணுக்கன் :—கடை வீதியில் ஒருவரை வாரண்டில் போலீஸார் பிடித்து விட்டார்கள். அதைப் பார்த்து நின்றேன்.

உபாத்தியாயர் :—ஏன் அதைப் பார்த்தாய் ?

மாணுக்கன் :—பிடிபட்டவர் உங்கள் தகப்பனுராக இருந்ததால்தான்.

ஃ

அவன் :—எப்படி அந்த ஸ்திரீ உனக்கு நேசமானுள்?

இவன் :-ஒரு நாள் என்னை அரையணு கேட்டுக் கெஞ்சினுள். நான் புன்னகையுடன் இரண்டணு தந்தேன். அது முதல் நட்பு தோன்றி விட்டது !

ஃ

தாய் :—உனக்கு லோகநாத முதலியாருடைய பெண்ணைப் பேசப் போகிறேன். அவர் பெரிய பணக்காரர்.

குமாரன் :—நானும் அப்பெண்ணை விரும்பித்தான் அங்கு வேலைக்காரன் போல் ஒருமாத மிருந்து உள் சங்கதிகளைத் தெரிந்துகொண்டேன். எனக்கு அந்த ஆபாஸ இடம் வேண்டாம்.

ஃ

ராமன் :—நீ என் ஹோட்டலுக்கு வருகிறுய்? வீட்டில் செய்து சாப்பிடுகிறது தானே ?

கிருஷ்ணன் :—எனக்குப் பிரியமானதை என் மனைவி செய்ய மாட்டாள். செய்தாலும் நான் அதிகம் புசிப்பதைச் சகிக்கமாட்டாள். அதனுல்தான்.

ஃ

சேஷி :-காமத்திற்குக் கண் இல்லையென்கிறுர்களே ? உண்மையா ?

போன்னு :—ஆம். ஆனுல் கண்ணுக்குமட்டும் காமம் வண்டி வண்டியாயுண்டு. ஃ

ஒருவன் பொருளை வைத்துக் கொண்டு இதனை யனுபவிக்கப் பிள்ளை யில்லையே யென்று துக்கிக்கிருன். பொருளுக்குப் பிள்ளையா ? அல்லது பிள்ளைக்குப் பொருளா ?

ஃ

அவர் :—நான் வெளியூருக்கு எவ்வளவு ரகசியமாகப் புறப்பட்டாலும் அதை எப்படியோ என் பந்துக்கள் அறிந்துகொண்டு என் வீட்டிற்கு வந்து பல நாளைக்கும் தங்கிப் பல செலவுகளை வைத்து விடுகிறுர்கள்.

இவர் :—உமது மனைவியே அந்தரங்கமாய்ச் சொல்லியனுப்பி அவர்களை வரச்செய்விக்கிற சங்கதியாயிருக்கலாம்.

ஃ

நண்பர் :—நான் ஒரு இலவச வாசகசாலையை நடத்துகிறேன். தங்களின் புஸ்தகத்தை இனுமாகத் தர வேண்டும். தங்கட்கும் பெரும்புகழ் உண்டு.

---

*தற்போது மாத ஸஞ்சிகைகளில் பரிசு விளம்பரங்கள் அதிகரித்து வருகின்றன. பரிசு கண்டவர் மகிழ, அதைப் பெருதார் ஏக்கமடைகின்றனர்.*

நூலாசிரியர் :—வாசகசாலைகளில் ஒரே புஸ்தகத்தை இருபது பேர் போல வாசித்துவிட்டுப் போய்விடுவதில், அந்த இருபது பேரும் தனித் தனியே புஸ்தகம் வாங்கக் கூடிய லாபம் நூலாசிரியருக்கு இல்லாமற் போய் விடுகிறது. இந்த நஷ்டத்தில் இனமாக வேறே தரவேண்டுமோ? புகழ் வந்து பசி—கடன்—தீருமா?

ஃ

வித்வான் தம்பி :—முதலியாரவர்களே! காலஞ்சென்ற எனது தமயனரைத் தாங்கள் அறிவீர்கள். அவர் மகா பண்டிதர். அவரது குடும்பத்திற்கு ஒரு நிதி சேகரிக்கப் புறப்பட்டிருக்கிறேன். தாங்கள் ஏதாவது உபகரிக்கவேண்டும்.

முதலியார் :—பணம் திரட்ட நல்ல வழி கண்டு பிடித்தீர்கள். தாங்களும் தங்கள் தமயனரும் ஊராரை வசியப்படுத்துவதில் அதி சமர்த்தர்கள். எனக்குத் தங்கள் தமயனர் 50-ரூபா தரவேண்டும். அதில் 30-ரூபா எடுத்துக்கொண்டு 20-ரூபாயைக் கொடுத்துவிடுங்கள்.

## நல் விஷயத்தில் பிடிவாதம்.

பிடிவாதம் செய்வது கூடாதாயினும், அதுவே உத்தம விஷயத்திலாயின் பரம பிரயோஜனத்தை விளைக்கின்றது. ஹாஸன் எனும் வக்கீல் ஒரு செஷன்ஸ் ஜட்ஜியின் முன்பாக ஒரு வழக்கைப்பற்றி வாதித்துக்கொண்டார். ஜட்ஜி திடீரென்று ரிகார்டுகளைக் கீழே வைத்து மௌனியாகவே, வக்கீல் தம்முடைய வாதம் முடியவில்லை யென்றும், அதை முற்றிலும் கேளாமல் நீதியதிபர் ரெகார்டுகளைக் கீழே வைத்தது பிசகென்றும் உரைத்தார். இதற்கு ஜட்ஜ் தாம் அவருடைய நியாய வாதத்தை முற்றிலும் உணர்ந்ததாய் மறுமொழி சொல்ல, வக்கீல் அவ்விதம் உணர்ந்திருக்க முடியாதென்று மறுத்தார். இவ்வாறு இரண்டு மூன்று தடவை தர்க்க முண்டானதால் வக்கீல் ஜட்ஜியை நோக்கி, "அப்படியானல் நான் சொன்ன விஷயங்களை நீங்கள் மறுபடியும் சொல்லுங்கள்" என, ஜட்ஜி பொறுமையுடன் முக்கால்மணி நேரத்தில் வக்கீலின் வாதங்களை யெல்லாம் எடுத்துக் கூறினர். அப்போதும் வக்கீல் விடவில்லை. சரிதான், இன்னும் நான் சொல்லவேண்டிய அம்சங்கள் பாக்கி யிருக்கின்றனவென்று விஷயங்களைப் பூரணமா யெடுத்துக்கூறிக் கடைசியில் தமது கக்ஷியை ஜெயித்துக்கொண்டார். வக்கீலின் பிடிவாதம் ஸமத்காரமான விநய பாஷிதங்களால் வெற்றி பெற்று விட்டது. எதிலும் மரியாதை வேண்டும்.

# "அமிர்த குணபோதினி"

## ஸ்ரீமுக ஸூலத்திய ஆவணி மாத பஞ்சாங்கம்.

| யோகம் | இங் | தமிழ் | வார | திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை. |
|---|---|---|---|---|
| | | | | [மாண்டு. |
| ஸி | 16 | 1 | புத | ஏகா-58-22, மிரு-27-7, ஸிம்மரவி 4-41, கொல்ல |
| ம-அ | 17 | 2 | வியா | துவா-60-0, ஆரு-34-6, திருதினஸ்பிருக். |
| ஸி உ | 18 | (5—8) 3 | வெ | துவா-3-35, புந-40-18, பிரதோஷம். |
| ஸி-ம | 19 | 4 | சனி | திர-7-53, பூச-45-31, சிவராத்திரி. |
| ஸி-ம | 20 | 5 | ஞா | சதி-11-4, அக்னி ஆயி-49-35, ஸாவர்ணிக மன்வாதி |
| ம-ஸி | 21 | 6 | திங் | ● 13-4, மக-52-31, சூரியக்ரஹணம், சோம அமா |
| ஸி-அ | 22 | ஸிம்மம் 7 | செ | பிர-13-51, பூர-54-15, பாத்திரபத சுத்தம். |
| அ-ம | 23 | 8 | புத | துவி-13-26, உத்-54-50, ஷோடச கௌரீவிரதம். |
| ஸி | 24 | 9 | வியா | திரி-11-56, ஹஸ்-54-21, விநாயக சதுர்த்தி. |
| ஸி | 25 | 10 | வெ | சது-9-26, சித்-52-58, ருஷி பஞ்சமி. |
| அ-ஸி | 26 | 11 | சனி | பஞ்-6-1, ஸ்வா-50-46, சம்பா ஷஷ்டி. |
| உ-ம | 27 | 12 | ஞா | ஷஷ்-1-49, உப-55-6, விசா-47-54, |
| ஸி | 28 | 13 | திங் | அஷ்-51-24, அநு-44-24, ஜயேஷ்டாஷ்டமி. |
| உ-அ | 29 | 14 | செ | நவ-45-27, கேட்-40-27. |
| ம-அ | 30 | 15 | புத | தச-39-16, மூல-36-15, க்ஷீரவிரதம், ஆவணிமூலம் |
| ஸி | 31 | 16 | வியா | ஏகா-33-2, பூரா-31-57, பரிவர்த்தன ஏகாதசி. |
| ஸி-ம | 1 | 17 | வெ | துவா-26-53, உரா-27-45, பிரதோஷம் வாமன ஜயந்தி. |
| ஸி | 2 | 18 | சனி | திர-21-4, ஶ்ரூவ 23-54, திதி துவயம், ஓணம். |
| ம-ஸி | செப்டம்பர் 3 | 19 | ஞா | சதி-15-51, அவி-20-38, அனந்த விரதம். |
| ஸி | 4 | 20 | திங் | ○ 11-28, சத-18-15. |
| ம-அ | 5 | 21 | செ | பிர-8-9, பூட்-16-58, மஹாலய மாரம்பம். |
| ஸி-உ | 6 | 22 | புத | துவி-6-14, உட்-17-3. |
| ஸி-அ | 7 | 23 | வியா | திரி-5-49, ரே-18-39. |
| அ-ஸி | 8 | 24 | வெ | சது-7-3, அசு-21-52. |
| ஸி-அ | 9 | 25 | சனி | பஞ்-9-54, பர-26-34, சந்திரஷஷ்டி. |
| ஸி | 10 | 26 | ஞா | ஷஷ்-14-11, கிரு-32-31, |
| அ | 11 | 27 | திங் | ஸப்-19-30, ரோ-39-25, அதிதி. |
| ஸி-அ | 12 | 28 | செ | அஷ்-25-25, மிரு-46-47, ஸ்ரீஜயந்தி, கரிநாள். |
| ஸி | 13 | 29 | புத | நவ-31-24, ஆரு-54-3, அவிதவ நவமி. |
| அ | 14 | 30 | வியா | தச-36-52, புந-60-0. |
| ஸி-உ | 15 | 31 | வெ | ஏகா-41-21, புந-0-36, ஸர்வைகாதசி. |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| ரா | 15உ-க்கு ராசி | | ரவி |
| சனி | | | 4 கேது |
| | | குஜ | குரு சுக் |

"அமிர்த குணபோதினி" பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.